விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email.Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 07 வெள்ளிக்கிழமை (23.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 339

## ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தினூடாக

# மக்களை சீர்குலைக்கும் செயலையே செய்கிறார்!

### சமந்தா பவர் குற்றச்சாட்டு



**(அமெரிக்கா) அதிகாரத்தின் ஊடாக நாட்டு மக்களின் நலனை சீர்குலைக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன செயற்பட்டு வருகின்றார் என ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூது வர் சமந்தா பவர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.**

நாட்டில் தொடர்ந்து வருகின்ற அரசியல் குழப்பநிலை உள்நாட்டில் மாத்திரமின்றி சர்வதேச மட்டத்திலும் பல்வேறு எதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே சமந்தா பவர் இவ்வாறு கூறியுள்ளார். மேலும் ஜனாதிபதி தொடர்ந்தும் நாட்டின் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றார் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.(3)

---

வடமராட்சி பகுதியில்

### கொள்ளைகளுடன் தொடர்புபட்ட நபர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

வடமராட்சி பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். வடமராட்சி பகுதிகளில் அண்மைய தினங்களாக 23

## பிரதமராக ரணில் இருப்பதே அரசியல் நெருக்கடிக்கு தீர்வு

### மனித உரிமைகள் பேரவையில் எடுத்துரைப்பு

(ஜெனிவா)

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக கொண்ட அரசாங்கத்தை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதே நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு என ஜெனிவாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நேற்று வியாழக்கிழமை அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் விவாதம் ஒன்று நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை பாதுகாப்பதில் இலங்கை பாராளுமன்ற வகிபாகம் எனும் தலைப்பில் நேற்று ஆரம்பமான மாநாட்டில் மாற்றுக் கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நிறை 23

---

### புதிய நியமனங்கள் வழங்க வேண்டாம்
- ஜனாதிபதி செயலகம்

(கொழும்பு)

மறு அறிவித்தல் வரும் வரை அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு புதிய நியமனங்களை வழங்க வேண்டாம் என ஜனாதிபதி செயலகம் அனைத்து அமைச்சிற்கும் அறிவித்துள்ளது. 24

### தெரிவுக்குழுவுக்கு த.தே.கூ சார்பில் இருவர் தெரிவு

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கான இரண்டு பேரின் பெயர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிந்துள்ளது.

அந்தவகையில் குறித்த தெரிவு குழுவில் பாராளுமன்ற 24

### வீதியால் சென்ற நபரொருவர் மீது வாள்வெட்டு

வடமராட்சியில் சம்பவம்

(கரணவாய்)

வீதியால் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டு குழுவினரின் தாக்குதலுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத் 23

### ஜனாதிபதி கொலைச்சதி இரகசியம் விரைவில் வெளியிடப்படும் - அரசு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பான விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதோடு குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய பல இரகசிய தகவல்கள் இன்னும் சில 23

---

## அரசியல் சர்ச்சைக்கு மத்தியில் இன்று கூடுகிறது பாராளுமன்று

கட்சித் தலைவர் கூட்டத்துக்கும் அழைப்பு

(கொழும்பு)

இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு மத்தியில், பாராளுமன்றம் மீண்டும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கூடவுள்ளது.

இந்நிலையில், இன்றைய அமர்வு நேரத்தின்போது பாராளுமன்ற வளாகம் மற்றும் கட்டடத் தொகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் கடந்த 14,15 மற்றும் 16ஆம் திகதிகளில் ஆளும் எதிர்த்தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலையடுத்தே, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தவகையில், இன்றைய அமர்வின்போது பாராளு 23

### மோட்டார் சைக்கிள் விபத்தின் போது படுகாயமடைந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் 3 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மருதங்கேணி வடக்கு தாளையடியை சேர்ந்த ஸ்ரீதரன் நிகேதன் (வயது 18) என்ற இளைஞரே மேற்படி உயிரிழந்தவராவார். 24

## பொலிஸ் மற்றும் இராணுவம் மீது யாழ் நகரில் தாக்குதல்

### பிக்கு ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர்ப்பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்ட பிக்கு ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

சாட்டி படை முகாமில் உள்ள கடற்படையினர் இருவர் நேற்று அதிகாலை யாழ் நகர் பகுதியில் உள்ள கடைக்கு வந்துள்ளார். அப்போது அந்த பகுதியில் நின்றிருந்த பிக்கு ஒருவர் சிறிய கத்தி ஒன்றினால் கடற்படை சிப்பாயின் முகத்தில் கீறி காயப்படுத்தியுள்ளார்.

குறித்த சம்பவம் தொட 24

---

### சபை கலைப்பை இரத்து செய்க!

ஜனாதிபதியிடம் எஸ்.பி. கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான தீர்மானத்தை இரத்து செய்யுமாறு பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையொன்று 23

## பொன்னாலை பாலத்தில் விபத்து; பூசகர் ஒருவர் பரிதாபமாக பலி



(யாழ்ப்பாணம்)

பொன்னாலைப் பாலத்தில் நேற்று மாலை தனியார் பேருந்து, மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டி என்பன ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற விபத்தொன்றில் மோட்டார்சைக்கிளில் சென்ற அர்ச்சகர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் துவிச்சக்கரவண்டியில் சென்ற கடற்தொழிலாளி காயமடைந்துள்ளார்

காரைநகரில் உள்ள ஆலயம் ஒன்றில் பூசை செய்துவிட்டு பொன்னாலை பாலத்தால் மோட்டார் சைக்கிளில் திரும்பிக் 23

## த.தே.கூட்டமைப்பு, ஜே.வி.பியின் ஆதரவு எமக்கு தேவையில்லை

### அமைச்சரவை .பேச்சாளர் சமரசிங்க

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தமக்கே பெரும்பான்மையுள்ளது. இந்நிலையில் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி ஆதரவளிப்பதையெல்லாம் இதற்கு அப்பாற்பட்ட விடயம் என மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 101 உறுப்பினர்கள் மட்டும் தான் இருக்கிறார்கள். எமக்கு 103 உறுப்பினர்களே இருக்கி 23

# இருபத்து மூன்றாம் ஆண்டு
# நினைவஞ்சலி



மறைவு
23
-
11
-
1995



தோற்றம்:03.11.1941

**அமரர் கனகசபை சண்முகசுந்தரம்**

(ஸ்தாபகர் - சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)

தோற்றம்:18.08.1983

**அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன்**

(மாணவன் - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)

விருட்சமாய் நிழல் தந்து வாழ்ந்து மறைந்து
இருபத்துமூன் றாண்டுகள் உருண்டு முடிந்தும்
உருக்கமுடன் நாமின்று உங்களை நினைந்து
பொறுமையாய் புனிதமாய் பூசித்துத் துதிக்கின்றோம்

ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(6532)

# அலரிமாளிகையை முற்றுகையிடுவோம்
## ஐ.தே.க எச்சரிக்கை

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தையும் ஜனாதிபதி செயலகத்தையும் முற்றுகையிடுவோம் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் அலரிமாளிகையில் நேற்றைய தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி, அதிகாரம் என்ற போர்வையில் ஜனநாயகத்தை தொடர்ந்தும் மூடிமறைக்க முயற்சித்தால் எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதியின் இல்லம் மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றை முற்றுகையிடுவோம்.

தொடர்ந்தும் ஜனநாயக விரோதமாக சர்வாதிகார அடிப்படையில் ஜனாதிபதி செயற்பட்டால் ஜனநாயகத்தைநேசிக்கும் பாரியளவிலான மக்கள் கூட்டமொன்றை கொண்டு வந்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண நாம் தயார் என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (3)

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222
உரும்பிராய்.
(6530)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு தரிந தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(4463)

**காயத்திரி திருமாங்கல்ய சேவை**

திருமணம் பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222
உரும்பிராய்.
(6530)


# விவசாய வரியை அகற்ற நடவடிக்கை - மகிந்த அறிவிப்பு

விவசாய நடவடிக்கைகளின் மூலம் கிடைகின்ற வருமானங்களுக்கான வரியை நீக்க இந்த வாரத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெலியத்த பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அரசாங்கம் பொறுப்பேற்கப்படுகின்ற போது, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்தன. அனைத்து மட்டத்திலும் வரி அறவிடப்பட்டது. அவற்றுக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயத்திற்கு முக்கிய இடமளித்து அவற்றுக்கான வரிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த வாரம் முதல்



அதற்கான பணிகள் இடம்பெறும். அத்துடன், வரிகளுக்கு ஐந்து வருட கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

மேலும், கடந்த அரசாங்கத்திலும் பார்க்க சிறந்த பொருளாதார நிலையில் தற்போது நாடு இருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (3)

# கண்ணீர் அஞ்சலி



(C-4486)

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி **தயாளினி சுரேஸ்குமார் அவர்களின்** அன்புத் தாயார்

**அமரர் விஜயலட்சுமி அம்பலவாணர்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

**ஆசிரியர் கழகம்**

*யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்.*

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
07
-
04
-
1950



மறைவு
24
-
10
-
2018

**அமரர் கனகரத்தினம் சண்முகநாதன் MJf,JP**

(*Lion Shan* லயன் சண்)

(உரிமையாளர் - *Jeya sunjan Construction*)

நாளை 24.11.2018 சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நந்தவனம்"
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்: மனைவி (நந்தா)
மகன் (தஞ்சயன்)
077 722 3219

(6533)

## "ஒரு மாதத்தில் 5 முறை கட்சி தாவிய வசந்த சேனநாயக்க"

# மக்களை மடையர்கள் என நினைத்து செயற்படுவோரை அடுத்த தேர்தலில் வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

## "மார்ச் 12 இயக்கம்" - ரோஹண ஹெட்டியாராச்சி காட்டம்



(கொழும்பு)

மக்களை மடையர்கள் என நினைத்துக் கொண்டு செயற்படும் அரசியல்வாதிகளை அடுத்த தேர்தலில் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனவும் அதற்காக மக்களை அறிவுறுத்துவதற்கு "மார்ச் 12 இயக்கம்" திட்டமிட்டுள்ளதாகவும் அவ்வமைப்பின் ஏற்பாட்டாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடி அரசியல் நிலைமையைப் பயன்படுத்தி தமது சொந்த சுயநலனைக் கருத்தில் கொண்டு கட்சி தாவுபவர்களை மக்கள் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க ஒரு மாதத்துக்குள் ஐந்து தடவைகள் கட்சி மாறியுள்ளார். அத்துடன், வடிவேல் சுரேஷ் 3 தடவைகள் கட்சி தாவியுள்ளார்.

இதேபோன்று, இன்னும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளில் ஆசை வைத்து தமக்கு வாக்களித்த மக்களை மறந்தும் ஏமாற்றியும் செயற்பட்டு வருகின்றனர். இவர்களின் உண்மையான உருவத்தை மக்களுக்கு விளக்குவது தமது இயக்கத்தின் எதிர்கால நடவடிக்கையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செலவீனங்களை தடுத்து நிறுத்தும் அதிகாரம் ஐ.தே.கவுக்கு இல்லை

## ஜோன் செனவிரத்ன எதிர்ப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சிக்கு பிரதமருடைய செயலாளரின் செலவீனங்களை தடுத்து நிறுத்துவதற்கு அதிகாரம் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"நாடாளுமன்றத்தில் கடந்த வாரங்களில் இடம்பெற்ற சர்ச்சைகள், இன்று நாட்டில் பாரிய விவாதப் பொருளாக மாற்றமடைந்துள்ளது. கடந்த 26 ஆம் திகதி, நாட்டின் புதிய பிரதமராக மகிந்த் ராஜபக்ஷ ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டார்.

பெரும்பான்மையான மக்கள், நாட்டின் பிரதமரை மாற்றியாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த காரணத்தினாலேயே ஜனாதிபதி இந்த முடிவினை எடுத்தார்.

எனவே, இவற்றை நாம் சட்டவிரோதமானது எனக் கூறிவிட முடியாது. நாடு தற்போது பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. கடன் சுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அபிவிருத்திகள் முற்றாக நிறுத்தப் பட்டுள்ளன.

விவசாயிகளுக்கான சலுகைகள் நிறுத்தப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தின் பிரகாரமே ஜனாதிபதி புதிய அரசாங்கத்தை ஸ்தாபித்தார்.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதியின் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி, எதிர்த்தரப்பினரால் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டதாலேயே நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.


அதேவேளை எதிர்க்கட்சியாக இருக்கும் ஐ.தே.கவுக்கு பிரதமருடைய செயலாளரின் செலவீனங்களை தடுத்து நிறுத்துவதற்கான அடையாள பிரேரணையை கொண்டு வர முடியாது.

இவ்வாறு பிரேரணைகள் கொண்டுவரப்படும் போதே நாம், இப்போதைய நிலையில் இவற்றை கொண்டு வர வேண்டாம் என அவர்களுக்கு அறிவித்தோம்.

இது தற்போதைய அரசியல் நிலைமையில் மேலும் சர்ச்சைகளை ஏற்படுத்தும் என நாம் எச்சரித்தோம். எனினும், இவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காது அவர்கள் செயற்பட்டதாலேயே நாடாளுமன்றில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது" என மேலும் தெரிவித்தார். (இ-7)

## எந்தவித அதிகாரமும் இல்லாதவர்

# "பிரதமர் என எண்ணி கருத்துக்களை வெளியிடுகிறார் ரணில்" -செஹான்



(கொழும்பு)

2020 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் எனக் குறிப்பிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு எவ்வித அரசியல் அதிகாரமும் தற்போது இல்லை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க, ரணில் விக்கிரமசிங்க தான்தான் இன்னும் பிரதமர் என்ற நினைப்பில் கருத்துக்களை வெளியிடுகின்றார் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி மற்றும் தற்போதைய பிரதமரும் வெகு விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக தெரிவித்துள்ளனர்.

இன்று 06 மாகாண சபைகள் பதவிக் காலம் இழந்து மக்கள் பிரதிநிதிகள் இன்றி செயற்படுகின்றன.

இதற்கு ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளே பொறுப்புக் கூற வேண்டும்.

இந்த மூன்று தரப்பினரும் அடுத்தமுறை அரசியலுக்குள் பிரவேசிப்பது சந்தேகத்திற்குரிய விடயம். ஆகவே அடுத்த வருடம் முதற்காலாண்டில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்துவதே கட்டாயமானதாகும் எனவும் செஹான் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியின் சதி நடவடிக்கை ஒரு புற்றுநோயாக மாறியுள்ளது

## பேரா.சரத் விஜேசூரிய விசனம்



(கொழும்பு)

ஜனாதிபதியால் கடந்த 26 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட சதி நடவடிக்கை இன்று வரையில் ஒரு புற்றுநோய் போன்று ஆபத்தான நிலைக்கு வந்துள்ளதாக நீதியான சமூகத்துக்கான தேசிய வேலைத்திட்டத்தின் ஏற்பாட்டாளர் பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தையும் அரசியல் யாப்பையும் பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமாகிய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் யாப்பை குப்பையில் போட்டுவிட்டு தவறான ஒரு ஆட்சியை கொண்டு செல்ல ஜனாதிபதி எடுக்கும் பிரயத்தனத்துக்கு பொது மக்கள் அனைவரும் பாதையில் இறங்கி தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வெலிக்கடை சிறைப் படுகொலை விவகாரத்தில் விடுவிக்கப்பட்டவருக்கு மீண்டும் பொலிஸ் பதவி!

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலை விவகாரத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். பொலிஸ் தாபன கோட்பாடுகளின் பிரகாரம், பொலிஸ்மா அதிபரால் அவர் பழைய பதவிநிலைக்கே அமர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். நேற்று முன்தினம் புதன்கிழமை அமுலுக்கு வரும் வகையில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் 27 கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மற்றும் மகசீன் சிறைச்சாலையின் முன்னாள் கண்காணிப்பாளர் எமில் ரஞ்சன் ஆகியோர் கடந்த மார்ச் மாதம் கைதுசெய்யப்பட்டனர்.

தாம் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நியோமல் ரங்கஜீவ மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். குறித்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், கடந்த செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி நியோமல் ரங்கஜீவவை பிணையில் விடுவித்தது.

இதேவேளை, இவருடன் கைது செய்யப்பட்ட மகசீன் சிறைச்சாலையின் முன்னாள் கண்காணிப்பாளர் எமில் ரஞ்சன் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்காவில் பெண்கள் இராச்சியம்

அமெரிக்க நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அனைவருக்கும் தெரியும். ஆனால், அமெரிக்க நாடாளுமன்ற வரலாற்றில் முதன்முறையாக அதிகளவில் பெண்கள் தேர்வான புதிய சாதனையை அறிவீர்களா? அதுவும் எப்படி? கல்விக் கடனையே கட்டி முடிக்காத சாமானிய இளம் பெண் தொடங்கி அமெரிக்கப் பூர்வக்குடிகள், முஸ்லிம்கள், மாற்றுப் பாலினத்தவர் என்று பலதரப்பட்ட பெண்கள் வெற்றி வாகைசூடி, அமெ ரிக்க ஜனநாயகத்துக்குக் கதம்ப மாலையை அணிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்தவர்களின் நம்பிக்கையின் அடையாள மாகக் கருதப்படும் சுதந்திரதேவிக்குக் கிடைத்த உண்மையான அங்கீகாரம் இது!

அமெரிக்க நாடாளுமன்றத்தில் 435 இடங்கள் கொண்ட 'பிரதிநிதிகள் சபை' எனப்படும் கீழ் அவைக்கும், 100 இடங்கள் கொண்ட 'செனட் சபை'யின் 35 இடங்களுக்கும் கடந்த நவம்பர் 6 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில், 123 பெண்கள் அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு முதல் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒன்பது பேருக்கு ஆளுநர் வாய்ப்பும் கிடைக்கவிருக்கிறது. வெற்றிபெற்றவர்களில் பெரும்பாலானோர், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

1992 நாடாளுமன்றத் தேர்தலில், 24 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதே இதற்கு முன்பாக அதிக எண்ணிக்கையாக இருந்தது.

அப்போது, அதையே பெரும் சாதனையாகக் கருதி, அந்த ஆண்டை 'பெண்களுக்கான ஆண்டு' என்று பெயர் சூட்டி பெருமைப்படுத்தியது, அமெரிக்க அரசு.

தற்போதைய தேர்தலில் அதைவிடப் பல மடங்கு அதிகமாகப் பெண்கள் தேர்வுசெய்யப்பட்டது அமெரிக்க பெண்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரமாகப் பார்க்கப்படுகிறது.

அதிலும் அமெரிக்கப் பூர்வகுடிகள், முஸ்லிம்கள், ஆப்பிரிக்க - அமெரிக்கப் பெண்கள், கொரிய - அமெரிக்கப் பெண்கள், மாறுபட்ட பாலினத்தவர்கள்... என்று பலதரப்பட்ட பெண்கள் தடைகளைத் தகர்த்தெறிந்து... கருத்துக் கணிப்புகளைத் தூள்தூளாக்கி இந்த மாபெரும் சாதனையைப் படைத்துள்ளனர்.

இதில் பலரும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். ரஷீதா லாயிஃப், இல்ஹான் உமர் இருவரும் அமெரிக்க நாடாளுமன்றத்தில் முதல்முறையாக நுழையும் முஸ்லிம் பெண் உறுப்பினர்கள்.

டெப் ஹாலண்ட்ஸ், ஷாரிஸ் டேவிட்ஸ் அமெரிக்கப் பூர்வகுடிப் பெண்கள். வெரோனிகா எஸ்கோபர், சில்வியா கார்சியன் இருவரும் ஹிஸ்பேனியர்கள்.

அலெக்சான்ட்ரியா ஒகாசியோ கோர்டெஸ் இதுவரை காங்கிரஸுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட பெண் உறுப்பினர்களிலேயே இளம் உறுப்பினர்.

'29 வயதான அலெக்ஸா ன்ட்ரியா, தனது கல்விக் கடன்களை இன்னும் செலுத்தி வருகிறார். ஓர் ஆண்டுக்கு முன் குடும்ப வறுமையைப் போக்குவதற்காக மதுபானசாலையில் பணிபுரிந்துள்ளார்.

சாமானியப் பெண்களுக்கான அரசியல் முன்னோடி அவர்' என அமெரிக்க ஊடகங்கள் அலெக்ஸான்ட்ரியாவைக் கொண்டாடுகின்றன.



குடும்பத்தினருடன் இல்ஹான் உமர்

'வோஷிங்டனில் வாடகைக்கு வீடு பிடித்துத் தங்கும் அளவுக்குக் என்னிடம் வசதி இல்லை. எனது முதல் மாதச் சம்பளத்துக்காகக் காத்திருக்கிறேன்' என்று கூறியிருக்கிறார் அலெக்ஸாண்ட்ரியா.

'சோமாலியாவில் பிறந்தவர், இல்ஹான். உள்நாட்டுக் கலவரத்தால் குழந்தைப் பருவத்தை கென்ய அகதிகள் முகாமில் கழித்தவர் இவர்.

அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற உறுப்பினர்களில் இல்ஹானும் ஒருவர்.

சோமாலியர்கள் அதிகம் குடி பெயர்ந்த மின்னியாபொலிஸில் வசிக்கும் இல்ஹான், அந்தப் பகுதியில் சுகாதாரப் பாதுகாப்பு, துப்பாக்கிக்குக் கட்டுப்பாடு விதிப்பது, புலம்பெயர்ந்தோர் குடியுரிமை ஆகியவற்றுக்காகக் குரல் கொடுத்து வருபவர்.

பாலஸ்தீன - அமெரிக்கரான ரஷீதா லாயிஃப், 'அனைவருக்கும் மருத்துவம்' என்ற திட்டத்துக்கு உருவம் கொடுத்தவர். யாங் கிம், கொரிய - அமெரிக்கர். லியுபா க்ரீஷென் ஷெர்லி, தனக்கு வழங்கப்பட்ட தேர்தல் நிதியை, பிரசாரத்துக்குச் செலவழிக்காமல் குழந்தைகளின் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தினார்.

இப்படி பல ஆச்சர்யங்கள். வெற்றி பெற்ற பெண்களில் பலர் உள்ளூரில் பெரும் புள்ளிகளை மண்ணைக் கௌவச் செய்திருப்பது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்!


ஹிலாரி கிளிண்டனின் தோல்விக்குப் பிறகு, அமெரிக்க அரசியலில் பெரும்பாலான பெண்கள் அதிருப்தியான நிலைப்பாட்டையே கொண்டிருந்தார்கள்.

பாலியல் விவகாரங்களில் விமர்சனத்துக்குள்ளானவர், பெண்களுக்கு எதிரானவர் என்கிற ட்ரம்ப் மீதான பிம்பத்தால் அமெரிக்கப் பெண்கள் பலரும் அவரைத் தங்களின் எதிரியாகவே பாவித்தனர்.

ஜனாதிபதி பதவியேற்ற மறுநாளே இலட்சக்கணக்கான பெண்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தினர். அன்று முதலே ஆளும் கட்சிக்கு எதிரான போராட்டங்களைப் பெண்கள் தொடர்கிறார்கள்.

அப்படியான தொடர் போராட்டங்களே இந்தப் பெண்களின் வெற்றிக்கு வித்திட்டுள்ளன. வீதிகளில் போராடிய பெண்கள் இனி நாடாளுமன்றத்திலும் ட்ரம்ப்புக்கு எதிராகப் போராடுவார்கள்!


## மரண அறிவித்தல்



### தம்பையா இரத்தினசபாபதி

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் (சிங்கராஜ வீதி, கல்வியங்காடு) வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இரத்தினசபாபதி நேற்று (22.11.2018) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- சிவக்கொழுந்து தம்பதியினரின் மூத்தமகனும், செல்வராணி அவர்களின் அன்புக்கணவரும், அருளானந்தம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், மங்கையற்கரசி (கனடா), சிவசுப்ரமணியம் (லண்டன்), இராசதுரை, காலஞ்சென்றவர்களான மல்லிகா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகராஜா, யோகராஜா,தேவராஜா காலஞ்சென்றவர்களான புஸ்பராஜமணி, முத்துமணி, சற்குணராஜா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும், ரமேஸ் (பிரான்ஸ்), ரூபினி (ஆசிரியை-யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்),சோபினி ஆகியோரின் அன்புத் தந்தையும் றஜித்தா (பிரான்ஸ்), குமாரபரன் (ஆசிரியர்-யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை), மணிவர்ணன் (உரிமையாளர்- வாணி ரெக்ஸ், நியூபோத்தீஸ்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின், அக்ஷயா, சௌமியா, நுகேஸ், அபிஷனா, வர்ஷா, கஜந், அக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (25.11.2018) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
மணிவர்ணன் வாணி ரெக்ஸ்

சிங்கராஜ வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

மணிவர்ணன் : 0777488093, 0212230299.
ரமேஸ் : 0033630345928
குமாரபரன் : 0776079018

(6535)



## மரண அறிவித்தல்



### திருமதி சிவஞானம் அன்னம்மா

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் அன்னம்மா நேற்று (22.11.2018) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிலோமினா, ஞானப்பிரகாசம் மற்றும் அருளம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.11.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று திருவுடல் பிற்பகல் 2 மணியளவில் பண்ணை மீன் சந்தைக்கு அருகாமையில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 42/6, கந்தப்பசேகரம் வீதி,
கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.

தகவல் :
சிவஞானம் குடும்பம்
075 097 2248

(6536)

# விநாயகர் விரதம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விநாயகர் சஷ்டி விரதம் இன்று 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13.12.2018 வியாழக்கிழமை வரை சண்டிலிப்பாய் ஸ்ரீ.சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் நடைபெறவுள்ளது.

விரதம் அனுஷ்டிக்கும் முறையாக தினமும் மதியம் ஒரு பொழுது மட்டும் போசனம். இரவு பால் பழம் அல்லது பலகாரம். இறுதி நாள் உபவாசம். மறுநாள் பாறணை. விரத ஆரம்ப நாள் 21 இழைக் கொண்ட காப்பு அணிந்து ஆரம்பித்து பாறணை நாளன்று கழற்றுதல் வேண்டும். இயலாதவர்கள் இறுதி நாள் மட்டும் விரதம் அனுஷ்டிக்கலாம். 21 வருடம் விரதம் அனுஷ்டிக்கலாம். இயலாதவர்கள் 07 வருடம் அனுஷ்டித்தல் வேண்டும்.

நினைத்த காரியங்கள் கைகூடும். கஷ்டங்கள், துன்பங்கள் விலகும், மங்களம் உண்டாகும், குறிப்பாக சாப விமோசனம் நீங்கும்.

21 நாட்களும் தினமும் மாலை 05.00 மணிமுதல் விநாயகருக்கு ஏகவிம்சதி (21) பத்திர பூஜை, ஏகவிம்சதி (21) புஷ்ப பூஜை, ஏகவிம்சதி(21) தூர்வாயுக்ம பூஜை என்பன நடைபெறும்.

எதிர்வரும் 14.12.2018 வெள்ளிக்கிழமை காலை 06.00 மணிக்கு பாறணை பூஜை நடைபெற்று காப்பு கழற்றி திருவருட்பிரசாதம் வழங்கப்படும். விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் சங்கல்பம் செய்து காப்பு அணிந்து ஆரம்பித்துக் கொள்ளலாம். விரதம் இருக்கும் அடியார்கள் பெயர் நட்சத்திரத்தினை பதிவு செய்வதன் மூலம் 21 நாட்களும் பூஜை அர்ச்சனைகள் நடத்தப்படும் என நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# 36 இலட்சம் ரூபாய் பெறுமதியான 'ஐஸ்' போதைப்பொருளுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

36 இலட்சம் ரூபாய் பெறுமதியான "ஐஸ்" போதைப்பொருளுடன் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இந்தியாவி லிருந்து இலங்கைக்கு வந்தபோதே 300 கிராம் "ஐஸ்" போதைப் பொருளைக் கடத்த முற்பட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 52 வயதுடைய வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர் எனவும், அவரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-7)


## காணி விற்பனைக்கு

யாழ். இராசபாதை வீதியில் நான்கு பக்க சுத்து மதிலுடன் கிணறு தொட்டியுடன் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில்). (சி/6388)

தொடர்புகளுக்கு:-077 171 1386


# 28 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## சண்முகம் ஞானப்பிரகாசம்

பிறப்பு 06 10 1927



இறப்பு 23 11 1990

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகரும் இணைப்பதிகாரியுமாகிய ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் சேவையினை நன்றியுடன் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(6517)

இல.276,
அரசடிவீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
சமூக அபிவிருத்தி மன்றம்.

# மரண அறிவித்தல்

## பாலசுப்பிரமணியம் உமாஜினி



மண்ணில் 1988.09.22 விண்ணில் 2018.11.21

அல்வாய் கிழக்கு தாமன்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிமணியம் உமாஜினி 21.11.2018 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற பாலசுப்பிமணியம் அற்புதமலரின் அன்பு மகளும் ஐங்கரன், சுதாகரன் (ஜேர்மனி), சுகந்தினி, தனுஷா, நிரோஜா, சசிதரன்(அமரர்) அவர்களின் பாசமிகு சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.11.2018 இன்று வெள்ளிக்கிழமை 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கருகம்பன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு,
தாமன் தோட்டம்

077 902 4275

தகவல்: குடும்பத்தினர். (சி/4485)

# இராசி பலன்

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய வேண்டிய சூழ்நிலை உருவாகும், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| செவ் | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி- விசாகம் | | ராகு |
| கேது | | | |
| சனி | சூரி, குரு | புத. சுக் | |

23.11.2018
கார்த்திகை 07, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
பூரணை பிற்பகல் 12.09 மணிவரை
கார்த்திகை மாலை 6.19 மணிவரை
சுபநேரம் 6.11-7.41 மணிவரை
இராகுகாலம் 10.41- 12.11 மணிவரை
விநாயக விரதாரம்பம், திருக்கார்த்திகை விரதம், குமாராலய, விஷ்ணுவாலய தீபம்

வளவன்

**கடகம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக ஆர்வம் ஏற்படும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்கள் சந்திப்பு இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வியாபார விரோதம் விலகும்.

**விருச்சிகம்:** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், திடீர் பயணங்கள் சிந்திக்க வைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், களஸ்திர நன்மையுண்டு.

**துலாம்:** ஆறுமுகப் பெருமான் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கூட்டாளிகளிடம் விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

# வீதியில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதால் 2 பாலங்களை அமைத்துத்தருமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மடத்தடி தம்பசிட்டி ஜே/380 கிராம சேவகர் பிரிவில், உள்ள வீதியில் மழை நீர் தேங்கி யுள்ளதால் இரண்டு பாலங் களை அமைத்து தருமாறு வீதி அபிவிருத்தி திணைக் களத்திடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் பால ங்களை அமைத்து தரு மாறு ஊர்மக்கள் ஒன்றியை ந்து கையெழுத்து அடங்கிய மகஜரை சம்பந்தப்படட அதி காரிகளுக்கு பலமுறையைய ளித்திருந்தும் இது குறித்து அதிகரிகள் கவனத்தில எடு க்கவில்லை.

தற்போது மழை காலம ஆரம்பமாகியுள்ளதால் மாண வர்கள், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர். குறித்த பாதையில் பெரிய பள்ளம் ஒன்றும் ஏற்பட்டுள்ளது. இத னால் அங்கு நீர் தேங்கி நிற்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது இவ் வீதியை சீரமைப்பதற்கு நட வடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொண்டதுடன், குறித்த பகு தியில் பாலம் அமைப்பதற்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை வைக் குமாறு மக்கள் பிரதிநிதிக ளையும் புத்திஜீவிகளையும் கேட்டுக் கொண்டுள்ள னர். (இ-9)

# முன்பள்ளி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மகா வித் தியாலயத்தில் முன்பள்ளித் திறப்பு விழா நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.55 மணிக்கு இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தி னராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற் றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்துகொள் வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி பண் பாட்டலுவல்கள் விளையாட் டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம் பப் பிள்ளைப்பருவ அபிவிரு த்திப் பிரிவுப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, வேலணை பிரதேச சபைத் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி, கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணி ப்பாளர் ச.மோகனபவன், பிர பல வர்த்தகர் ஈ.எஸ்.பி. நாக ரத்தினம்,தீவகம் வேலணை முன்ப ள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆனந்தி குமாரதா சன் ஆகியோர் கல ந்து கொள்வர்.

வலம்புரி ஆசிரியர் ந.விஜய சுந்தரம் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்நிகழ்வில் முற்பகல் 11.55 மணியள வில் திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய முன்றலி லிருந்து விருந்தினர்கள் மங்கள வாத்திய இசை சகி தம் ஊர்வலமாக முன்பள்ளி ஆரம்ப விழாவிற்கு அழை த்துவரப்பட்டு பாடசாலை வளவின் புதிய வழியைத் திறந்து வைத்தல் (பாடசா லைச் சமூகம்) இடம்பெறும்.

மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம் (பாடசாலை மாணவிகள்), குழுப்பாட்டு - முன்பள்ளி மாணவர்கள், குழு நிலை நடனம்- றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்கள், குழுப்பாடல் - மகா வித்தியாலய மாணவி கள்.

ஆசி உரையை , யாழ். சின்மியா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா, வண.பிதா டேவிட் ஆகியோர் வழங்கு வர்.

வரவேற்புரையை நெல் லியடி மத்திய கல்லூரி ஓய்வு நிலை அதிபர் கலாநிதி. செல்லத்துரை சேதுராசா நிக ழ்த்த தலைமையுரையை மண்டைதீவு மக்கள் முன் னேற்ற ஒன்றியக் காப்பாளர் வேலாயுதபிள்ளை ஞானோ தரன், சிறப்பு விருந்தினர் கள் உரையை உதவிக் கல் விப் பணிப்பாளர் திருமதி ஆனந்தி குமாரதாசன், ஆர ம்பப் பிள்ளைப்பருவ அபி விருத்திப் பிரிவு பணிப்பாளர் ஜெயா தம்பையா, தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி ஆகியோர் வழங்குவர்.

அதிபர் உரையை மகா வித்தியாலய அதிபர் சி.இளங் கோவும் பிரதம விருந் தினர் உரையை வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் நன்றியு ரையை ஆசிரியர் மா.திரு லிங்கமும் வழங்குவர். (இ-5)

# தவறாது இழப்பீட்டை பெற்றுக்கொள்ளுங்கள்

## யாழில் 544 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலை மையில் நடைபெறவுள்ள யுத்தம் மற்றும் வன்செயல் கள் காரணமாக பாதிக்கப் பட்டவர்களுக்கான சொத்து க்கள் மற்றும் உயிரிழப்புக்க ளுக்கான நட்ட ஈட்டுத்தொகை வழங்கும் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் யாவும் நிறை வடைந்துள்ளதாகவும் அன் றையதினம் நட்டஈடு பெற தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவரும் தவறாது சமுக மளித்து இழப்பீட்டுக்கான காசோலைகளை பெற்றுக் கொள்ளுமாறும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக செயலாள ரும் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் வடமாகாண இணைப்பாளருமான கா. வேலும்மயிலும் குகேந்தி ரன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

25ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்திற்கு மீள்குடியேற் றம், புனர்வாழ்வு,வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் வருகை தரவுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கடந்த கால யுத்தம் காரணமாக பாதிப்புற்றவர்கள் அதற்கான நட்ட ஈட்டை பெற்றுக் கொள் வதற்காக புனர்வாழ்வு அதி கார சபைக்கு விண்ணப் பித்தவர்கள் தமது விண்ண ப்பங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், தேவை யான விபரங்களைப் பெற்றுக் கொள்ளும்படியும் அமைச்ச ரின் இணைப்பாளர் கேட்டு ள்ளார்.

குறித்த நிகழ்வின் போது பாதிக்கப்பட்ட 438 பொதுமக் களுக்கும் அரச உத்தியோ கத்தர்கள் 106 பேருக்குமாக மொத்தம் 544 பேருக்கு இழப்பீட்டுக்கான காசோலை கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருத ங்கேணிப் பிரதேச செயலா ளர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வா தார உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 4 பயனாளி களுக்கு குளிர்சாதனப் பெட்டி களும் 226 பயனாளிகளு க்கு மரக்கன்றுகளும் வழ ங்கி வைக்கப்பட்டன.(இ-9-19)





உரும்பிராய் செல்லப்பா சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்திய பிரதேச பண்பாட்டுப் பெருவிழா கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசிலனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகனும் கௌரவ விருந்தினராக புனைகதை இலக்கிய கர்த்தா கா.கச்சிதானந்தமும் கலந்து கொண்டனர்.

# கடல்நீரேரிப் பகுதியில் மலக்கழிவுகளைக் கொட்டியவர்கள் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினரின் கழிவகற்றும் வாகனம் மூலம் கடந்த திங்கட்கிழமை காலை மலக்கழிவுகளை உதயசூரியன் கிராமத்திற்கு மிக அருகாமை யில் கடல் நீரேரிப் பகுதியில் கொட்டிய போது குடியிருப்பு மக்கள் அவர்களை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக உதய சூரியன் கிராம மக்கள் தெரிவிக்கையில்,

நகர சபையின் கழிவகற்றல் வாகனம் மூலம் கிழமைக்கு இரு தடவைகள் குறித்த பகுதியில் மலக் கழிவுகள் கொட்டப்பட்டு வந்துள்ளது. குறித்த தினமே இவ்விடயம் பொது மக்களுக்கு தெரிய வந்துள்ளது.

கடல் நீரேரிப் பகுதியில் மலக்கழிவுகளை கொட்டுவதனால் அது நீருடன் கலந்து குடியிருப்புப் பகுதிக்குள் வருகிறது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உதயசூரியன் கிராம மக்கள் தற்போது வெள்ளம் காரணமாக பாதிப்பினை எதிர் கொண்டு வருகின்ற நிலையில் கடல் நிலப் பரப்பில் மலக் கழிவுகளை கொட்டுவதனால் அவர்கள் பல்வேறுபட்ட சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

உதயசூரியன் கிராமத்தின் சில குடிசைகள் தற்போது கடல் நீர் சூழ்ந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சாவகச்சேரி நகர சபையினர் மற்றும் பிரதேச சபையினரும் பொது இடங்களில் எடுக்கப்படும் மலக்கழிவுகளைக் கொட்டுவதற்கு உரிய இடம் இன்றித் தவித்து வருவது குறிப்பிடத்தக்கது.(இ-30)

# விழிப்புணர்வு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மாவட்டத்தின் குப்பைகளை புத்தளம், அருவக்காடு பிரதேசத்தில் கொட்டும் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 50 நாட்களுக்கும் மேலாக புத்தளம் வாழ் மக்கள் முன்னெடுத்து வரும் வெகுசன எதிர்ப்பு போராட்டத் திற்கு ஆதரவாக யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சட்டத் துறை விரிவுரை மண்டபம் அறை எண் 207 இல் சட்ட விழிப்புணர்வு கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் சட்டத்துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கு.குருபரன், சட்டத்துறை விரிவுரையாளர் சி.பிரதிநாத், தூய்மைக்கான புத்தளம் அமைப்பின் செயற்பாட்டாளர் நிவாஷ் நாஷீர் மற்றும் சட்டத்துறை மாணவி பாத்திமா ரஷா ஆகியோர் விசேட உரைகள் வழங்குவர். ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும். (இ

உ

"ஆச்சரியம்"

"விண்ணுலகில் மட்டுமல்ல"

யாழ்.மண்ணிலும் பரிசு வாய்ப்புகள்

01. முதல் தடவையாக 2 வெற்றியாளர்கள் "தசலக்சபதி" 85 ஆவது குலுக்கலில் 21.11.2018 (1,00000/=) ஒரு லட்சம் வென்றுள்ளனர். (யாழ்.விற்பனை முகவர் க.திலகவதி

02. 15.11.2018 மகஜன சம்பத 3790 குலுக்கலில் (1,000.00/=) ஒரு லட்சம் வென்றுள்ளார். (யாழ்.விற்பனை முகவர் -கனகலிங்கம்)

"இடர் பல களைய" தடைகளை தாண்டி வெற்றியடைய வாழ்த்துபவர்கள்

திரு S. கனகலிங்கம் தேசிய லொத்தர் சபை

யாழ்.முகவர் திருமதி K.திலகவதி அபிவிருத்தி லொத்தர் சபை.

லொத்தர் சீட்டுகளை யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சின்னக்கடை மற்றும் பல இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6529)

PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION

CONDUCTED BY CEYLON MEDICAL COUNCIL, MEDICAL FACULTY, UNIVERSTY OF COLOMBO


சென்ற வருடம் 2017 இல் நடைபெற்ற பரீட்சையில் இலங்கை முழுவதும் 270 பேர் சித்தியடைந்துள்ளார்கள். இவர்களில் 24 பேர் எம்மிடம் பயின்ற தமிழ் பரீட்சார்த்திகள் ஆகும். இந்த வருடத்திற்கான மேற்படி பரீட்சை 17.11.2018 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இந்த பரீட்சைக்கு எம்மிடம் பயின்ற 45 பேர் தோற்றியுள்ளார்கள். இதற்கான பயிற்சி வகுப்புக்கள் Jaffna College, (Under Graduate Dept) 464, Hospital Road, Jaffna இல் நடைபெற்றது. 2019/2020 ஆம் ஆண்டில் நடைபெறப்போகும் பரீட்சைக்கான புதிய பயிற்சி வகுப்புகள் December மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாக உள்ளது. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 08.30-12.30 வரை வகுப்புகள் நடைபெறும். இதற்கான மாதாந்த கட்டணம்-ரூபா 2000/= ஆகும். பயிலுநர் மருந்தியலாளராக, Sri Lanka Medical Council இல் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை தற்போது பெற்றுக்கொள்ளலாம். இந்த பரீட்சைக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதிகள்:- G.C.E. O/L இல் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி G.C.E. A/L இல் Chemistry பாடத்துடன் மேலதிகமாக இரண்டு விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி பெற்று இருக்க வேண்டும். இந்த பரீட்சைக்கு பதிவு செய்ய வயது எல்லை இல்லை.

தகவல்களுக்கு

நேரு Sir, மருந்தியலாளர், கல்வி இணைப்பாளர்

T/P:- 0776256292 (6519)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



டாக்டர்.புண்ணியமூர்த்தி ஸ்ரீகணேசன் (BSMS)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முகமாலை உப அலுவலக இலவச ஆயுள்வேத வைத்தியசாலையின் ஆயுள்வேத வைத்தியராக கடமையாற்றும் டாக்டர் பு.ஸ்ரீகணேசன் அவர்கள் இன்று (23.11.2018) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இடம்பெறும் பட்டமளிப்பு விழாவில் "ஆயுள்வேத வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களுக்கான நிர்வாகத்தில் முது விஞ்ஞானமாணி "(Master Science in Administration of Ayurveda hospitals and Institutions) பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றமையை பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-ம.வசந்தா, யோ.பிறேமினி, ம.மனோறதன்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை முகமாலை உப அலுவலகம்,
ஆயுள்வேத வைத்தியசாலை, இத்தாவில், பளை. (4483)

வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்

யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாசாலை

நிறம் மாறும் வானத்தில்
திசை மாறிப் பறக்கும் பறவைகளுக்காய்...
வேண்டிய வகையில் விழுதிறக்கி,
தேடிப்புதுவிடயம் தெளிவுடனே புகட்டி,
சிந்தனை பொழிந்து சீரிய நெறி புகட்டி,
செப்பனிட்ட பாதையிலே... தடம் பதித்து,
பிரபஞ்சத்தின் திறவு கோலாய்...
நீங்கள் பாடிய பள்ளியெழுச்சியில் தான்...
எங்கள் பிள்ளைகள் சோம்பல் முறித்து
தெளிந்த அறிவுடன் வெற்றி வாகை சூடிட உழைத்த..
சிந்தனை சொல் செயல் மிகு முதல்வரே
தெரியாமை அகற்றிடும் தெள்ளிய ஆசான்களே
புரியாமை போக்கி புத்தறிவூட்டிய வழிகாட்டிகளே
என்றென்றும் உங்கள் சேவை
சிறக்க எமது சிரந்தாழ்ந்த நன்றிகளுடன்
இறையாசியையும் வேண்டுகின்றோம்.

க.பொ.த.(சா/த) 2017 பரீட்சையில் எமது பிள்ளைகள் அனைவரையும் பல்வேறு துறைகளில் உயர்கல்வி கற்கும் வகையிலான பெறுபேறுகளைப் பெற்று தடம் பதிப்பதற்கு வித்தியாசாலை ஆசிரியர்கள் அயராது வழிப்படுத்தினார்கள். எமது பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஆலோசனைகளையும் பாடசாலை சமூகம் நல்கியது. எமது வித்தியாசாலை ஆசான்களையும் பாடசாலைச் சமூகத்தையும் பாராட்டி வாழ்த்துவதுடன் நெஞ்சார்ந்த நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்
பெற்றோர்கள், தரம் 11 (2017)
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை. (6412)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:பட்டதாரி, அபி விருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில்<br>தொ.இ: B/9002 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:M.sc,Project coordinator,<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரச,தனியார், உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/9001 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:Engi, Denmark, தனியார்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/9003 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 14<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்:A/L,மருந்தாளர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,அரச,தனியார் தொழில்<br>தொ.இ: G/9014 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 7செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L,முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: ஒரேவயதும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/9004 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 26<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்:Dip.in.Eng/I.T/தனியார்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,என்ஜினியர்,வைத்தியர், கணக்காளர்,வங்கி/உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/9022 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 4 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L, ஒப்பந்தக்காரர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9006 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 13செவ் 12 இல்<br>உயரம்: 4' 10"<br>தகைமை/தொழில்:M.B.B.S, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: மருத்துவர்,பொறியியலாளர், கணக்காளர் உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/9024 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ‘எமக்காக வாழ்ந்தவரை வாழ வைப்போம்’
# உயிர்நீத்த போராளிகளின் பெற்றோர் கௌரவிப்பு


(கண்டாவளை)

ஐக்கிய இராச்சியத்தின் வீர தமிழர் முன்னணியின் ஏற்பாட்டில் அறம் செய் அறக் கட்டளையான் உதவியுடன் எமக்காக வாழ்ந்தவரை வாழவைப்போம் எனும் தொனிப்பொருளில் உயிரிழந்த போராளிகளின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று முன் தினம் முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. சுமார் 400இற்கு மேற்பட்ட மக்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். விடுதலை போராட்டத்திற்கு தமது உயிர்களை இழந்த போராளிகளின் பெற்றோர் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். உயிரிழந்தோரின் நினைவாக வைக்கப் பட்டிருந்த பொது படத்திற்கு பெற்றோர் மலர்தூவி அக வணக்கம் செலுத்தினர்.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

2009ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் இந்த போராட்டம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. உண்மையில் இந்த போராட்டம் தேவைதானா? பல்லாயிரம் போராளிகளை நாம் இழந்திருக்கின்றோம். சர்வதேச நாடுகள் பல இணைந்து. விடுதலை போராட்டத்தை பயங்கரவாத போராட்டமாக மாற்றி, முள்ளிவாய்க்காலில் பெரும் இன அழிப்பையும் மேற்கொண்டிருந்தது மட்டுமல்லாது. 2009 ஆம் ஆண்டுக்குபின்னர்முள்ளி வாய்க்கால் நினைவேந்தல், இப்போராட்டம் தொடர்பிலரீக அனைத்து விடயங்களிலிருந்து மக்களை விடுவிக்கும் வகையில் பல்வேறு மூளைச் சலவைகளும் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு- கிழக்கு மக்கள் கல்வி உள்ளிட்ட விடயங்களில் கொழும்பிற்கு அடுத்த நகரமாக யாழ்ப்பாணம் காணப்பட்டது. இன்று நாம் கடைசியில் உள்ளோம். போர் முடிவுற்ற பின்னர் 8 வருடங்களிற்குள் இந்த பாதிக்கப்பட்ட மக்களிற்கு வேண்டுமான அளவு அபிவிருத் தியை செய்திருக்கலாம் எனவும், கடற்றொழில், விவசாயம் உள்ளிட்டவற்றை ஊக்குவித்திருக்கலாம் எனவும் குறிப்பிட்ட அவர், மாறாக சிங்கள இனத்தவரை இங்கு வந்து கடற்பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கு அவர்கள் உடந்தையாக இருந்தமை தொடர்பிலும் அவர் குறிப்பிட்டார். இதே வேளை யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் நினை வேந்தல் மேற்கொள்வத ற்கு பொலிஸாரால் நீதி மன்ற தடை உத்தரவு பெறப்பட்டமை தொடர்பிலும் அவர் இதன் போது குறிப்பிட்டார். (2-315)




# நெற்செய்கையின் உற்பத்தியை அதிகரிக்க
# வவுனியா மாவட்டத்தில் இயந்திரம் மூலம் நெல்நாற்று நடுகை செயற்பாடு நடைமுறை




(வவுனியா)

நெற்செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில் இயந்திரம் மூலம் நெல் நாற்றுநடுகை செயற்பாடு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இக்காலபோகத்தை 2018/2019 இல் ஆரம்பிக்கும் முகமாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் திருமதி. அ.சகிலாபானுவின் ஆலோசனையின்படி கடந்த 19 ஆம் திகதி பாவற்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கன்னாட்டி எனும் இடத்தில் வயல் விழா நிகழ்வு நடத்தப்பட்டது. இந் நிகழ்விற்கு செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் நவீன முறை மூலம் நெற்செய்கையில் விவசாயிகள் நெல் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் கருத்துக்கள் விவசாய போதனாசிரியரால் வழங்கப்பட்டது.

இந் நாற்று நடுகை செயன்முறையினால் விவசாயிகள் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இதன்படி. குறைந்தளவு விதை நெல் பாவனை. அதாவது வீசி விதைப்பு முறையில் ஒரு ஏக்கருக்கு மூன்று புசல் விதைநெல் தேவை. ஆனால் நாற்று நடுகைக்கு ஒரு ஏக்கருக்கு ஒருபுசல் விதை நெல்போதுமானது.

களைகட்டுப்படுத்தல் இயந்திரம் மூலம் களை கட்டுப்படுத்துவதால் களை கட்டுப்படுத்தல் செயற்பாடு இலகு. அத்துடன் களை நாசினி பாவனையையும் குறைக்க முடியும். ஒரு ஏக்கருக்கு மூன்று கூலியாட்களின் செலவு குறைக்கப் படும்.

கையினால் நாற்று நடுகை மேற்கொள்ளப் பட்டால் ஒரு ஏக்கருக்கு எட்டு கூலியாட்கள் தேவை. இயந்திரம் மூலம் நெல் நாற்று நடுகை செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு இரண்டு கூலியாட்கள் போதுமானது.

அதிகளவு மட்டம் பிரிதல் மூலம் விளைச்சல் அதிகரிப்பு.

வயல் பராமரிப்பு இலகு.

உற்பத்தித்திறன் பாரம்பரிய முறையைவிட 20 தொடக்கம் 25 % மூலம் அதிகரிக்கின்றது.

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள விவசாய போதனாசிரியரை நாடுமாறு தெரிவிக்கப்பட்டது. (2)

# விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூருவது எமது கடமையாகும்
## மன்னார் நகரசபை தலைவர் தெரிவிப்பு



(மன்னார்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவு கூரவேண்டியது எமது கடமையாகும். இவர்கள் மக்களையும் மண்ணையும் நேசித்தவர்கள் என மன்னார் நகர சபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக உயிர் நீத்த மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் கடந்த 21 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் 27 ஆம் திகதி முடிவடைகின்றது.

மன்னார் நகர சபையின் 9 ஆவது அமர்வு நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நகர சபையின் சபா மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் போது தலைமை உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மாவீரர்கள் தங்களுக்காகவும், தமது குடும்பங்களுக்காகவும் உயிர் நீத்தவர்கள் இல்லை.

எமது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் உயிர் நீத்தவர்கள். அவர்கள் மக்களையும் மண்ணையும் நேசித்தவர்கள்.

அவர்கள் இரவு பகல் பாராது, மழை,வெயில் என்று சோராது, களமுனைகளிலே போரிட்டு எமது மக்களுக்காக உயிர் நீத்தவர்கள். அவர்களை இந்த இடத்திலே நினைவுகூர வேண்டியது எமது கடமையாகும்.

மேலும் நாட்டிலே அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.எமது நாட்டில் தற்போது இரண்டு பிரதமர்கள் ஆட்சி செய்து கொண்டு இருக்கின்றார்கள். பாராளுமன்றம் ஒரு கேலிக் கூத்தாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஒரு உயரிய சபையிலே எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கூட தெரியாமல் அங்கே அமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

எனினும் எமது மன்னார் நகர சபையிலே நாங்கள் எமது சபையூடாக ஈட்டப்படுகின்ற வருமானத்தை வைத்து அதனூடாக எமது மக்களுக்கு சேவை செய்து வருகின்றோம்.

தொடர்ச்சியாகவும் மக்களுக்கான சேவையை செய்வோம் எனக்கூறினார்.

அதனைத் தொடர்ந்து பல உறுப்பினர்கள் ஏகமனதாய் இன்னுயிரை தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூர்ந்தனர். (2-285)

# பற்றைகளால் சூழ்ந்துள்ள காணியில் சுகாதார சீர்கேடு
## அச்சத்துடன் பயணிப்பதாக மக்கள் விசனம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள புதுக்குடியிருப்பு -மாத்தளன் பிரதான வீதியில் காணப்படும் காணியொன்று மக்கள் மீள்குடியேறிய காலம் தொடக்கம் கவனிப்பாரற்று பற்றைக்காடாக காணப்படுகின்றது.

இவ்வீதிவழியாக இரவு வேளைகளில் பயணிப்போர் அச்சத்துடன் செல்வதாகத் தெரிவிக்கின்றனர். பிரதேச செயலகம், கமநல சேவைகள் நிலையம், கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை என்பனவற்றுக்கு அருகில் புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதியில் பற்றைக்காடு மண்டிக் காணப்படுகின்றது.

இக்காணியில் சுகாதார சீர்கேடுகள் இடம் பெறுவதோடு குப்பைகள் கொட்டும் ஓர் இடமாகவும் அமைந்துள்ளதாக பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. ஆதலால் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இவ்விடயத்தை நேரில் சென்று பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2)

# வட்டுவாகல் பாலம் தாழிறக்கம் தற்காலிகமாக வீதியை திருத்துக

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு-பரந்தன் வீதியில் காணப்படும் வட்டுவாகல் பாலமானது மிகவும் சேதமடைந்த நிலையில் ஆபத்தான கட்டத்தில் காணப்படுகிறது

மக்கள் நடமாட்டம் உள்ள வீதியாக காணப் படும் குறித்த பாலமானது திருத்தப்பட வேண்டும் என பல தரப்பினராலும் பல தடவைகள் கோரப்பட்டபோதும் குறித்த பாலத்துக்கு பாரிய நிதி யொதுக்கீடு தேவை எனவும் நிதி கிடைக்கவில்லை எனவும் தெரிவித்து திருத்தப் படாது காணப்படுகிறது.

பாலத்தில் பல்வேறு இடங்களில் வெடிப்புக்களும் வீதி பாதுகாப்பு அற்றதாகவும் வீதியில் சில இடங்களில் தாழிறங்கியும் காணப்படுகிறது.

தற்போது குறித்த நீரேரியில் அதிக நீர் நிரம்பி காணப்படும் நிலையில் தற்காலிகமாகவேனும் வீதியில் திருத்தங்கள் மேற்கொண்டு உதவ மக்கள் கோரும் அதே வேளை குறித்த பாலத்தினூடாக அவதானமாக போக்குவரத்து செய்யுமாறும் கோருகின்றனர் (2-281)

# படுமோசமான வீதியால் பயணித்த ஆட்டோ வெள்ளநீரில் வீழ்ந்தது

## பாண்கள் நீரில் மிதந்தன



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராமங்களின் உள்ளக வீதிகள் தொன்னூறு வீதமானவை மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறான வீதிகளால் நாளாந்தம் பல்வேறு தேவைகளுக்காக பயணம் செய்கின்ற பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் ஆட்டோ ஒன்றில் பாண் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவரின் ஆட்டோ வீதியில் மழை நீர் தேங்கி நின்ற குழியினுள் சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால்கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பல இறாத்தல்பாண்கள்உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்கள் சேற்று நீரினுள் வீழ்ந்துள்ளன.

இந்த விபத்துக் காரணமாக அவருக்கு பல ஆயிரம் ரூபாக்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது. (2-312)




# பாவற்குளத்தின் நீர்மட்டம் உயர்வு; ஈரப்பெரிய குளத்தின் வான் கதவுகள் திறப்பு

## வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு




(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக பாவற்குளத்தின் நீர் மட்டம் 16.11 அடியாக உயர்வடைந்துள்ளதுடன், ஈரப் பெரியகுளம் வான் பாய்ந்து வருவதாகவும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா தெரிவித்துள்ளார்.

பெய்து வரும் மழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து குளங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதுடன், சில குளங்கள் வான் பாயவும் ஆரம்பித்துள்ளது.

அந்தவகையில் மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் காணப்படும் வவுனியா. பாவற்குளத்தின் நீர்மட்டம் 16.11 அடியாக உயர்வடைந்துள்ளது. அத்துடன் இராசேந்திரங்குளம் 9.9 அடியாகவும், முகத்தான் குளம் 11 அடியாகவும் உயர்வடைந்துள்ளது. தொடர்ச்சியாக மழைபெய்யும் பட்சத்தில் சில நாட்களில் இவை வான் பாயக் கூடிய நிலை உள்ளது.

இவற்றுடன், மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள ஈரப்பெரியகுளம் 15.7 அடியாக உயர்வடைந்துள்ளமையால் வான் கதவுகள் திறக்கப்பட்டு 3 இஞ்சி வான் பாய்ந்து வருகிறது. மேலும், வவுனியா வடக்கு மருதமடு குளம் 12.1 அடியாகவும் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால் வான் பாய்ந்து வருகின்றது.

பாவற்குளமானது 3 இஞ்சி விவசாய நடவடிக்கைக்காக திறந்து விடப்பட்டுள்ளமையால் சடுதியான நீர்அதிகரிப்பு ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நீர்மட்ட அதிகரிப்பு காரணமாக இக் குளங்களின் கீழ் உள்ள மக்களுக்கோ, பயிர்ச்செய்கைக்கோ எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. அத்துடன் அனர்த்தம் ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மாவட்ட மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

## 150 மில்லியன் ரூபா வருமானம் மதிப்பீடு

# மன்னார் நகர சபையின் அடுத்தாண்டு வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றம்



(மன்னார்)

மன்னார் நகர சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்ட வாசிப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நகர சபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் மன்னார் நகர சபையின் சபா மண்டபத்தில் இடம் பெற்றது. இதன் போது 2019 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்ட வாசிப்பு மன்னார் நகர சபையின் கணக்காளர் தி.றோய் யூலியசினால் முன்வைக்கப்பட்டது.

இதன் வாசிப்பு நகர சபையின் செயலாளர்.உப தலைவர், உறுப்பினர்கள் முன்னிலையில்நடைபெற்றது.

இதன்போதுவரவு- செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள், இதர ஒதுக்கீடுகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டு சபை உறுப்பினர்கள் அனைவரினதும் முழு ஒத்துழைப்போடும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் வரவு- செலவு திட்டத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானமாக 149 மில்லியன் 6 இலட்சத்து 28 ஆயிரத்து 550 ரூபாவும், மொத்தச் செலவீனமாக 149 மில்லியன் 6 இலட்சத்து 26 ஆயிரத்து 585 ரூபாவும், மிகையாக ஆயிரத்து 964 ரூபாய் 20 சதம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சபையில் உள்ள உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் எவ்வித எதிர்ப்புக்களும் இன்றி குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு மன்னார் நகர சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஏகமனதான நிறைவேற்றப்பட்டுள்ளது. (2-285)

# மன்னாரிலுள்ள துயிலுமில்லங்கள் மாவீரர் நினைவேந்தலுக்கு தயார்

## அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி



(மன்னார்)

தமிழீழ தேசிய மாவீரர் நாள் நவம்பர் 21 தொடக்கம் 27 வரையான காலப்பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இக் காலப் பகுதியில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கான செயற்பாடுகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மும்முரமாக இடம்பெற்று வருகின்றது.

இதனால் அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலும் சிரமதானப் பணி மூலம் துப்புரவு இடம்பெற்று புதுப் பொலிவுடன் காணப்படுகின்றது.

இந்த நினைவேந்தல் வாரத்தையொட்டி சில மாவீரர் துயிலும் இல்லங்களில் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் வீரமறவர்களுக்கு விளக்கேற்றி மலர்தூவி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள துயிலும் இல்லங்களான ஆட்காட்டிவெளி, பண்டிவிரிசான் ஆகிய துயிலும் இல்லங்கள் தற்போது மாவீரர் குடும்பத்தினராலும் பொது அமைப்புக்களினாலும் பொது மக்களாலும் துப்புரவு செய்யப்பட்டு மாவீரர் நாளுக்காக ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக ஆட்காட்டி வெளி துயிலும் இல்லமானது முழுவதுமாக கம்பி வேலி அமைக்கப்பட்டு உடைக்கப்பட்ட மாவீரர் நினைவு தூண்கள் சில அடுக்கப்பட்டு மாவீரர் நினைவேந்தல் நாளுக்காக தயார் செய்யப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மாவீரர்கள் துயில் கொண்ட மன்னார் ஆட்காட்டிவெளி துயிலும் இல்லம் தற்போது மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றது. (2-285)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு புத்தகப் பைகள், கற்றல் உபகரணங்கள்



(மல்லாவி )

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னாள் வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை - மாரிமுத்துவின் மூன்றாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு கனடா நாட்டில் வாழும் அவரது குடும்பத்தினர் வழங்கிய 40, ஆயிரம் ரூபா நிதி உதவியில் யுத்த சூழ் நிலைகளால் பாதிக்கப்பட்ட மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகளுடன் இணைந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு அண்மையில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/திருநகர் தமிழ் வித்தியாலயத்தில் நடை பெற்றுள்ளது.

இதன்போது 24 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய புத்தகப் பைகள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன. (2-15)

# வவு.மாவட்டத்தில் சோளச்செய்கையில் அந்நிய படைப்புழுத்தாக்கம் அதிகரிப்பு

## விவசாயிகளுக்கு துண்டுப்பிரசுரம்



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தற்போது சோளச்செய்கையில் அந்நிய படைப்புழுத் தாக்கம் உழுக்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவில் அதிகளவில் காணப்படுகின்றது. இதன் தாக்கத்தை ஏனைய பிரதேசங்களிலும் தவிர்க்கும் முகமாக திருமதி அ.சகிலா பானுவின் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளரின் ஆலோசனையின் படி வவுனியா மாவட்ட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒலிபெருக்கி மூலமான அறிவித்தல் அப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் விவசாயிகளுக்கு இது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அந்நிய படைப்புழு தாக்கத்தை விவசாயிகள் அவதானிக்குமிடத்து உடனடியாக அருகிலுள்ள விவசாய போதனாசிரியரை நாடுமாறும் இவ்வறிவித்தலில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. (2)

# தாண்டிக்குளம்-கல்மடு வீதியில் பயணிக்கும் மக்கள் அவதி

(குருமன்காடு)

வவுனியா தாண்டிக்குளம் ஊடாக கல்மடு செல்லும் பிரதான வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

வவுனியா தாண்டிக்குளம் ஊடாக கல்மடு செல்லும் பிரதான வீதியானது வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானது. குறித்த வீதியின் அருகாமையில் தேசிய நீர் வழங்கல் அதிகாரசபையினால் வீதியின் இரு மருங்கிலும் வீதியை அகழ்ந்து அதனுள் குழாய்கள் புதைக்கப்பட்டு. பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் அகழ்ந்த வீதியை மீண்டும் சரியான முறையில் செப்பனிடப்படாத நிலையில்காணப்படுகின்றது.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தெரியப்படுத்தியும் இது வரையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (2-250)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தொப்புள்கொடி உறவு




ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கத் தயாராக இருக்கும் பெற்றோர், அந்தக் குழந்தையின் எதிர்காலத்தைப் பற்றிப் பல முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைமையில் இருப்பார். உதாரணத்துக்கு எடுப்போமானால் அந்தக் குழந்தைக்கு வைக்கப்போகும் பெயரில் இருந்து அந்தக் குழந்தைக்குக் கொடுக்கப் போகும் புட்டிப்பால் வகை வரைக்கும் பல கடினமான முடிவுகளை அவர்கள் எடுக்க வேண்டியுள்ளது. இவை எல்லாவற்றிக்கும் காரணம் என்னவெனில் அவர்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் தமது குழந்தையின் எதிர்காலத்தைப் பாதித்து விடக்கூடாது என்பதேயாகும்.

குழந்தைகள் நாளைய நாட்டின் தலைவர்கள்.ஒவ்வொரு குழந்தையும் எதிர்காலத்தில் நன்றாக இருக்க வேண்டும் என்பதே அதைப் பெற்ற ஒவ்வொரு பெற்றோரும் விரும்புவர்.

அன்று தொட்டு இன்று வரை பல பாரம்பரியங்களை நாம் பின்பற்றி வருகின்றோம். ஒரு குழந்தை இந்த உலகத்திற்கு வந்தவுடன் அந்த தாய்க்கும் சேய்க்கும் செய்ய எனப் பல பாரம்பரிய செயற்பாடுகள் உள்ளன. சடங்குகளாக நாம் பின்பற்றும் இந்தச் செயற்படாடுகள் உண்மையிலேயே எமது முன்னோர்கள் தாய்க்கும் சேய்க்கும் நன்மை பயக்கும் என அறிந்து செய்து வந்த காரியங்களே ஆகும்.

இந்த வகையில் இந்தக் கால கட்டத்தில் பழக்கத்திற்கு வந்துள்ள ஒரு புதிய முறைதான் தொப்புள் கொடிக் குருதியைப் பத்திரப்படுத்தி வைப்பது. நம்மில் பலர் இதை அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் இந்தியத் தொலைக்காட்சிகளில் அடிக்கடி இவை இப்பொழுது விளம்பரப்படுத்தப்படுகின்றன. தொப்புள் கொடியின் மகத்துவத்தை அறியாமல் புத்திமழுங்கிப்போய் இருந்த எல்லோரும் இப்பொழுது முழித்து எழுந்து கொண்டு இருக்கின்றனர் என்றே சொல்ல முடியும்.




அது என்ன தொப்புள் குருதியைப் பத்திரப்படுத்துவது?

பலருக்கு இது புரியாத புதிராக இருக்கலாம், சிலருக்கு இடுப்பில் கட்டிய அரணாக்கொடி ஞாபகம் வரலாம். அப்படியே உங்கள் தாத்தா பாட்டியைக் கேட்பீரகளே. ஆனால் அவர்கள் அதைப் பற்றி ஒரு வரலாறே எடுத்து விடுவார்கள்.

ஆம், தொப்புள் கொடி என்பது ஒரு மகத்தான உறுப்பு. பள்ளியில் படித்தவாறு தாயையும் சேயையும்கர்ப்பப்பையில் இணைக்கும் ஒரு உறுப்பாக மட்டும் இரு இருந்துவிடவில்லை. அதற்கும் மேலான ஒரு செயலை இது செய்கின்றது. எமது உடலில் உள்ள கலங்கள் அனைத்தும் பல வகைகளாகத் தமது தொழிற்பாடுகளுக்கு ஏற்றவாறு மாற்றம் அடைந்துள்ளன. இப்பொழுது பல கலங்களைக் கொண்ட பல்கல அங்கியாகவுள்ள நாம் ஆரம்பத்தில் தாயின் உடலில் கருவாக இருந்த பொழுது நாம் ஒரு கலமாகவே இருந்தோம். ஒரு கலம் இரண்டாகி பின்னர் நானகாகிப் பின்னர் எட்டாகி இவ்வாறே பிரிந்து பல்கல அமைப்பைக் கொடுக்கின்றது. இவ்வாறே தனி ஒரு கலமாக இருந்த உடல் இப்பொழுது வெவ்வேறு தொழிற்பாடுகளை மேலெடுக்கும் அங்கியாக மாற்றமடைந்தமைக்குரிய காரணம் எமது கலங்களிலேயேயுள்ளது. குருத்தணுக்கள் அல்லது ஸ்டெம்செல் என அழைக்கப்படுகின்ற விசேஷமான ஒரு வகைக் கலங்களே பல்வேறுபட்ட தொழிற்பாடுகளை மேலெடுக்கும் கலங்களாக மாற்றமடைகின்றன. அவற்றின் இந்த இயல்புதான் எமது இந்தக் கட்டுரையின் சாராம்சப் பொருளாகும். ஆரம்பத்தில் குருத்தணுக்களாக இருக்கும் இவை தேவைக்கு ஏற்றாற் போல் தோல் கலமாகவோ, நரம்புக் கலமாகவோ, குருதிக் கலமாகவோ மாற்றமடைகின்றன.





மனித உடலில் தினசரி ஆரோக்கியத்திற்குத் தேவையான நூற்றுக்கணக்கான வகை உயிரணுக்கள் உள்ளன. இந்த உயிரணுக்களின் பொறுப்புநம் உடலைச் செயற்பட வைப்பதாகும். இதயத்தைத் துடிக்க வைப்பது. மூளையைச் சிந்திக்க வைப்பது. சிறுநீரகத்தை இரத்தம் சுத்திகரிக்க வைப்பது. பழைய தோல் உதிரும் பொழுது புதிய தோல் உண்டாக்குவது போன்ற பல செயல்கள். குருத்தணுக்களின் தனிப் பொறுப்பு என்னவென்றால் பிற அனைத்து உயிரணுக்களையும் உருவாக்குவது. குருத்தணுக்கள் / ஸ்டெம் செல்கள் பிற உயிரணுக்களின் சுரபியாகும். குருத்தணுக்கள்/ ஸ்டெம் செல்கள் பெருகும் பொழுது அவை மேலும்பல குருத்தணுக்களையோ அல்லது வேறு வகை உயிரணுக்கள் பலவற்றையோ உருவாக்க கூடியவை. உதாரணமாக தோலில் இருக்கும் குருத்தணுக்கள் /ஸ்டெம் செல்கள் மேலும் பலதோல் குருத்தணுக்கள்/ ஸ்டெம் செல்களையோ அல்லது பிற விசேட கடமை கொண்ட தோல் உயிரணுக்களையோ உருவாக் கக் கூடியவை.

இந்தக் குருத்தணுக்கள் / ஸ்டெம் செல்கள்களிற்கு உடலின் எந்தவகைக் கலமாகவும் மாற்றமடையக்கூடிய இயல்பு உள்ளது. இதனாலேயே இந்தக் குருத்தணுக்கள் /ஸ்டெம் செல்களைப் பலவகை சிகிச்சைகளிலும் பயன்படுத்துகின்றனர். பல வகைப்பட்ட குணமாக்க முடியாத வியாதிகளுக்கும் இன்று இந்தக் குருத்தணுக்கள் / ஸ்டெம் செல்கள் சிகிச்சை முறை ஒரு நம்பிக்கையைக் கொடுக்கின்றது. நீரிழிவு மற்றும் ஏனைய குணமாக்க முடியாத பரம்பரை வியாதிகளிற்கு நோய் எதிர்ப்பு அமைப்பு சார்ந்த வியாதிகளான ஆர்த் ரைடிஸ் போன்றவைகளிற்கு மற்றும் நரம்பியல். குருதிசார்ந்த நோய்களான குருதிப் புற்று நோய் போன்றவற்றிற்கும் இந்த முறை சிகிச்சை பயன்படுத்தப்படுகின்றது.

இந்தத் தொப்புள் கொடியின் மகத்துவம் நம்மவர்களுக்கு இப்பொழுது தான் தெரிகின்றது. ஆனால் எமது முன்னோர்கள் தொப்புள் கொடியின் மகத்துவத்தை, அந்தக் காலத்திலேயே உணர்ந்து இருந்தார்கள் என நான் கூறினால் எம்மில் பலருக்கு நம்பவும் முடியாது.

எமது தாத்தா பாட்டி காலத்திற்குச் சற்றுப் பின்னோக்கி நகர்ந்து பார்த்தால் இதன் தாற்பரியம் புரியும். இன்று எம்மில் எதனை பேருக்கு அரணாக்கொடி பற்றிய உண்மை தெரியும் என எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்த வரைக்கும் ஒரு கை அளவு ஆட்களிற்கே அதன் உண்மை புரிய வாய்ப்புள்ளது.

அரணாக்கொடியைக் கட்டுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. எனினும் அதன் உண்மையான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். அரணாக்கொடியை அழகிற்குக் கட்டியவர்களாகவே எம்மில் பலர் இருப்பர். (தொடரும்)

**ம.யோண் பிரியந்த்**

---

**புதிர் 215 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

வழங்கப்படவில்லை

**புதிர் 216 க்கான கேள்வியும் விடையும்:**

**தும்பி எங்கே முட்டை இடும்?**

**நன்னீர் நிலைகளில்**

---

## வாரத்திற்கு ஒரு புதிர்! 217

**இப்புவியில் முதலாவது உயிரி எப்போது தோற்றம் பெற்றதாக நம்பப்படுகிறது?**

**புதிர் 217 இற்கான விடைகளை 03.12.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

---

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 217**

சரியான விடை:-..............................

முழுப்பெயர்:-..............................

முகவரி:-..............................

தொ.பே. இல:..............................

கையொப்பம்:..............................

# விளைச்சலைக் குறைக்கும் இலை மடிச்சுக்கட்டி தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையினால் நெல்வயல்களில் விளைச்சலை குறைக்ககூடிய நெல் இலை மடிச்சுக்கட்டியின் தாக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள யாழ். பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அ.சிறிரங்கன், பாரதூரமான பாதிப்புக்களை தடுப்பதற்கு விவசாயிகள் உரிய நடைமுறைகளை கையாள்வது அவசியம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழையுடனான காலநிலையினால் நெல்வயல்களில் விளைச்சலை குறைக்கக்கூடிய நெல் இலை மடிச்சுக்கட்டியின் தாக்கம் குறிப்பாக காரைநகர், அராலி, சாவகச்சேரி, அரியாலை, ஊர்காவற்றுறை, வேலணை என பரவலாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பீடைகளின் எண்ணிக்கை அதிகரித்து அதன் தாக்கம் நெற்பயிரின் பூக்கும் பருவம் வரை தொடர்ந்து காணப்படுமாயின் விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்தும். நைதரசன் பசளை பாவனை மற்றும் பயிரடர்த்தி கூடிய வயல்களில் இதன் தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது.

இலை மடிச்சுக்கட்டிப் புழுக்கள், இலை விளிம்புகளை இணைத்து குழாய் போன்ற அமைப்பை உருவாக்கி அதனுள் இருந்து இலையிலுள்ள பச்சயத்தை அராவி உண்கின்றது. அத்துடன் நுனி இலைகளும் மடிக்கப்பட்டுக் காணப்படும். இத் தாக்கம் கொடியிலையிலும் காணப்படுமாயின் நெல் மணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு விளைச்சல் குறைவடையும்.

இந்த தாக்கத்தை இனங்காணுவதாயின், பாதிக்கப்பட்ட இலைகளில் வெண்ணிற ஒளி ஊடுபுகவிடக்கூடிய நீளப்பாடான கீறல்கள் காணப்படும், உருளை வடிவாக மடிக்கப்பட்ட இலைகள், நுனி இலைகள் மடிக்கப்பட்டு அடி இலையுடன் ஒட்டியவாறு காணப்படும், மடிக்கப்பட்ட இலைகளை அவதானிக்கும் போது அதனுள் மடிச்சுக்கட்டி புழுக்களை அவதானிக்கமுடியும், கிண்ண வடிவான வெண்ணிற முட்டைகளை அவதானிக்கமுடியும், தாக்கம் தீவிரமாக உள்ள வயல் வெளிர்நிறமாக எரிந்த தோற்றத்துடனும் மடிக்கப்பட்ட இலைகள் அதிகமாகவும் காணப்படும். நெல் மடிச்சுக்கட்டியானது இனப்பெருக்க அவத்தையிலேயே பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துவதனால் பயிர் வளர்ச்சிப் பருவத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகளை பின்வரும் நடைமுறைகளைக் கையாளுவதன் மூலம் இதன் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

அதாவது பயிர் நெருக்கமான இடங்களை ஐதாக்கல், வயல் வரம்புகளில் உள்ள களைகளை அகற்றல், சிபார்சு செய்யப்பட்ட அளவு யூரியாப் பாவனை, பாதிக்கப்பட்ட வயலுக்கு வேப்பம் பிண்ணாக்கு இடல் மேலும் இயற்கை எதிரிகளான பறவைகள், ஒட்டுண்ணிகள், குளவிகள் மூலமும் இதன் குடித் தொகை மட்டுப்படுத்தப்படும்.

பூச்சி நாசினிகள் பயன்படுத்தினால் கபில நிற தாவர தத்திகளின் தாக்கம் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறு அதிகம். பூச்சி நாசினிகளினால் இயற்கையாகக் காணப்படும் நன்மை செய்யும் பூச்சிகள் கொல்லப்படுவதனால் இயற்கைச் சமநிலை குழப்பப்படுவதனால் அதிகளவிலான சேதத்தை ஏற்படுத்தும் தத்திகளின் தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும்.

எவ்வாறாயினும் குடலைப் பருவத்தை அண்மித்த பின்னரும் இதன் தாக்கம் காணப்படுமாயின் சிபார்சு செய்யப்பட்ட பூச்சிநாசினியைப் பயன்படுத்தவேண்டும். அதாவது

இரசாயனப்பெயர்-பிப்ரொனில் 50g/l SC, வர்த்தகப் பெயர்-றீஜென்ட், சிபார்சு செய்யப்பட்ட அளவு-30ml/10l.

இரசாயனப்பெயர்-மெதொக்சி பெனோசயிட் 240g/l SC, வர்த்தகப் பெயர்-ரன்னர் SC 240, சிபார்சு செய்யப்பட்ட அளவு-10ml/10l

இரசாயனப்பெயர்-ரெபியுபெனோசயிட் 200g/l SC, வர்த்தகப் பெயர்-மிமிக் 20 F, சிபார்சு செய்யப்பட்ட அளவு -15ml/10l.

இரசாயனப்பெயர்-குளோர்புளுசரோன் 50g/l EC, வர்த்தகப் பெயர்-அட்ரபு ரோன், சிபார்சு செய்யப்பட்ட அளவு -8ml/10l.

இரசாயனப்பெயர்-அசடிரக்ரின் 10g/l EC, வர்த்தகப் பெயர்-அசடிரக்ரின், சிபார்சு செய்யப்பட்ட அளவு-20ml/10l.

இரசாயனப்பெயர்-குறோமபெனோசயிட் 50g/l SC, வர்த்தகப் பெயர்-போடெக்ஸ் குறோமபெனோசயிட், சிபார்சு செய்யப்பட்ட அளவு-10ml/10l.

இரசாயனப்பெயர்-நொவலுரோன் 10g/l EC, வர்த்தகப் பெயர்-றிமொன் 10 EC, சிபார்சு செய்யப்பட்ட அளவு -10ml/10l.

இரசாயனப்பெயர்-குளோரேன்ரனில்புறோல் 20% தயோமெத்தேக்சாம் 20%, வர்த்தகப் பெயர்-வேட்டக்கோ, சிபார்சு செய்யப்பட்ட அளவு-3 gram/10l

500 சதுரமீற்றர் பரப்பில் எழுந்தமானமாக 10 நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டு 10 குடம்பிகள் அவதானிக்கப்பட்டால் அல்லது 25% இலைகள் சேதப்பட்டிருந்தால் மேற்குறிப்பிட்ட பீடைநாசினியொன்றைப் பயன்படுத்தவும். தாக்கம் அடையாளங் காணப்பட்ட பகுதிக்கு மாத்திரம் பீடைநாசினியைச் சரியான அளவில் விசிற வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# புத்தளம் குப்பை களஞ்சியமா?

## மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்









(யாழ்ப்பாணம்)

புத்தளம் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதை எதிர்த்து தொடர்ச்சியாக போராடிவரும் அப்பகுதி மக்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

புத்தளம் மாவட்டத்திற்குட்பட்ட அறுவைக்காடு பகுதியில் கழிவுகளை கொட்டும் நடவடிக்கைக்கு எதிராக ஐம்பது நாட்களாக அப்பகுதி மக்கள் போராடி வருகின்ற மக்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்கள் நேற்று முன்தினம் கவனயீப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ். கைதடியிலுள்ள சித்த மருத்துவ பீடத்திற்கு முன்பாக மாணவர்கள் இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இந்நடவடிக்கையில் மத்திய அரசு இந்நாட்டு மக்களின் சுகாதாரத்தை முன்னிலைப்படுத்தி முடிவுகளை எடுக்கவேண்டும் என்று மாணவர்கள் வலியுறுத்தினர். (இ-9-101)


# கேள்வி அறிவித்தல்

## யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)
## 637, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

பின்வரும் தகுதிகளைக் கொண்டதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.

01. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரும் விண்ணப்பிக்கலாம்.
02. வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
03. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து 23.11.2018 தொடக்கம் 08.12.2018 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 1500.00 செலுத்துவதுடன் உரிய கேள்விப் பிணைகளைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
05. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் செயலாளர், யாழ்.மாவட்ட சி.க.கூ சங்கங்களின் சமாசம், 637, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 08.12.2018 ஆம் திகதியன்று பி.ப 01.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 08.12.2018 ஆம் திகதி 01.15 மணிக்கு திறக்கப்படும்.
06. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் சமாச நிர்வாகத்தின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
07. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியொன்று (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 45 நாட்களுக்குள் செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு (Bid Security) 06.01.2019 வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

| இல | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் வற்வரி இல்லாது | கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் தகமை (ICTAD) | கேள்விப் பிணை தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | யன்னலுக்கான கிறில் செய்து பொருத்துதல் | 0.357 மில். | 45 நாட்கள் | M9/M10 | 3500.00 |
| 02 | தனி மதில், கிறில் வேலைப்பாடுடன் கூடிய மதில் கேற் அமைத்தல் | 0.965 மில். | 45 நாட்கள் | M9/M10 | 9750.00 |

2018.07.09 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் தரப்பட்ட விளம்பரமும் அதனால் பெறப்பட்ட கேள்வி விண்ணப்பங்களும் ரத்து செய்யப்படுகின்றன.

செயலாளர்

(சி/4481)

## பாரதம்

# பாடசாலை வான்-பஸ் விபத்து சாரதி உட்பட 7 சிறுவர்கள் பலி

(சாட்னா)
மத்திய பிரதேசத்தின் சாட்னா மாவட்டத்தில் பாடசாலை வானுடன் பேருந்து மோதியதில், குறைந்தது ஏழு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். வானின் சாரதியும் உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் மேலும் ஏழு பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சாட்னா மாவட்டத்திலுள்ள பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச்சென்றபோது,



எதிரே வந்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த பாடசாலை சிறார்கள் மற்றும் சாரதிக்கு மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதாக டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.


அத்தோடு, காயமடைந்த சிறார்கள் விரைவில் நலம் பெற பிரார்த்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தரமற்ற பாதை அமைப்புகள், அதிகரித்த வாகன நெரிசல், போக்குவரத்து நெறிமுறையை உரிய முறையில் பின்பற்றாமை உள்ளிட்ட பல காரணங்களால் இந்தியாவில் வகைதொகையின்றி வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# மனித வெடிகுண்டாக வெடித்துச் சிதறிய பெண்

(மொஸ்கோ)
ரஷ்யாவின் இளம்பெண் ஒருவர் மனித வெடிகுண்டாக வெடித்துச் சிதறும் முன், 21 முறை "அல்லா என்னை மன்னித்துவிடு" என எழுதி வைத்துவிட்டு வெடித்துச் சிதறிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் செச்சினியாவில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றின் அருகே, ஹிஜாப் அணிந்த ஒரு பெண், பொலிஸாரின் எச்சரிக்கை





யையும் மீறி தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

கரினா ஸ்பிரிடோனோவா என்னும் 25 வயதான அந்தப் பெண் கறுப்பு நிற உடையும், தலையில் ஹிஜாபும் அணிந்து க்ரோஸ்னி பகுதியில் ஆயுதம் ஏந்திய பொலிஸாரை நோக்கி சென்றதைக் கண்டு அவரது சந்தேகத்திற்குரிய நடவடிக்கையினால் பொலிஸார் நின்று அவரது அடையாள அட்டையைக் காட்டும்படி அவரிடம் தெரிவித்தனர்.


அந்த பெண்ணோ நிற்காமல், பொலிஸாரை நோக்கி முன்னேறுவதைக் கண்ட பொலிஸார் சுதாகரித்துக் கொண்டு, எச்சரிக்கும் விதமாக வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுடுகின்றனர்.

அதற்கு அஞ்சாத அந்த பெண் தன் உடலில் கட்டியிருந்த வெடி குண்டை வெடிக்கச் செய்தார். உடல் சிதறி அதே இடத்தில் அந்த பெண் உயிரிழந்த நிலையில் பொலிஸாருக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை.

இந்த தாக்குதல் எதற்காக நடத்தப்பட்டது. இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று தெரியாத நிலையில், அவர் ஐ.எஸ் அமைப்பால் மூளைச்சலவை செய்யப்பட்டவராக இருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர். (4-7)

# பெற்றோல் லொறியில் தீ! ஆறு பேர் உயிரிழப்பு!





(ஹனோய்)
வியட்நாமில் பெற்றோல் ஏற்றிச் சென்ற லொறி தீப்பிடித்து, அருகில் உள்ள வீடுகளை தீக்கிரையாக்கியதில் 6 பேர் உயிரிழந்தனர்.

வியட்நாம் நாட்டின் தெற்கு மாகாணமான பின் புவோக் மாகாணம் சோன்தான் மாவட்டத்தில் நேற்று பெற்றோல் நிரப்பிய ஒரு பெற்றோல் லொறி சென்று கொண்டிருந்தது. அதிகாலை 4 மணியளவில் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் தாறுமாறாக ஓடிய அந்த லொறி, கற்கள் ஏற்றி வந்த மற்றொரு லொறியுடன் மோதியது.

பின்னர் வீதியோரம் உள்ள பிளாட்பாரத்தில் ஏறி மின்கம்பத்தில் இடித்து தள்ளியது. பின்னர் லொறி கவிழ்ந்தது. இதனால் அதில் இருந்த பெற்றோல் வீதியில் கொட்டி தீப்பிடித்தது. இதன் காரணமாக வீதியோரம் இருந்த 16 வீடுகளும் தீப்பற்றி எரிந்தன. வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் அலறியடித்து வெளியே ஓடி வந்தனர். சிலர் தீயில் சிக்கிக் கொண்டனர். பின்னர் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் காயமடைந்தனர். இந்த விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

வியட்நாமில் இந்த ஆண்டில் முதல் 10 மாதங்களில் 3770 தீவிபத்துகள் மற்றும் வெடிவிபத்துகள் ஏற்பட்டுள்ளதாகவும், இதில் 91 பேர் உயிரிழந்ததாகவும் தீயணைப்புத்துறை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (4-7)

# கஷோக்கி படுகொலையில் ... பங்கு இருக்கா?, இல்லைய...

## அமெரிக்க செ...

(வோஷிங்டன்)
அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் சபை வெளியுறவுத்துறை கமிட்டி, ட்ரம்புக்கு கிடுக்கிப்பிடி போட்டுள்ளது.

சவுதி அரேபிய ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி (வயது 60), துருக்கி நாட்டின் இஸ்தான்புல் சவுதி துணை தூதரகத்தில் வைத்து கடந்த மாதம் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். சவுதியின் மன்னராட்சியையும், இளவரசர் முகமது பின் சல்மானையும் கடுமையாக விமர்சித்து எழுதி வந்த அவரது படுகொலை, உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தப் படுகொலை, சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் உத்தரவின்பேரில் தான் நடந்துள்ளது என அமெரிக்க மத்திய உளவு நிறுவனம் சி.ஐ.ஏ. தெரிவித்தது.

நேற்று முன்தினம் இது பற்றி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கருத்து வெளியிட்டார். அப்போது கஷோக்கி படுகொலையை இளவரசர் முகமது பின் சல்மான் நன்றாக அறிந்திருப்பார் என ஒப்புக் கொண்டார்.

ஆனால் தொடர்ந்து தெரிவிக்கும்போது, " அவர் இதை செய்திருக்கலாம் அல்லது செய்யாமலும் இருக்க லாம்" என்றும் தெரிவித்தார்.

பின்னர் அவர் தெரிவிக்கையில், "கஷோக்கி படுகொலையில் சி.ஐ.ஏ. 100 சதவீதம் உறுதியாக கூறவில்லை" எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் சபை வெளியுறவுத்துறை கமிட்டி, ட்ரம்புக்கு கிடுக்கிப்பிடி போட்டுள்ளது.

கஷோக்கி படுகொலையில் இளவரசர் முகமது பின் சல் மானுக்கு பங்கு உண்டா, இல்லையா என்பதை

# கரையொதுங்கிய ... வயிற்றுக்குள் 6 கி...

(ஜகார்த்தா)
இறந்து கரையொதுங்கிய திமிங்கிலத்தின் வயிற்றுக்குள் இருந்து சுமார் 6 கிலோ கிராம் பிளாஸ்ரிக் கழிவுகள் இருந்ததை பார்த்து சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் அதிர்ச்சிக்குள்ளாகிய சம்பவமொன்று இந்தோனேஷியாவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த திமிங்கிலத்தின் வயிற்றுக்குள் 115 பிளாஸ்ரிக் கோப்பைகளும் 25 பிளாஸ்ரிக் பைகளும் பிளாஸ்ரிக் போத்தல்களும் கிழிந்த தார்பாய் துண்டுகள், செருப்பு போன்ற குப்பைகளும் என மொத்தம் 6 கிலோ கிராம் பிளாஸ்ரிக்



# இந்தியாவில் நிமோனியாவால் 2 நிமிடங்களுக்கு ஒரு குழந்தை பலி

(டில்லி)
வயிற்றுப்போக்கு மற்றும் நிமோனியா எனப்படும் நுரையீரல் அழற்சி நோய்க்கு இந்தியாவில் 2 நிமிடத்துக்கு ஒரு குழந்தை உயிரிழப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வயிற்றுப்போக்கு மற்றும் நிமோனியா எனப்படும் நுரையீரல் அழற்சி நோய்க்கு 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பெருமளவில் தாக்குகிறது.

இங்கு தினமும் 735 குழந்தைகள் இறக்கின்றன. இதன்படி குறித்த நோய்க்கு இந்தியாவில் 2 நிமிடத்துக்கு ஒரு குழந்தை உயிரிழப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

வயிற்றுப்போக்கு மற்றும் நிமோனியாவை தடுக்க அதற்கான தடுப்பூசிகள் போடப்பட வேண்டும். குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

அவ்வப்போது தேவையான நோய் எதிர்ப்பு சக்தி மருந்து மாத்திரைகள் வழங்கப்பட வேண்டும் என அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த நோய் வராமல் தடுக்கும் தற்காப்பு நடவடிக்கைகள் இந்தியாவில் முன்னேற்றம் அடைந்துள்ளன. ஆனால் அதற்கான சரியான சிகிச்சை முறைகள் செயற்படுத்தப்படுவதில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# போரில் பாதிக்... பிரித்தானியா 1...




(லண்டன்)
யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மனநலத்தை உயர்த்துவதற்காக பிரித்தானிய அரசாங்கம் மேலதிக 11 மில்லியன் நிதியுதவி வழங்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்தானில் வாழும் அகதிகளின் மனநல சுகாதாரம் மற்றும் உளவியல் ஆதரவுக்காக மேலதிகமாக 6.1 மில்லியனும் லெபனானில் வாழும் சிரிய அகதி குழந்தைகள்

# வெளிநாடு

## ...யில் சவுதி இளவரசருக்கு ...லையா? என ட்ரம்ப் கூறவும்

### செனட்சபை கிடுக்குப்பிடி



ட்ரம்ப் கூற வேண்டும் என்று அந்த கமிட்டியின் குடியரசு கட்சி மற்றும் ஜனநாயக கட்சி தலைவர்களான பாப் கார் க்கரும், பாப் மெனன்டசும் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் குளோபல் மேக் னிட்ஸ்கை மனித உரிமை பொறுப்புடைமை சட்டத் தின்படி ட்ரம்புக்கு முறைப்படி கூறி உள்ளனர். இதில் ட்ரம்ப் 120 நாட்களில் பதில் அளிக்க வேண்டும் என்பது குறிப் பிடத்தக்கது . (4-7)

## ஜமால் கஷோக்கி கொலையுடன் இளவரசருக்கு தொடர்பில்லை

### -சவுதி மீண்டும் உறுதி-


(ரியாத்)

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொலைக்கும், சவுதி இளவரசர் மொஹமட் பின் சல்மானுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என, சவுதி வெளியுறவுத்துறை அமைச்சர் அடெல் அல்-ஜுபைர் மீண்டும் உறுதியளித்துள்ளார்.

கஷோக்கி கொலையுடன் சவுதி இளவரசருக்கு தொடர்பு இருப்பதாக தெரிவித்து, அது தொடர்பான விசாரணைகளுக்கு அமெரிக்க காங்கிரஸ் வலியுறுத்திய நிலையிலேயே சவுதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கஷோக்கி கொலை தொடர்பான விசாரணைகள்





முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், கொலையுடன் தொடர்புடையவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், தமது பேரரசர் மற்றும் இளவரசர் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகளை சகித்துக் கொள்ளப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கொலை தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறும், தகவல்கள் கசியவிடப்படுவதை நிறுத்துமாறும் வெளியுறவுத்துறை அமைச்சர் துருக்கியிடம் வலியுறுத்தியுள்ளார்.

சவுதி அரேபியாவின் ஆட்சியாளர்களை கடுமையாக விமர்சித்து வந்த ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி துருக்கி தலைநகரான இஸ்தான்புலிலுள்ள சவுதி அரேபிய தூதரகத்துக்கு கடந்த ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி சென்றிருந்த நிலையில் காணாமல் போன நிலையில், பின்னர் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...யே திமிங்கிலத்தின் ... கிலோ பிளாஸ்ரிக்



கழிவுகளை மீட்டுள்ளனர்.

இது குறித்து கடல்வாழ் உயிரினங்கள் பாதுகாப்பு அமைப்பான 'டபிள்யூ.டபிள்யூ.எப்.இந்தோனேசியா' வைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர் திவி சுப்ரப்தி கூறும்போது, திமிங்கிலத்தின் இறப்புக்குக் காரணம் தெரியவில்லை. எனினும், பிளாஸ்ரிக் கழிவுகளும் காரணமாக இருக்கலாம் என்றார். (4-7)

## மலேசிய - பாகிஸ்தான் பிரதமர்கள் சந்திப்பு

(கோலாலம்பூர்)

மலேசியா பிரதமர் மஹதிர் முஹம்மதுவை நேற்று முன்தினம் சந்தித்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தனது நாட்டை மீள்கட்டமைப்பு செய்ய அந்நாட்டின் பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிப்பதாகத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமராக பொறுப்பேற்ற இம்ரான்கான் அந்நாடு ஏராளமான நிதிச்சுமையில் சிக்கி தவிப்பதாக தெரிவித்தார்.

உலக வங்கி, சர்வதேச நிதியம் மற்றும் சில நாடுகளிடம் இருந்து கடன் பெற்று, நலிவடைந்த பொருளாதார நிலையில் இருந்து நாட்டை முன்னேற்றுவதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டு வருகிறார். அரசு தரப்பில் பல்வேறு சிக்கன நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுள்ளார்.

சுமார் 20 ஆயிரம் கோடி டொலர்கள் அளவுக்கு நிதிச் சுமையில் சிக்கியுள்ள பாகிஸ்தானில் இந்த ஆண்டுக்கான அரசு செலவினங்களுக்கு மட்டும் 1200 கோடி டொலர்கள் பணம் தேவைப்படும் நிலையில் அண்மையில் இம்ரான்கான் சவுதி அரேபியா நாட்டுக்குச்சென்றார்.

பாகிஸ்தான் நாட்டுக்கு கடனுதவியாக 600 கோடி டொலர்களை அளிக்க சவுதி அரசு முன்வந்துள்ளது.

இதேபோல் நிதி திரட்டும் நோக்கத்துடன் 4 நாட்கள் பயணமாக கடந்த வாரம் சீனாவுக்கு சென்ற இம்ரான்கான், சீன பிரதமர் லீ கெகியாங்-ஐ சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்த சந்திப்பின்போது பாகிஸ்தானுக்கு சீனா 600 கோடி டொலர் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

பாகிஸ்தானுக்கு மேலும் சுமார் 600 கோடி டொலர்கள் நிதி திரட்டும் நோக்கத்தில் இம்ரான்கான் கடந்த வாரம் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் சென்றார்.

இந்நிலையில், அடுத்த கட்டமாக இருநாள் அரசுமுறை பயணமாக மலேசியாவுக்கு வந்துள்ள இம்ரான்கான் நேற்று முன்தினம் கோலாலம்பூர் நகரில் அந்நாட்டின் பிரதமர் மஹதிர் முஹம்மதுவை சந்தித்துப் பேசினார்.

பின்னர் அவருடன் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த இம்ரான்கான், (மஹதிர்) உங்களைப் போலவே ஊழல் ஒழிப்பை மையப்படுத்தி நானும் மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்திருக்கிறேன். கடன் சுமையில் இருந்து பாகிஸ்தானை விடுவிப்பதற்காக மலேசியாவின் முன்னேற்றப் பாதையை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம் என்று தெரிவித்தார்.

குறிப்பாக, மலேசிய பிரதமராக மஹதிர் முஹம்மது (வயது-93) பொறுப்பேற்ற பின்னர் தனிநபர் வருமானம், உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றை அதிகரிக்கச் செய்து, இந்நாட்டை பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றிய அவரது அனுபவத்தின் மூலமாக அவரிடம் இருந்து நான் நிறையக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன் எனவும் இம்ரான்கான் குறிப்பிட்டார்.

மேலும், மலேசியா நாட்டின் ஊழல் ஒழிப்பு கண்காணிப்பகத்தின் தலைமை அலுவலகத்தையும் இம்ரான்கான் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டார்.

இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்ட 51 ஆண்டுகால வரலாற்றில் இந்த அலுவலகத்துக்கு வருகைதந்த முதல் வெளிநாட்டு பிரதமர் என்ற முறையில் இம்ரான்கானை மலேசியா ஊழல் ஒழிப்பு கண்காணிப்பகத்தின் தலைமை ஆணையாளர் முஹம்மது ஷுக்ரி அப்துல் வரவேற்று இந்த அமைப்பு இயங்கிவரும் முறை பற்றி விளக்கம் அளித்தார்.

ஊழல் தொடர்பாக இந்த அமைப்பு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதும் பண உச்சவரம்பு உள்ளதா? என்ற இம்ரான்கானின் சந்தேகத்துக்குப் பதிலளித்த அவர், 5 ரிங்கிட் (இந்திய மதிப்புக்கு 85 ரூபாய்) ஊழல் என்றாலும் நாங்கள் விசாரணை நடத்த உரிமை உண்டு என்று விளக்கம் அளித்தார்.

நீதிபதிகள், இராணுவ அதிகாரிகள் தொடர்பான புகார்களை விசாரிக்கவும் உங்களுக்கு அதிகாரம் உண்டா? என்ற இம்ரான்கானின் மற்றொரு கேள்விக்கு பதில் அளித்த முஹம்மது ஷுக்ரி அப்துல், எங்கள் நாட்டின் சட்டத்தின் முன் அனைவரும் சமம். நாங்கள் யாருக்கும் பாரபட்சம் பார்ப்பதில்லை.

தேவைப்பட்டால் உங்கள் நாட்டின் (பாகிஸ்தான்) ஊழல் ஒழிப்புத்துறை அதிகாரிகளை எங்களிடம் அனுப்பி வையுங்கள்.

அவர்களுக்கு பயிற்சி அளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## ...திக்கப்பட்ட சிறார்களுக்கு ...யா 11 மில்லியன் நிதியுதவி



மற்றும் அவர்களின் கவனிப்பாளர்களுக்காக மேலதிகமாக 5 மில்லியனும் வழங்கப்படுமென சர்வதேச அபிவிருத்தி செயலாளர் பென்னி மோர்டன்ட் தெரிவித்துள்ளார்.


12,000 க்கும் அதிகமான அகதிக் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இந்தப்பணம் உதவியாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்தானுக்கு நேற்றுமுன்தினம் ஒதுக்கப்பட்ட மேலதிக 6.1 மில்லியன் நிதி, அகதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட ஜோர்தானியர்களுக்கான மனநல ஆரோக்கியம் மற்றும் உளவியல் ஆதரவுகளை வழங்குவதற்காக சர்வதேச மருத்துவப் படைகளிடம் வழங்கப்படும். இந்தத் திட்டம் 2021 ஆம் ஆண்டு வரை முன்னெடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பிரித்தானிய அரசாங்கம் லெபனானிலுள்ள யுனிசெப் நிறுவனத்திற்கு 60 மில்லியனை வழங்கிவருகிறது. நேற்றுமுன்தினம் மேலும் 5 மில்லியன் நிதியுதவி கூடுதலாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

10,000 க்கும் மேற்பட்ட சிரிய அகதிக்குழந்தைகள் மற்றும் அவர்களின் கவனிப்பாளர்களுக்கு ஒரு கல்வித் திட்டத்தை வழங்கவும் உளவியல் ஆதரவுகளை வழங்கவும் இந்தப் பணம் பயன்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## கடலில் மூழ்கிய 12 இந்தியர்கள் பிரான்ஸ் கடற்படையினரால் மீட்பு



(டில்லி)

பாரசீக வளைகுடா கடலில் மூழ்கிய சரக்கு கப்பலில் உயிருக்கு போராடிய 12 இந்தியர்களை பிரான்ஸ் நாட்டு கடற்படை வீரர்கள் மீட்டு, காப்பாற்றியுள்ளனர்.

இந்திய பெருங்கடலில் பாரசீக வளைகுடா பகுதியில் பிரான்ஸ் நாட்டுக்கு சொந்தமான கடற்படை கப்பல் நேற்று முன்தினம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தது.

அப்போது, அப்பகுதியில் மூழ்கி கொண்டிருந்த ஒரு கப்பலில் இருந்து அபாய அழைப்பு வருவதை கடற்படையினர் கவனித்தனர்.

இரு விமானிகள், ஒரு நீச்சல் வீரர் மற்றும் ஹெலிபேட் இயக்குபவர் ஆகியோருடன் 7 கடல் மைல்கள் தூரத்தில் அழைப்பு வந்த இடத்தை நோக்கி ஒரு விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டது.

அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் கரிபியன் கடலுக்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள இரட்டை தீவு நாடான செயிண்ட் கிட்ஸ் மற்றும் நேவிஸ் நாட்டுக்கு சொந்தமான 'தர்பார் குயீன்' என்னும் சரக்கு கப்பல் முற்றிலுமாக மூழ்கிய நிலையில் அதில் இருந்த சிலர் கப்பலின் மேல் பகுதியில் தொற்றியவாறு உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதை மீட்புப் படையினர் கவனித்தனர்.

உடனடியாக கடலின் மீது மிதவை ஹெலிபேட் அமைத்து மூழ்கிய கப்பலின் நுனிப் பகுதியில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 4 பேரை முதல்கட்டமாக மீட்டனர். அவர்களை அவ்வழியாக வந்த ஒரு வர்த்தக கப்பலில் இறக்கிவிட்டு மீண்டும் மூழ்கிய கப்பலுக்கு சென்றனர்.

இரண்டாவது கட்டமாக 4 பேரையும், மூன்றாவது கட்டமாக 4 பேரையும் பத்திரமாக மீட்டு, அருகாமையில் உள்ள பிரான்ஸ் கடற்படைக்கு சொந்தமான கஸார்ட்ஸ் என்ற கப்பலுக்கு கொண்டு வந்தனர். மீட்கப்பட்ட 12 பேரும் இந்தியர்கள் என தெரிய வந்துள்ள நிலையில் அவர்களில் சிறு காயங்களுடன் இருந்தவர்களுக்கு அந்த கப்பலில் இருந்த மருத்துவ குழுவினர் முதலுதவி சிகிச்சை அளித்தனர்.

பின்னர், அவர்கள் 12 பேரும் பிரிட்டன் நாட்டு சொகுசு கப்பலான 'சீ பிரின்சஸ்' மூலம் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேற்கண்ட தகவல் டில்லியில் உள்ள பிரான்ஸ் நாட்டின் தலைமை தூதரகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது. (4-7)

## மைத்திரிக்கு இனி இடமில்லை

# ஐ.தே.கவை சேர்ந்தவரே ஜனாதிபதி வேட்பாளர்

## நவீன் திஸாநாயக்க உறுதி



(கொழும்பு)

முன்பு குறிப்பிட்டதைப் போல ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஒருவரையே ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறக்கப் போவதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த ஓரிரு தினங்களாக சபாநாயகர் கரு ஜெயசூரியவிற்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன்போது சபாநாயகர் மற்றும் எனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாட்டு மக்களுக்கு ஒன்றைக் கூறவேண்டும், சபாநாயகரின் நிலைப்பாடு வேறு. எனது நிலைப்பாடு வேறு. அவர் எங்கு பெரும்பான்மை இருக்கின்றதோ அதற்கு சார்பாகவே கருத்துக்களை கூறி வருகின்றார்.

குறிப்பாக 2015 ஆம்ஆண்டு சபாநாயகராக கருஜெயசூரியவை நியமிப்பதற்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்காத இவர்கள் கடந்த சில நாட்களாக அவர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர்.

அதேநேரம் நான் சபாநாயகருக்கு அழுத்தம் விடுப்பதாக தயாசிறி ஜெயசேகர கூறியுள்ளார்.

நான் அறிந்த வகையில் கரு ஜெயசூரியவை அவ்வாறு முடக்க முடியாது.

பெரும்பான்மை இல்லாமையினாலேயே தயாசிறி இவ்வாறு பேசுகின்றார்.

நான் மகாநாயக்க தேரர்களைச் சந்திக்கச் சென்றபோது ஊடகங்களுக்கு ஒருவிடயத்தைக் கூறியிருந்தேன்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஒரு பொது வேட்பாளரை முன் நிறுத்துவதாகக் கூறியிருந்தேன்.

அதன்மூலம் நாம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஒருவரையே பொது வேட்பாளராகக் களமிறக்குவோம் என்பதைக் கூறியிருந்தேன்" என நவீன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மரம் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிப்பு





(தலவாக்கலை)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் தலவாக்கலை மல்லியப்பு பகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் 200 வருடம் பழைமைவாய்ந்த பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததனால் அவ் வீதியூடான பொது போக்குவரத்து பல மணி நேரம் ஸ்தம்பிதமடைந்துள்ளதோடு, அப்பகுதிக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த மரம் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். மேலும் மரத்திற்குக்கீழே இருந்த ஆலயம் ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சிறிய வாகனங்கள் மட்டும் விழுந்த மரத்தின் ஊடாக செல்கின்ற அதேவேளை, கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலையிலுள்ளன.

எனினும், இந்த மரத்தினை வெட்டி அகற்றும் பணியில் பிரதேச பொதுமக்களும் தலவாக்கலை மற்றும் லிந்துலை பொலிஸாரும் செயற்பட்டு வருகின்றனர்.

அத்தோடு, மின்சார இணைப்புகளைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளில் லிந்துலை மின்சார சபையினர் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு புகையிரதத் தொகுதி இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் புகையிரதத் தொகுதியின் முதலாவது தொகுதி அடுத்த வாரம் இலங்கைக்குக் கொண்டு வரப்படும் எனப் புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்ணாண்டோ தெரிவித்தார்.

அவற்றில் இரண்டு புகையிரத இயந்திரங்களும் புகையிரதப் பெட்டிகளும் உள்ளடங்குகின்றன. இவ்வாறு கொண்டு வரப்படும் புகையிரதத் தொகுதியின் முதலாவது பரீட்சார்த்த பயணம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் இடம்பெறவுள்ளது.

அதன் தரத்தின் அடிப்படையில், இயந்திரப் புகையிரதத் தொகுதிகளும் இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புகையிரதக் கட்டணங்கள் அதிகரித்த நிலையில், புகையிரதத் திணைக்களத்தின் வருமானமும் அதிகரித்திருப்பதாக புகையிரதப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். புகையிரதக் கட்டணங்களுக்கு அமைய புதிய பயணச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பலபிட்டிய பிரதேச சபையில் அமைதியின்மை

பலபிட்டிய பிரதேச சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தின் போது அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து சபைக்கு வந்தமை காரணமாக இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

இதன்போது பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் கறுப்புப்பட்டி அணிந்து வந்திருந்தனர்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் சட்டவிரோதமாக செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சபாநாயகர் கரு ஜெயசூரியவே சட்டவிரோதமாகச் செயற்படுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் எதிர்ப்புத்தெரிவித்துள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அணுகுமுறை

அடுத்தவர்கள் மனசு புண்படாமல் நடந் துகொள்கிறது என்பது ஒரு தனிக் கலை.

இந்த உலகத்திலே எல்லோரும் இந்த ஒரு விடயத்தை மட்டும் சரியாகக் கடைப் பிடித்தால் போதும் எல்லோரும் சந்தோசமாக இருந்து விட்டுப் போய் விடலாம். இதைவிட பெரிய கலை ஒன்று இருக்கு. அது எது தெரியுமா?

ஒருத்தர் ஒரு தவறு செய்கிறார். அவர் செய்த தவறை அவருக்கு நாசுக்கா சுட்டிக் காட்ட வேண்டும்!

அதேநேரத்தில் அவருக்கு நம்மிடம் கோபமோ வருத்தமோ வரக் கூடாது! இது ஒரு தனிக்கலை தான்.

சில பேருக்கு இது கைவந்த கலையாக இருந்திருக்கு. அவர்கள் எல்லாம் வாழ்க்கையிலே வெற்றிகரமாக இருந்திருக்கின்றார்கள்!

"சார்லஸ் ஸ்வாப்" என்று ஒருத்தர். பல இரும்பு ஆலைகளுக்குச் சொந்தக்காரர் அவர். சிறந்த நிர்வாகி என்று பெயர் எடுத்தவர். பகல் உணவு வேளையில் தொழிற்சாலையை சுற்றிப் பார்த்து விட்டு வரலாம் என்று புறப்பட்டார். அவர் பாட்டுக்கு ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டு போய்க்கொண்டேயிருந்தார். ஒரு இடத்திலே தொழிலாளர்கள் சிலபேர் இயந்திரங்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு புகைப்பிடித்துக்கொண்டிரு ந்தார்கள்! அவர்கள் தலைக்கு மேலேயே ஒரு அறிவிப்பு பலகை. அதிலே என்ன எழுதியிருக்கு தெரியுமா?

"இங்கே புகை பிடிக்காதீர்கள்!" என்று எழுதியிருக்கு! அந்த இடத்திலே செய்யக்கூடாத ஒரு காரியத்தை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள்! ஆலை அதிபர் இதைப் பார்த்தார். அவர் கொஞ்சம் கூடக் கோபப்படலை, சத்தம் போட்டு பேசவில்லை. அவர் என்ன செய்தார் தெரியுமா?

தன்னுடைய பையிலே இருந்த விலையுயர்ந்த சுருட்டுப் பெட்டியை எடுத்தார். அதை எடுத்துப் பிரித்தார். ரொம்ப உயர்ந்த ரக சுருட்டு! அங்கே இருந்த தொழிலாளிகள் எல்லோருக்கும் ஆளுக்கு ஒன்று கொடுத்தார். கொடுத்திட்டுச் சொன்னார்,

இது ரொம்ப அருமையான சுருட்டு. பிடித்துப் பாருங்க! அதன்பிறகு சொல்லுங்க! ஆனால் ஒன்று! இதை நீங்க இங்கேயே புகைக்க வேண்டாம். வெளியே போய் புகைத்துப் பாருங்கள்.

இப்படிச் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டுப் போய் விட்டார். அதன்பிறகு அவர்கள் அந்தத் தவறைச் செய்யவில்லையாம்! நமக்கெல்லாம் இது மாதிரி ஒரு காட்சியைப் பார்த்தால் உடனே கோபம் வந்திடும். அது தான் கஷ்டம்.

பிரபலமான போட்டோகிராபர் ஒருத்தர் இருந்தார். பிரபலமான நடிகையை போட்டோ எடுக்கிறதுக்காகப் போனார். போட்டோ எடுத்தார். அதை பிரிண்ட் போட்டுக் கொண்டு போய்க் கொடுத்தார்.

அந்த அம்மா வாங்கிப் பார்த்தார்! அவருக்கு ஒரே கோபம்! போட்டோ நல்லா இல்லையாம் !

"நீங்க ஐந்து வருடத்துக்கு முன்னாடி ஒருதரம் என்னைப் போட்டோ எடுத்தீங்க! அது அழகா இருந்தது! அது மாதிரி இது அழகாக இல்லையே" என்று சத்தம் போட்டாங்க!

போட்டோகிராபர் மனசுக்குள்ளே நினைத்துக் கொண்டார் ஐந்து வருடத்துக்கு முன்னாடி இந்த அம்மா இளமையாக இருந்தார்! இப்போது வயதாகிவிட்டது! அது யாருடைய குற்றம்! இதை மனதிலே நினைத்துக்கொண்டார். ஆனால் அந்த அம்மாவிடம் இவர் என்ன சொன்னார் தெரியுமா?

"சொரி மடம்! ஐந்து வருடத்துக்கு முன்னாடி நான் இதைவிட இளமையாக இருந்தேன்! இப்போது வயதாகி விட்டது! அதனாலே முன்னாடி மாதிரி திறமையாக படம் எடுக்க முடியலை என்று நினைக்கிறேன்!" என்றார்.

அவ்வளவு தான்!

அந்த அம்மா அதை ஒத்துக்கொண்டு சமாதானமாகிவிட்டார்! இதுதான் நான் சொன்ன அந்த "தனிக்கலை"

ஆனால் ஒரு விடயம்,

இந்தக் கலையை சாமர்த்தியமாகப் பயன்படுத்திறதும் ஒரு கலை. சாமர்த்தியமாகப் பயன்படுத்தவில்லை என்றால் என்ன ஆகும் தெரியுமா?

என் சிநேகிதனுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்!

அவன் என்ன செய்திருக்கிறான்...?


ஒரு நாள் காலையிலே எழுந்து உட்கார்ந்திருக்கிறான். அவன் மனைவி கோப்பி போட்டுக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்! கோப்பி நல்லாவே இல்லே! இதை நாசுக்கா மனைவி மனசு புண்படாமல் சொல்லுறது எப்படி என்று யோசித்திருக்கிறான்! நான் சொன்ன யோசனை ஞாபகத்துக்கு வந்திருக்கு. உடனே அதை எப்படி பயன்படுத்தியிருக்கிறான் தெரியுமா?

நீ கொடுத்த கோப்பி நல்லா இல்லை என்று சொல்லுறதுக்குப் பதிலாக இப்படிச் சொல்லியிருக்கிறான்.

"இதோ பாரு டார்லிங்! நேற்றுக் காலையிலே இந்தத் தெரு முனையிலே இருக்கிற கடையிலே ஒரு டீ குடித்தேன். ரொம்ப நல்லா இருந்தது" என்று சொல்லியிருக்கிறான். அவ்வளவுதான். விளைவு என்ன தெரியுமா? அப்படியென்றால் நீங்கள் தினமும் அந்த தெரு முனை கடையிலேயே டீ குடித்துக் கொள்ளுங்கள். வீட்டிலே கோப்பி கிடையாது என்று சொல்லிவிட்டார்.

இப்போதெல்லாம் தினமும் காலையிலே அந்தத் தெருமுனை டீ கடையிலே அவனை தவறாமல் சந்திக்கிறது உண்டு! இப்ப அவன் என்னிடம் முகம்கொடுத்து பேச மாட்டேன் என்கிறான். என் யோசனைகளையும் கேட்க மாட்டேன் என்கிறான்.

# கலியுகம் கண்ட அவதாரம்



**பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 93 ஆவது அவதார தினத்தையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

அனைத்து மதங்களும் அந்த ஒரு இறைவன் புகழையே பாடுகின்றன. அனைத்து மொழிகளிலுமுள்ள இறை நாமங்கள் யாவும் ஒரே இறைவனையே அழைக்கின்றன. நாம ரூபங்களைக் கடந்து எங்கும் சூட்சுமமாய் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வீகப் பேராற்றலை உணர்ந்தவர்களும் அனுபவத்தில் கண்டவர்களும் மிகச் சிலரே. பரப்பிரம்மம் தன்னை ஒடுக்கி மனிதவுருவத்தில் தோன்றி அவதாரம் என்று பிரகடனம் செய்து அதற்கான அத்தாட்சிகளை நிரூபித்த போதும் அதை உணர்ந்து தெரிந்து அறிந்து அனுபவித்தவர்கள் பெரும் பாக்கியசாலிகளே.

1918 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி விஜயதசமி அன்று இம் மண்ணுலகை நீப்பதற்கு முன்பு பகவான் சீரடி சாயி பாபா தனது நெருங்கிய அடியவர்களுக்கு எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் வருவேன் என்று கூறிய உறுதி மொழிக்கு இணங்க 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி புட்டபர்த்தி எனும் குக்கிராமத்தில் சத்ய நாராயணன் என்னும் நாமத்தோடு பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா இப்பூவுலகிற்குள் அன்னை ஈஸ்வராம்பாளினூடாகப் பிரவேசித்தார். இவரது அவதார தினத்திற்கு மறுநாள் பகவான் ஸ்ரீ அரவிந்தர் "ஸ்ரீ கிருஷ்ணர் வெளதீகமாக இப் பூவுலகிற்குள் வந்து விட்டார்" என்று உலகிற்குப் பிரகடனம் செய்தார். சாயி பாபா தனது 14 ஆவது வயதில் யான் உலகிற்குரியவன். எனது பணியைத் தொடங்கப்போகிறேன் என்று கூறி வீட்டைத் துறந்து சென்றவர் தான் சாயி பாபா என்பதை மலர்களைத்தூவிதனதுபெயரை வெளிப்படுத்தினார்.

"புதிய மதம் எதையும் தோற்றுவிப்பதற்காக நான் வரவில்லை. அது என்னுடைய அவதார நோக்கமும் இல்லை. அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்கள் அந்தந்த மதங்களில் கூறப்பட்டுள்ள உன்னத கோட்பாடுகளை உண்மையுடனும் நம்பிக்கையுடனும் முழு மனதுடனும் பின்பற்றிஒழுக வேண்டும். யாரும் மதம் மாறத் தேவையில்லை. எல்லா மதங்களுமே உன்னதமானவையே" என்று கூறி உண்மை நிலையை உணர்த்தினார். இவற்றுக்கு மேலாக ஒரு படி முன்னேறிச் சென்று "உலகத்திலிருப்பது ஒரே ஒரு மதம் அது அன்பு மதம். ஒரேயொரு இனம் அது மனித இனம். ஒரேயொரு கடவுள் அவர் என்றும் எங்கும் நிறைந்தவர்"

"ஒவ்வொரு நாள் வாழ்வையும் அன்பில் தொடங்கி அன்பால் நிரப்பி அன்பைப் பகிர்ந்து அன்போடு களித்து அன்போடு முடியுங்கள். எப்போதும் ஆனந்தமாக இருங்கள். இறை நாமமே கலியுகத்தின் அதி உன்னத சாதனை" எனப் பறைசாற்றினார்.

மனித வாழ்வு உயர்ந்து உன்னதமடைய சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்னும் ஐந்து மனித விழுமியங்கள் மனிதரில் வெளிக்கொணரப்பட வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் மனமாற்றம் பெற வேண்டும்.

சாயி அன்பர்கள் தமது இல்லங்களில் தாம் வழிபடும் தெய்வங்களின் உருவப்படங்களுடன் சாயியின் உருவப்படத்தையும் இணையாக வைத்து வழிபாடு செய்கின்ற அளவிற்கு அவர் மனித உருவில் வந்த தெய்வமே என்பதை நிரூபித்து விட்டார்.

உலகெங்குமுள்ள சத்ய சாயி நிறுவனங்கள் சுவாமியால் வகுக்கப்பட்ட ஒன்பது கோட்பாடுகள், பத்துக் கட்டளைகள் இவற்றை யேற்று வியாழக்கிழமைகளில் ஒன்றுகூடி பஜனைப் பாடல்கள் இசைத்து மகிழ்வர். நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு சேவைத் திட்டங்கள், ஆன்மீக சாதனைகள், சத்சங்கங்கள் என்பவற்றில் பங்கு கொண்டு தன்னையுணர்தல் என்ற உயர் இலக்கை நோக்கிய வாழ்க்கைப் பயணத்தில் தம்மை ஈடுபடுத்துவர். சிறு பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி சுவாமியின் கட்டளைக்கு இணங்க பாலவிகாஸ் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பாடசாலைக் கல்வியுடன் ஒருவன் ஆன்மீகக் கல்வியையும் கற்பதனால்தான் வாழ்வை முழுமையடைச் செய்து மனிதன் மனிதனாக வாழும் நிலையை அடைய முடியும்.

எப்போதும் உதவி செய். ஒருபோதும் ஒருவருக்கும் தீங்கு செய்யாதே. எல்லோரையும் நேசி. எல்லோருக்கும் சேவை செய் என்ற சுவாமியின் தாரக மந்திரத்திற்கேற்ப ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களினால் கிராம எழுச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பல வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல், உலர் உணவுப் பொதிகள் வழங்கல், வைத்திய சேவைகளும் ஆலோசனைகளும் வழங்கல், சுகாதார சேவைகள், குடிநீர் வசதிகள், மனித மேம்பாடுகள், பெற்றோரியல், சிறுகைத்தொழில் உதவிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு உதவிகள் போன்ற இன்னோரன்ன சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இரத்ததானம், இடர் கால சேவைகள், தலைமைத்துவப் பயிற்சி, முதியோர் இல்ல சேவைகள், நன்னடத்தைப் பாடசாலை பிள்ளைகளுக்கான வழிகாட்டல் சேவைகள் போன்ற பல்வேறு சேவைகள் செய்யப்பட்டு வருகின்றன.

எனது வாழ்வே எனது செய்தி என்று கூறிய பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா தானே பாரிய அளவில் பல செயற்றிட்டங்களை நிறைவு செய்துள்ளார். பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்களை நிறுவி இலவசக் கல்வியை வழங்கி வருவதுடன் அங்குள்ள மாணவர்கள் ஒரு உதாரண புருஷர்களாக சமூகத்தில் மிளிரவும் வைத்துள்ளார்.

ஏழை மக்களின் வசதி கருதி பாரிய வைத்தியசாலைகள் அமைத்து இலவச மருத்துவ சத்திர சிகிச்சைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்த்து நீர் வழங்கல் திட்டங்களை நிறைவு செய்துள்ளார்.

தன் இறைத் தன்மையை நிரூபிப்பதற்காக சுவாமியால் செய்யப்பட்ட அற்புதங்கள் எண்ணிலடங்கா, சனாதன தர்மத்தை மீளவும் ஏற்படுத்தி உங்கள் ஒவ்வொருக்குள்ளும் இருக்கும் தெய்வீகத்தை மலரச் செய்யவே யான் வந்துள்ளேன்.

எமக்குள் இருக்கும் மிருக குணங்கள் அழிக்கப்பட்டு மனித குணம் மேலோங்கி தெய்வீக நிலைக்கு மனிதன் உயர வேண்டும் என்பதே அவதார நோக்கு. சுவாமியால் அருளப்பட்ட ஆன்மீகக் கருத்துக்கள் பல அருளுரைகளாகவும் வாகினிகளாகவும் நூல் வடிவு பெற்றுள்ளன. எமது சந்ததியினருக்கான அழியாத சொத்துக்களாக இவை வழிகாட்டும்.

**ஜெய் சாயி ராம்
அ.ஜெகநாதன்
யாழ்ப்பாணம்.**

# ஓம் ஸ்ரீசாயி ராம்

பிரபஞ்சப் பேருணர்வு. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூமியில் அவதரிக்கும். எங்கே எப்போது என்ன வடிவில் அவதரிப்பதை அந்தப்பேருணர்வு(கடவுள்) காலம், இடம், சந்தர்ப்பம் ஆகியவற்றைப் பொறுத்து திர்மானிக்கின்றது.

அவதார நிகழ்வு தர்மத்தை நிலைநாட்டவும் துஷ்டர்களை அழிக்கவும் நல்லவர்களின் பிரார்த்தனைக்கிணங்க நடைபெறுமென பகவத் கீதை சொல்கின்றது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அதிதீவிர வளர்ச்சியடைந்த இக் காலத்தில் மனிதன் பல செளகரியங்களை அனுபவித்தாலும் மன நிம்மதியின்றி கவலைப்படுகின்றான். தொழில்நுட்ப வளர்ச்சி செல்வந்த நாடுகளுக்கும் வறுமை நாடுகளுக்குமிடையேயுள்ள இடைவெளியைக் கூட்டியதுமல்லாமல் சமுதாயத்திலும் செல்வந்தனுக்கும் வறியவருக்குமுள்ள இடைவெளியையும் கூட்டியுள்ளது.

இப்பொழுது பணத்திற்கும் வன்முறைக்குமே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. தர்மம் நிலைகுலைந்து மனித மேம்பாடுகளும் நலிவுற்றுள்ளன. மனிதன் பூமியிலுள்ள சமநிலையைக் குழப்புவதுடன் முரண்பாடுகளையும் வளர்க்கின்றன.

இந்நிலை சீர்திருத்தப்படாவிட்டால் பெரிய அழிவே ஏற்படும். இப்போதையநிலையைச்சீர்திருத்த தெய்வத்திற்கே நீண்டகாலம் எடுக்குமென்பதால் மூன்று அவதாரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற வேண்டுமென்று பகவான் சத்ய சாயி பாபா கூறியுள்ளார்.

முதலாவது சாயி அவதாரம் (1821–1918) சீரடி சாயி அவதாரமாகும். இரண்டாவதான சத்ய சாயி அவதாரமும் (1923–2011) நிகழ்ந்துவிட்டது.

மூன்றாவது அவதாரம் பிரேம சாயி கன்னட மாநிலத்தில் நிகழும் என்றும் தக்க தருணத்தில் பிரகடனம் செய்யப்படும் என்றும் பகவான் சத்ய சாயி பாபா கூறியுள்ளார்.

மேலும் சீரடி சாயி சிவனின் அவதாரமென்றும் தான் சிவசக்தி அவதாரமென்றும் பிரேம சாயி சக்தியின் அவதாரமே என்றும் கூறியுள்ளார்.

பகவானின் அற்புதங்கள், போதனைகள் கல்வித் திட்டம், சேவைத் திட்டங்கள், சத்ய சாயி சர்வதேச நிறுவனம் ஆகியன மனித வர்க்கத்தை உன்னதமாக்குவதற்கே என்று சுவாமியே கூறியுள்ளார்.

அவர் செய்த அற்புதங்களில் பல மனிதர்களில் ஏற்பட்ட உன்னத மாற்றமே மிகவும் அற்புதமானதாகும். பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவே சத்ய சாயி கல்வி முறையைத் தந்துள்ளார். இதை சிறுவர்கள் தொடங்கி பட்டப்பின் படிப்பு வரை செயற்படுத்தியுள்து.

இதன் தத்துவம் "மனிதன் தெய்வீகமானவன் உள்ளுறையும்தெய்வத்தை வெளிக்கொணர்வதே" என்பதாகும். தெய்வீகத்தை 5 அடிப்படை மனித மேம்பாடுகளான சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சையென விளங்கப்படுத்தியும் வெளிக்கொணர்தல் என்பதை உணர்வு எண்ணம், சொல், செயலாக வெளிப்படுத்தவே கூறியுமுள்ளார்.

இவரின் கல்வித் திட்டத்தில் ஆசிரியரின் முன்மாதிரிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் எவ்வழியோ மாணவரும் அவ்வழியே என்றும் சொல்லியுள்ளார்.

இக் கல்வித் திட்டம் பல நாடுகளில் செயற்படுகின்றது. பல நாட்டு அரசாங்கங்களும் அங்கீகரித்துள்ளன. இக் கல்வியின் நோக்கத்தில் மனித உன்னதத்துடன் அறிவுத் திறனும் செயற்திறனும் சேர்க்கப்பட்டுள்ளன.

கல்வியும் வைத்தியமும் குடிநீரும் இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

**இவரின் போதனைகளின் சாராம்சம்**

- எல்லாம் தெய்வீகம் வேறொன்று இல்லை.
- மனிதன் தெய்வீகமானவன்.
- எண்ணம், சொல், செயலில் ஒருமையும் தூய்மையும் கடைப்பிடிக்க வேண்டும்.
- மானிட சேவையே மாதவன் சேவை.

பலன் கருதாத தன்னலமில்லாத சேவை கர்ம யோகமாக மாறுகின்றது.

- அனைவரிலும் அன்பாயிரு. அனைவருக்கும் சேவை செய். எப்போதும் உதவி செய். ஒருபோதும் தீங்கு செய்யாதே.
- ஆன்மீக சாதனைகள், சேவை, ஆத்ம விசாரணை மூலம் இறைவனை அடையலாம்.
- மிருகத் தனத்திலிருந்து மனிதத் தரத்திற்கு உயர்ந்து தெய்வீக நிலைக்குஉயரவேண்டும்.

கடைசிக்காலத்தில் "நான் சத்ய சாயிபாபா வல்ல அது உலகுக்குக் கொடுத்த நாமமேயாகும். நான் பரபிரம்மம், ஆதி சக்தி, ஆதி முதல்வர், சிவ சக்தி ரூபம், அன்பே எனது ஆதாரம்" என்று கூறியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதியன்றே கடைசித் தரிசனம். அத்தரிசனத்தின்போது பக்தர்களைப் பார்த்து கை கூப்பி ஆசீர்வதித்தார். பக்தர்களும் தெய்வங்களே என்பதை உணர வைத்தார்.

சமஸ்தா லோகா சுகினோ பவந்து

**ஜெய் சாயி ராம்
டாக்டர்
இ.கணேசமூர்த்தி
யாழ்ப்பாணம்.**

# ஜனநாயகம் பேணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்

## வாலிபர் சங்கம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நாட்டில்ஏற்பட்டுள்ள தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் மக்கள் பாராளுமன்றத்தின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையை காப்பாற்றுவதற்கும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் குழப்ப நிலைகளை சுமுகமாக தீர்த்து நாட்டில் ஜனநாயகம் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர் சங்கம் (YMCA Jaffna) கேட்டுக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் (YMCA Jaffna) ஆளுநர் சபை கூட்டம் கடந்த 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை பாராளுமன்றத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதிக்கு பின்னர் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன. இது குறித்து அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில்,

எமது நாட்டின் மீயுயர் சட்டவாக்கல் சபையான பாராளுமன்றம் மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டதாகும். இவ்வாறு மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட. பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நாட்டின் சட்டம், ஒழுங்கு மற்றும் ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கும் தன்மை போன்றன பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறான நிலையில் மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் இன்றைய நிலை இலங்கையில் அரசின் நிலையற்ற தன்மையினையும், இலங்கையில் பொருளாதார நெருக்கடியினையும் ஏற்படுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாமல் நாட்டை ஆளுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருபகுதியினர் குழப்பங்களை ஏற்படுத்தி எமது நாட்டிற்கு அபகீர்த்தியினை ஏற்படுத்தும் வண்ணம் செயற்படுவதும் அதன் தொடர்ச்சியாக பாராளுமன்றம் இயங்க முடியாமல் குழப்பங்களினை ஏற்படுத்துவதும் அனைத்து மக்களாலும் விரும்பப்படாத விடயமாக உள்ளது.

இச்செயற்பாடுகள் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் அனைத்து மக்களினையும் சென்றடைவதானது எமது இளம் வாலிபர்கள் வன்முறையினை கையாளுவதற்கான தவறான முன்னுதாரணமாக அமைவது மிகவும் வேதனைக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

விஷேடமாக வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பாராளும்மன்றத்தில் பெரிதும் எதிர்பார்ப்புடனும், மிகுந்த நம்பிக்கையுடனும் இருந்த நீண்ட நாட்களாக பேசும் பொருளாக இருந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமது உறவுகளின் மீளவும் சேரும் அல்லது இணைக்கும் செயற்பாட்டிற்கு பாதகமான நிலை ஏற்படுவது போல் ஏமாற்றங்களைக் கொடுத்துள்ளது. இவர்களுக்கு நியாயமான நீதி கிடைக்க வேண்டியது அவசியமாகும்.

அது மாத்திரமல்லாமல் வட மாகாணத்தில் வருடக்கணக்காக இன்னும் விடுவிக்கப்படாமல் காணப்படுகின்ற காணிகளினை உரியவர்களிடம் ஒப்படைக்கவும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்முயற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்பதும் எமது விருப்பமாகும்.

மேற்குறிப்பிட்ட தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் மக்கள் பாராளுமன்றத்தின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையையும் காப்பாற்றும் பொருட்டு மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த குழப்ப நிலைகளினை சுமுகமாக தீர்த்து வைக்குமாறும் நாட்டில் ஜனநாயகம் பேணப்படுவதனை உறுதி செய்யுமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)



பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் மல்வம் றோ.க.த.க பாடசாலைக்கு மடிக்கணனி மற்றும் மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றத்திற்கு நிழல் பிரதி இயந்திரம் என்பன வழங்கப்பட்டன. உடுவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பார்ாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் சார்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு பொருட்களை வழங்கினார்.



நயினாதீவு மைந்தர்கள் குழுமத்தின் ஏற்பாட்டில் நயினாதீவு பாடசாலைகளில் கல்வி பொதுத் தராதார சாதாரண தர பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான இலவச கணித, விஞ்ஞான, ஆங்கிலம் மற்றும் சித்திர பாட கருத்தரங்குகள் அண்மையில் பெருமளவான மாணவர்கள் பங்கேற்புடன் நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

# நீதிமன்றின் பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலை நாட்டும்படி குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 431(2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழக்கு இல-AR/1031/18 , சான்றுப்பொருள் இல-PR/1280/18,மறுதவணை-24.01.2019, வாகன இல-69934010 இலக்க துவிச் சக்கர வண்டி-01, வழக்கு இல-AR/981/18, சான்றுப்பொருள் இல-PR/920/18, வாகன இல-6999 3674 இலக்க பெண்கள் துவிச் சக்கர வண்டி-01, PR/921/18,வாகன இல-6997 7004 இலக்கதுவிச்சக்கரவண்டி-01, PR/922/18, வாகன இல-69896706 இலக்க துவிச்சக்கர வண்டி-01, PR/924/18, வாகன இல-6990 0938 இலக்க துவிச்சக்கர வண்டி-01, PR/925/18, வாகன இல-68245407 இலக்க துவிச்சக்கர வண்டி-01, PR/926/18, வாகன இல-SL1041650 இலக்க துவிச்சக்கர வண்டி-01, PR/927/18, வாகன இல-C.D. W.GT 2905-162127 இலக்க முச்சக்கரவண்டிகசற்றேடியோ -01, PR/928/18, D.E.X. 1450 UP இலக்க முடைய முச்சக்கரவண்டி கசற்றேடியோ-01,PR/929/18, D.E.X 1950 UP இலக்கமுடைய கசற்றேடியோ-01, PR/930/18, PR/1429/18,69814192 இலக்க துவிச் சக்கர வண்டி -01, PR/1688/18, 6981 8828 இலக்க துவிச்சக்கர வண்டி-01, PR/1689/18, 70005049 இலக்க துவிச் சக்கர வண்டி-01, PR/1690/18, 6092 7623 இலக்க துவிச்சக்கர வண்டி-01, PR/1801/18, இலக்க மற்ற துவிச்சக்கர வண்டி. மறுதவணை-11.02. 2019 மன்றின் கட்டளைப் படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)



வடமராட்சி புலோலி தெற்கு மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் ர.யசோதரன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். (படங்கள்:-மகாலிங்கம்)

# மகிழங்கேணியில் தேங்கி நிற்கும் வெள்ளம் கடலுக்குச் செல்வதற்காக குழாய்கள் பொருத்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மகிழங்கேணி குடியிருப்புப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளம் கடலுக்குச் செல்வதற்காக பிரதேச செயலகத்தினரால் 6 நீர் கடத்தும் குழாய்கள் நேற்று புதன்கிழமை பொருத்தப்பட்டன.





பெய்து வரும் கடும் மழை காரணமாக சுகாதாரத் தொழிலாளிகள் செறிந்து வாழும் மகிழங்கேணிப் பகுதி வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது. இது தொடர்பாக கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன் விளைவாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரின் ஏற்பாட்டில் இராணுவம் மற்றும் நகரசபையினரின் ஆளணி மற்றும் வாகன உதவியுடன் 6 நீர் கடத்தும் சீமெந்துக் குழாய்கள் பொருத்தப்பட்டன.

இந்த சிரமதானப் பணியில் 523ஆவது படைத் தலைமையக பிரிகேடியர் வீரக்கோன்,ஜே/301 கிராம உத்தியோகத்தர் கார்த்திகேயன் ,அபிவிருத்தி உத்தியோகத்தர், நகரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அகிலன் மற்றும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கலந்துகொண்டனர்.

மகிழங்கேணிப் பிரதேசமானது கடற்கரைப் பிரதேசமாகக் காணப்படுகின்ற அதேவேளை மாரி காலத்தில் வெள்ள அபாயத்தை எதிர்கொள்ளும் பகுதியுமாகும். அந்தப் பகுதியில் கடந்த 2016ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரால் 60குடும்பங்களுக்கு தலா ஒன்றரைப் பரப்பு வீதம் காணி பகிர்ந்தளிக்கப்பட் டது.

காணி வழங்கப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தி அடைந்த நிலையிலும் குறித்த பகுதி மக்களுக்கு இன்று வரை வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறவில்லை. அரசியல் வாதிகள், இராணுவத்தினர் எனப் பலரும் குறித்த பகுதி மக்கள் வசிப்பதற்கு பொருத்தமான இடம் அல்ல. இங்கு வசிப்பதனால்பல்வேறு தொற்று நோய்களுக்கு ஆளாக வேண்டி வரும் எனத் தெரிவித்துள்ளனர். இருப்பினும் பிரதேச செயலகத்தினர் குறித்த பகுதிக்கு மண் இட்டு உயர்த்தி வீட்டுத்திட்டம் வழங்குவதில் உறுதியாக இருக்கின்றனர்.


ஒவ்வொரு மாரி காலத்திலும் வீட்டுத் திட்டம் வழங்கப்படும், மண் போட்டு உயர்த்தப்படும் என்று உறுதி மொழிகள் தெரிவிக்கின்ற போதிலும் மாரி முடிந்ததும் அந்தப் பேச்சுக்களும் வெறும் பேச்சளவிலேயே விடுபட்டுப் போகின்ற நிலை காணப்படுகிறது என அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (இ-30)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

102



“ வடமராட்சியில் 3 தேவாலயங்கள் காணப்பட்டன. கட்டைவேலி, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இத்தேவாலயங்கள் கட்டப்பட்டிருந்தன. பச்சிலைப்பள்ளியில் 4 தேவாலயங்கள் காணப்பட்டன. அவை தம்பகாமம், முகமாலை, முள்ளிப்பற்று போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. மேற்படி தேவாலயங்களைப் பயன்படுத்தி பல்தேயு மிக உற்சாகத்துடன் நிர்வாக அமைப்புக்களை நிறுவி மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார் ”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

இக்காரணங்களில் மேற்படி பிரதேசங்களில் புரட்டஸ்தாந்து மதம் தன்து செல்வாக்கைச் செலுத்த முடியாமல் போனது. ஆனால் யாழ்ப்பாணக் குடாநாடும் மன்னார்ப் பிரதேசமும் போர்த்துக்கீசர் ஆட்சியின் கீழ் வந்தபோது அவர்களின் மதமாகிய கத்தோலிக்க மதம் அப்பிரதேச மக்கள் மத்தியில் அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ திணிக்கப்பட்டது.

பல நூற்றுக்கணக்கான கத்தோலிக்க ஆலயங்களும் கத்தோலிக்க மத போதனை நிலையங்களும் கட்டப்பட்டிருந்தன. அத்தோடு மேற்படி இரு பிரதேசங்களும் அதிக சனத்தொகை நிறைந்ததாகவும் குறுகிய நிலப்பரப்பையும் போக்குவரத்து வசதிகளையும் தொண்டதாகவும் காணப்பட்டதால் அங்கு உடனடியாகவே தமது புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதில் எதுவித தடைகளும் இருக்கவில்லை.

இந்தப் பின்னணியில் கீழ் வரும் புள்ளிவிபரங்களை நோக்கும் போது அப்புள்ளி விபரங்களின் உயர்வு தாழ்வுகளை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 25 கிறிஸ்தவ ஆலயங்கள் காணப்பட்டன. இவை கத்தோலிக்கர்களினால் கட்டப்பட்டவை. இவை அனைத்தும் 1657களில் பல்தேயு பாதிரியாரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. அதிக சனத் தொகையைக் கொண்டிருந்த வலிகாமத்தில் மட்டும் 14 கிறிஸ்தவ ஆலயங்கள் இருந்தன.

தெல்லிப்பழை, மல்லாகம், மயிலிட்டி, அச்சுவேலி, உடுவில், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், வண்ணார்பண்ணை, நல்லூர், சுண்டுக்குளி, கோப்பாய், புத்தூர் ஆகிய ஊர்களிலும் மேற்படி தேவாலயங்கள் நிறுவப்பட்டிருந்தன.

தென்மராட்சியில் 5 ஆலயங்கள் காணப்பட்டன. நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, எழுதுமட்டுவாழ் போன்ற இடங்களில் மேற்படி தேவாலயங்கள் காணப்பட்டன.

வடமராட்சியில் 3 தேவாலயங்கள் காணப்பட்டன. கட்டைவேலி, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இத்தேவாலயங்கள் கட்டப்பட்டிருந்தன.

பச்சிலைப்பள்ளியில் 4 தேவாலயங்கள் காணப்பட்டன. அவை தம்பகாமம், முகமாலை, முள்ளிப்பற்று போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. மேற்படி தேவாலயங்களைப் பயன்படுத்தி பல்தேயு மிக உற்சாகத்துடன் நிர்வாக அமைப்புக்களை நிறுவி மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

1663 ஆம் ஆண்டு டச்சுக்காரரின் கணக்கெடுப்பின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 62558 கிறிஸ்தவர்கள் இருந்தனர். 42 கிறிஸ்தவ ஆலயங்களும் காணப்பட்டன. 1664 இல் இத்தொகை 103,831 ஆக உயர்ந்து காணப்பட்டது.

இதே ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மன்னாரிலும் சுமார் 104000 புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கின்றார்கள் என இன்னோர் அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

1669 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னிப் பெருநிலப் பகுதியிலும் மொத்தமாக 121102 பேரும் மன்னார் பிரதேசத்தில் 4094 பேரும் திருகோணமலையில் 1048 பேரும் மட்டக்களப்பில் 326 பேரும் புரட்டஸ்தாந்தினராகக் காணப்பட்டிருந்திருக்கின்றார்கள்.

1671 இல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 141456 பேரும் மன்னாரில் 9131 பேரும் வன்னிப் பிரதேசத்தில் 4316 பேரும் புரட்டஸ்தாந்து மதத்தினராகக் காணப்பட்டனர்.

1707 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கிறிஸ்தவர்களின் தொகை 172951 ஆக உயர்ந்து காணப்பட்டது.

மேலும் இத்தொகை 1739 களில் 186091 ஆக உயர்ந்து செல்கின்றதை அறியமுடிகிறது.

அதேபோன்று 1756 இல் இத்தொகை 190385 ஆகவும் 1760களில் 193148 ஆகவும் அதிகரித்துச் செல்வதனை டச்சுக்காரரின் புள்ளிவிபரங்கள் காட்டி நிற்கின்றன.

1764 இல் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வலிகாமம், வடமராட்சி பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்களில் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டவர்களின் வயது பருவநிலைகளை வைத்துக் கணக்கிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் பின்வரும் டச்சு ஆவணத்தினூடாகக் கிடைக்கப் பெற்றுள்ளன.

| பிரதேசம் | வளர்ந்தோர் | பிள்ளைகள் | குழந்தைகள் | அடிமைகள் | அடிமைப் பிள்ளைகள் |
|---|---|---|---|---|---|
| தென்மராட்சி பச்சிலைப்பள்ளி | 27460 | 8086 | 9587 | 414 | 350 |
| வலிகாமம் வடமராட்சி | 82810 | 21529 | 22030 | 1816 | 1030 |

மொத்தமாக 175112 கிறிஸ்தவர்கள் மேற்படி நான்கு பிரதான பிரிவுகளிலும் காணப்படுகின்றனர். இவற்றில் தீவுப் பகுதிகள் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1773 இல் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களில் 1743 புரட்டஸ்தாந்தரும் கற்பிட்டியில் 26 புரட்டஸ்தாந்தரும் காணப்படுகின்றனர்.

அதேவேளையில் 1778 இல் எடுக்கப்பட்ட புள்ளி விபரப்படி திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசத்தில் 2029 புரட்டஸ்தாந்தர்கள் இருந்திருக்கின்றார்கள்.

(தொடரும்)

# மகிந்த - மைத்திரியை ஆதரித்து ஆர்ப்பாட்டம் நடத்திய சிங்களவர்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவிற்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஆதரவு தெரிவித்து நேற்று கந்தளாயில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.





கந்தளாய் பிரதேச சபையின் முன்னால் கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி தேவை இல்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பதி மற்றும் கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர், முன்னாள் தவிசாளர் கபில மற்றும் உறுப்பினர்கள் கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (இ-7)

# இந்திய மற்றும் அமெரிக்க தூதுவர்கள் பாதுகாப்புச் செயலருடன் ஆலோசனை





(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும், இந்திய துணைத் தூதுவரும், உயர்மட்ட அதிகாரிகளுடன் இணைந்து, பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவைச் சந்தித்து தனித்தனியாகப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சந்திப்புகள், பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளன.

இந்தியத் துணைத் தூதுவர் கலாநிதி ஷில்பக் அம்புலே தலைமையிலான இந்தியத் தூதரக உயர் அதிகாரிகள், பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவுடன் நடத்திய பேச்சுக்களின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகரும் கலந்து கொண்டார்.

அதேவேளை, புதிதாகப் பதவியேற்ற அமெரிக்க தூதுவர் அலைனா ரெப்லிட்சும், கடந்த திங்கட்கிழமை, ப்ாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க துணைத் தூதுவர் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றனர்.

ரணில்-மைத்திரி கூட்டு அரசாங்கத்துடன் அமெரிக்காவும் இந்தியாவும் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்தியிருந்தன.

தற்போது, ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களால், இந்த உறவுகள், ஒத்துழைப்புகளின் நிலை கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

அமெரிக்காவும், இந்தியாவும், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளாத நிலையில், மைத்திரிபால சிறிசேனவால் அண்மையில் நியமிக்கப்பட்ட பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவுடன், இருதரப்பு பாதுகாப்பு உறவுகள், திட்டங்களின் எதிர்காலம் குறித்தே பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. (இ-7)

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம் சந்தன மீண்டும் விளக்கமறியலில்

(கொழும்பு)

11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள லெப்டினன் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இதற்கான உத்தரவை கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க நேற்று முன்தினம் விடுத்தார்.

2008-2009 காலப்பகுதியில் கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தி சென்று காணாமல் ஆக்கிய குற்றச்சாட்டில் அவர் கடந்த செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அவர் நேற்று முன்தினம் மீண்டும் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, குறித்த 11 இளைஞர்களை கடத்திச் சென்று மறைத்து வைத்து அவரது உறவினர்களிடம் தொலைபேசி ஊடாக கப்பம் கோரிய மற்றும் அதற்கு ஒத்துழைத்த நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த விசாரணைகள் தொலைபேசி அழைப்புகளின் பட்டியல் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1565

### அருண்

மாமா கோபத்தில உங்க பொண்ண கன்னத்தில அறைஞ்சுட்டேன்



இருக்கட்டும் மாப்ள... இப்ப எந்த ஆஸ்பத்திரியில அட்மிட் ஆகியிருக்கீங்க

### முகிலன்

அரிச்சந்திரன் பொய் பேசாமல் இருந்ததற்கு அவனுடைய வாய்மை மட்டும் காரணமல்ல



அவனிடம் துருவித் துருவி கேள்வி கேட்காத அவன் மனைவிதான் காரணம்!

### தரண்யா

உண்மையைச் சொன்னா நிறைய குறுக்குக் கேள்வி கேட்கிறாங்க... பொய் சொன்னா கிட்டத்தட்ட அப்படியே ஏத்துக்கிறாங்க



என்னடா உலகம் இது

### விசாகா

அப்பாவிற்கு ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடத் தெரியாது என்ற தாழ்வு மனப்பான்மை அவருக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவே



ராங்க் காட்டில் நான் கையெழுத்துப்போட்டேன்

### மீனா

உங்களைப் பெற்ற தாய் தந்தையரிடம் வீண் விவாதம் செய்யாதீர்கள்



உங்களுக்குப் பேசக் கற்றுக்கொடுத்தவர்கள் அவர்கள் தான்...!

### சுரேக்கா

ஆண் என்பவன் பணம் தேடுபவன் அல்ல



தனது குடும்பத்தின் தேவைக்காக தினமும் ஓடுபவன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### இனவாதிகளை அழிப்பதாக வாக்குறுதியளித்து விட்டு

# ஞானசார தேரரை விடுவிப்பதற்கு ஜனாதிபதி நாடகமாடுகின்றார்

## ஐ.தே.க.எம்.பி.மகரூப் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் பௌத்த தேரர்கள் போராட்டம் நடத்திய போது, அத்தேரர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம் நடத்துவது போன்று மக்களுக்குக் காட்டி நாடகமாடிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஞானசார தேரரை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார் என, ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றஞ்சாட்டினார்.

அலரிமாளிகையில்வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே, அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பொறுப்பேற்றவுடன் திகண கலவரத்தின் சூத்திரதாரி விடுவிக்கப்பட்டார் என்றும் இன்னும் சில தினங்களில் ஞானசார தேரரையும் விடுவிக்கவே ஜனாதிபதி நாடகமாடுகின்றார் என்றும் தெரிவித்தார்.

ஆகவே, திகன கலவரத்தின் பின்னணியில் யார் இருந்தார்கள், யார் இனவாதிகளைப் பாதுகாத்து, இனவாதத்தைத் தூண்டினார்கள் என இப்போது பொது மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஞானசார தேரரை விடுவிக்குமாறு போராட்டம் நடத்திய பிக்குகளை, ஜனாதிபதி செயலகத்துக்குள் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி, ஞானசார தேரரை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், சட்டம் ஒழுங்கு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என சகல அதிகாரங்களையும் தன்னிடம் வைத்திருக்கும் ஜனாதிபதி, போராட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்த தான் உத்தரவிடவில்லை எனக் கூறுவது சிறு பிள்ளைத்தனமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறுதான் நல்லாட்சியிலும் எதிர்மறை விமர்சனங்கள் அனைத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் திருப்பிவிட்டு, நல்லவர் போல் மக்கள் முன் நாடகமாடினார் என்றும் இம்ரான் எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

திருடர்களை பிடிப்பதாகவும் இனவாதிகளை அழிப்பதாகவும் வாக்குறுதியளித்து வெற்றி பெற்ற ஜனாதிபதி, இன்று திருடர்களுக்கும் இனவாதிகளுக்கும் துணையாக நிற்பது கவலையளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மீனவர்கள் போராட்டம்



(கொழும்பு)

தேசிய மீனவர் தினமான நேற்று முன்தினம் வடகிழக்கு மற்றும் இலங்கை முழுவதும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்ட பேரணி தற்போது பொலநறுவை றோயல் ஆரம்பப் பாடசாலை அருகாமையிலிருந்து ஆரம்பமாகியுள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் குறித்த போராட்டத்தில் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டுள்ளனர். (இ-7)

## பழுதடைந்த பாக்குகளை இந்தியாவிற்கு கடத்த உதவி

### சனத் ஜெயசூரியா மீது குற்றச்சாட்டு



(கொழும்பு)

பழுதடைந்த பாக்குகளை கடத்தியதாக முன்னாள் இலங்கை அணி தலைவர் சனத் ஜெயசூரியா மீது இந்தியப் பொலிஸார் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர்.

இந்தியாவின் நாக்பூரில் பல மில்லியன் ரூபாய் பெறுமதியான பழுதடைந்த பாக்குகளை இந்திய அதிகாரிகள் கைப்பற்றிய வேளை அவற்றிற்கும் சனத் ஜெயசூரியாவிற்கும் தொடர்பிருப்பது தெரியவந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து மும்பாய் பொலிஸிற்கு சனத் ஜெயசூரியா அழைக்கப்பட்டார் என தெரிவித்துள்ள இந்திய ஊடகங்கள் மேலதிக விசாரணைகள் குறித்த கடிதமொன்றை இந்திய அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளன.

மேலும் இரண்டு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் டிசெம்பர் 2 ஆம் திகதி விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தோனேசியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட பாக்கு இந்தியாவிற்கு கடத்தப்பட்டுள்ளது என இந்திய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பாக்கு கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இலங்கையில் போலி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன எனவும் இந்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கை வீரர்கள் தங்கள் அரசாங்கத்தில் தங்களுக்கு உள்ள செல்வாக்கை பயன்படுத்தி அனுமதிப் பத்திரத்தை பெற்று போலி நிறுவனங்களை உருவாக்கியுள்ளனர் எனவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாகப் பாக்குகள் இறக்குமதி செய்யப்பட்டால் அவற்றிற்கு 108 வீத வரியை செலுத்த வேண்டும்

ஆனால் தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டால் அதற்கு வரியில்லை என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 160 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 120 | 160 | 200 |
| தக்காளி | 250 | 240 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 30 | 40 |
| கோவா | 120 | 160 | 150 | 200 |
| கரட் | 160 | 240 | 130 | 400 |
| பூசணி | 60 | 40 | 40 | 80 |
| புடோல் | 140 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 120 |
| பாகற்காய் | 300 | 160 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 110 | 160 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 250 | 180 | 250 | 200 |
| லீக்ஸ் | 150 | 240 | 120 | 240 |
| பீற்றூட் | 120 | 120 | 60 | 200 |
| கறிமிளகாய் | 250 | 160 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 600 | — | 250 | 300 |
| போஞ்சி | 300 | 240 | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 150 | 100 |
| கீரை-1பிடி | 60 | 60 | 30 | 60 |
| தேசிக்காய் | 500 | 450 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 25-40 |
| இராசவள்ளி | 250 | — | — | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | 30 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 120 | 100 |

# செய்தித்துளிகள்

## சுவிஸ் நகரசபைத் தேர்தலில் இலங். தமிழ்ப் பெண் போட்டி



(ஜெனீவா)

சுவிட்சர்லாந்தின் பேர்ண் மாநில பிரதான எதிர்க்கட்சியான எஸ்.பி. கட்சியின் சார்பில் தூண் நகரசபைத் தேர்தலில் தர்ஷிகா கிருஸ்ணானந்தம் என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண் போட்டியிடுகின்றார்.

தர்ஷிகா கிருஸ்ணானந்தம் தமிழ்ச் சமூகத்தின் வழிகாட்டியாகவும் புலம்பெயர் தமிழர்களை ஒன்றிணைக்கும் பாலமாகவும் செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அனைத்து பிரச்சினைக்கும் ஜனாதிபதியே காரணம்



(கொழும்பு)

நாட்டில் இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார். (இ-7)

## யாசகம் பெறத் தடை

(கொழும்பு)

ரயில் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் யாசகங்கள் பெறுவோரை கைது செய்வதற்கான நடைமுறையொன்று நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகாரி அநுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

## விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோஸியஸ் மற்றும் நிறுவன மேலாளர் கசுன் பலிசேன ஆகியோர் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்து இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டார். (இ-7)

## குளவிக் கொட்டுக்கு இலக்கான 13 தொழிலாளர்கள் பாதிப்பு

(அப்புத்தளை)

அப்புத்தளைப் பகுதியின் தம்பேதன்னை பெருந்தோட்டப் பிரிவில் 13 பெண் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கிலக்காகி அப்புத்தளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தம்பேதன்னை பெருந்தோட்டத் தொழிற்சாலைப் பிரிவு பெண் தொழிலாளர்களே குளவிக் கொட்டுக்கிலக்காகியுள்ளவர்களாவர்.

இவர்களில் ஐவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## கற்றது கைமண் அளவு



அது ஓர் அழகிய பனிக்காலம். ரவியும் சீதாவும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தனர். இருவரும் ஒரே வகுப்பு. படிப்பில் கெட்டிக்காரர்கள். ஆனால் அவர்களுக்குள் அடிக்கடி விவாதங்கள் வருவதுண்டு. காரணம், அவர்களில் யார் பெரியவர் என்று. அதை நிரூபிக்க இருவரும் போட்டி போட்டுக் கொண்டு படிப்பதும் உண்டு.

அன்றும் அப்படித்தான் ரவியும் சீதாவும் பேசிக் கொண்டிருந்தபோது அவர்களுக்கிடையே விவாதம் முற்றியது.

ரவி சொன்னான், "நான் தான் உன்னை விட அறிவில் சிறந்தவன்" என்று. ஆனால் சீதாவோ அதை மறுத்தாள்.

"நிச்சயமா இல்லை... நான் தான்" என்றாள் ஆணித்தரமாக. அதற்குச் சான்றாக அவரவர் தங்கள் பிரதாபங்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தனர். இதே ரீதியில் பேச்சு வளர்ந்து கொண்டிருந்தது.

அப்போது திடீரென அவர்கள் முன் தோன்றியது ஓர் அழகிய தேவதை. தேவதையைக் கண்ட இருவரும் செய்வதறியாமல் திகைத்தனர். பின் இருவரும் சுதாரித்துக்கொண்டு, "நீங்கள் யார்?" என்றனர்.

தேவதை அவர்களிடம், "நான்தேவலோகத்து மங்கை. இந்த வழியாகத்தான் தினமும் பறந்து உலா செல்வேன்... இன்றும் அவ்வாறு போகும்போது உங்களது வாக்குவாதம் கேட்டது. பொறுக்கமுடியாமல் இறங்கி வந்தேன்" என்றது.

பின் "உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்... முடிந்தால் தீர்த்து வைக்க முயற்சிக்கிறேன்" என்றது.

உடனே ரவி "தேவதையே! இவளைவிட நான் தான் அறிவில் சிறந்தவன் என்றால் ஒத்துக்கொள்ள மாட்டேங்கிறா" என்றான். "ஒன்றும் கிடையாது... நான் தான் இவனை விட அறிவாளி..." என்று சீதா சொல்ல, ரவி மறுக்க, சூடான விவாதம் மீண்டும் தொடங்கியது.

இதைக் கண்ட தேவதை வருந்தியது. ஒரு கணம் யோசித்தது. "சரி, சரி... உங்கள் சண்டையை சற்று நிறுத்துங்கள். இதற்கு நான் ஒரு வழி செய்கிறேன்" என்று கூறியது. "உங்கள் இருவருக்கும் நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதில் யார் வெற்றி பெறுகிறீர்களோ, அவர்தான் அறிவில் சிறந்தவர்" என்று கூறி, "உங்களுக்கு இதில் சம்மதமா?" என்று கேட்டது.

ரவியும் சீதாவும் "சம்மதம்" எனத் தலையாட்டினர். உடனே போட்டி என்ன என்பதை தேவதை அவர்களிடம் சொல்ல ஆரம்பித்தது. "நான் உங்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒரு குடுவை தருகிறேன். இது பனிக்காலம் அல்லவா? அந்தக் குடுவையில் இரவு முழுவதும் பனித்துளிகளைச் சேமிக்க வேண்டும். இருவரில் யார் அதிகம் சேமிக்கிறீர்களோ அவர்தான் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்" என்று கூறியது.

"ஆனால் ஒரு நிபந்தனை. இத் தருணத்திலிருந்து போட்டி முடியும் வரை நீங்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ளவோ பேசிக்கொள்ளவோ கூடாது. நான் நாளை மாலைதான் மீண்டும் வருவேன். இதே மைதானத்தில் எனக்காகக் காத்திருங்கள்". என்று கூறி, மூடியில்லாத இரு குடுவைகளை அவர்களிடம் கொடுத்துவிட்டு மறைந்தது.

இருவரும் குடுவையுடன் அவரவர் வீடுகளுக்குச் சென்றனர்.

செங்கதிர் சூரியன் மறைந்து, பால் ஒளி வீசும் இரவு ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் பனியும் கொட்ட ஆரம்பித்தது.

ரவி குடுவையை எடுத்துக்கொண்டு தோட்டத்துக்கு வந்தான். திறந்தவெளியில் வைத்தான். பின் உறங்கச் சென்றான். ஆனால் உறக்கமே வரவில்லை. அடிக்கடி சென்று குடுவையில் பனித்துளிகள் சேர்ந்துள்ளதா? எனப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

சீதாவும் அவளது வீட்டின் முன்புறம் உள்ள புல்தரையில் குடுவையை வைத்தாள். இடையிடையே பனித்துளியின் அளவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். "நாளை எப்படியாவது ரவியை ஜெயிக்கணும்" என்ற சிந்தனையிலேயே அவள் தூங்கப் போனாள்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. சீதாவும் ரவியும் சென்று அவரவர் குடுவையைப் பார்த்தனர். ஓரளவுக்கு இருவரது குடுவையிலும் பனி நிறைந்திருந்தது.

ஆனால் ரவியின் குடுவையில் இதை விட அதிகம் இருக்குமோ என்று சீதாவும் சீதாவின் குடுவையில் அதிகம் இருந்தால் என்ன செய்வது என்று ரவியும் நினைத்தனர்.

மதியத்துக்கு மேல் இருவரும் மைதானத்துக்கு தேவதையைப் பார்க்கப் புறப்பட்டனர். அப்போது மற்றவரது குடுவையில் அதிகமாக இருந்தால் நாம் தோற்றுவிடுவோமே என்று இருவருமே நினைத்ததால், குடுவை நிறையத் தண்ணீரை ஊற்றி எடுத்துச் சென்றனர். மைதானத்தில் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளாமல் குடுவையை மறைத்து வைத்தபடி காத்திருந்தனர்.

மாலை ஆனதும் தேவதை வந்தது.

"சரியாக வந்துவிட்டீர்களே! எங்கே உங்கள் குடுவையைக் காட்டுங்கள்" என்று குடுவைகளை வாங்கிப் பார்த்தது. பின்னர் வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பித்தது தேவதை.

இதைக் கண்ட இருவரும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பின்பு ரவி கேட்டான், "ஏன் இப்படிச் சிரிக்கிறீங்க?" என்று. அதற்குப் பதில் சொல்லாமல் மீண்டும் சிரித்த தேவதை,

"சாதாரணமாக பனித்துளி என்பது என்ன தெரியுமா? மேலே உள்ள நீராவியின் மேல் குளிர்ந்த காற்றுப் படும்போது, அது பனித்துளியாக மாறுகிறது. அந்தப் பனித்துளி மீது நல்ல வெயில் படும்போது, அது மீண்டும் நீராவியாகிவிடும். அப்படிப் பார்த்தால் நீங்கள் மதியத்திலிருந்து இங்கே காத்திருக்கிறீர்கள். என்னதான் குடுவையில் பனித்துளி சேர்ந்திருந்தாலும் இந்த வெயிலில் சிறிதளவாவது ஆவியாகியிருக்கும். மீதிக் கொஞ்சம்தான் குடுவையில் தங்கியிருக்கும்.

ஆனால் உங்கள் இருவரது குடுவையும் நிரம்பி வழிகிறதே! இது எப்படி? இதைக் கண்டு சிரிக்காமல் என்ன செய்வது?" என்று கூறியது.

"இப்போது சொல்லுங்கள்...உங்களில் அறிவில் சிறந்தவர் யார் என்று?" அவர்களைப் பார்த்துக் கேட்டது தேவதை.

இருவரும் என்ன செய்வது என்று தெரியாமல் தலைகவிழ்ந்து நின்றனர்.

"பார்த்தீர்களா? இது நம் வாழ்வில் தினமும் நிகழும் ஒரு சாதாரண நிகழ்வு. இதைக்கூட நாம் தெரிந்து கொள்ளவில்லை. உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். இந்த உலகில் எல்லாமே தெரிந்தவர்கள், புத்திசாலிகள் என்று எவருமே இல்லை. இந்த உலகத்தில் உள்ளவர்கள் கற்றுக்கொண்டது வெறும் கையளவு மட்டுமே. கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ உள்ளன.

அவற்றைத் தெரிந்து கொள்ளத்தான் நீங்கள் முயற்சிக்க வேண்டுமே தவிர, இப்படி வீண் விவாதங்கள் செய்து நேரத்தை வீணடிப்பது எவ்வகையில் சிறந்ததாகும்?" என்று கேட்டது தேவதை. அதைக் கேட்ட இருவரும் தம் தவறை உணர்ந்து, "எங்களை மன்னித்துவிடுங்கள். நாங்கள் இனிமேல் இதுபோன்ற தவறுகளை எல்லாம் செய்யமாட்டோம்" என்று கூறினர்.

பின் தேவதை அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு ஏதாவது பரிசு தர விரும்புகிறேன். என்ன வேண்டும்? கேளுங்கள்" என்றது.

"நீங்கள் கொடுத்த இந்த அறிவுரையே எங்களுக்கு விலைமதிக்க முடியாத பரிசு" என்று ஒரே குரலில் கூறினர்.

## விடுகதைகள்

- காட்டிலே நான் பச்சை, கடையிலே நான் கறுப்பு, வீட்டிலே நான் சிவப்பு. நான் யார்?
  மரம், கரி, நெருப்பு
- கண்டுபூப்பூக்கும்காணாமல்காய்காய்க்கும். அது என்ன?
  வேர்க்கடலை
- கடலிலே பிறந்து, இலையிலே புகுந்து, குகையிலே அடைபடும், கட்டழகி நான். நான் யார்?
  சுண்ணாம்பு
- ஆயிரக்கணக்கான வீரர்கள் அணிவகுத்துச் செல்வார்கள். ஆனாலும் தூசு ஏதும் கிளம்பாது. அது என்ன?
  எறும்புக் கூட்டம்

## பொது அறிவுத்துளிகள்

- ராணித்தேனீயின் ஆயுட்காலம், 3 முதல் 4 ஆண்டுகள்.
- தாவரங்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுப்பது, பொட்டாசியம்.
- "தாவர வகைப்பட்டியலின் தந்தை" என்று அழைக்கப்படுபவர், லின்னேயஸ்.
- உலகத் தொழிலாளர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு, 1919.
- ஆக்வா ரெஜியா என்ற திரவத்தில் கரைத்தால், தங்கம் கரைந்து விடும்.
- "உயிரியல் கோட்பாட்டின் தந்தை" என்று அழைக்கப்படுபவர், சார்லஸ் டார்வின்.
- நேருவுக்கு 84 பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளன.

மேலான மனிதன் அறம் பற்றியே சிந்திக்கின்றான்.
கீழான மனிதன் தன் சுகம்பற்றியே எண்ணுகின்றான்.
- கன்பூஷியஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் மிகவும் நிதானமாகவே இருக்கிறார்கள்

மகாத்மா காந்தியை கோட்சே என்பான் சுட்டுக் கொன்றான். அப்போது காந்தியைக் கொன்றது சரியா பிழையா என்ற பட்டிமன்றம் இந்திய தேசம் கடந்து உலகம் முழுமையிலும் நடந்தது.

ஒரு தரப்பு கோட்சேக்கு குடை விரித்தது. இன்னொரு தரப்பு அகிம்சாமூர்த்திக்கு இப்படியொரு தண்டனையா என்று இதயம் நொந்து அழுது கொண்டது.

இதைச் சொல்வதன் நோக்கம் தர்மம் இருக்கும் காலும் அதர்மமும் இருக்கும். அதர்மத்துக்காக குரல் கொடுப்போர் அதுவே தர்மம் என்று தம்மளவில் நினைப்பர்.

இது கலியுகத்துக்குரிய இயல்பென்று யாரும் கருதிவிடலாகாது.

பாண்டவர் பக்கம் இருந்த அதே ஆளணி கௌரவர் பக்கத்திலும் இருந்தது. கௌரவர் தலைவன் துரியோதனனே ஆட்சி புரிவதற்குரியவன் என்ற வாதமும் எடுபட்டிருந்தது.

விபூடணனை போற்றித் துதித்தவர்கள் கும்பகர்ணனை இழிவு செய்தனர்.

மாறாக கும்பகர்ணனுக்கு உயர் மதிப்புக் கொடுத்தவர்கள் விபூடணனை எதிரணியுடன் சேர்ந்து தன் அண்ணனுக்கு குந்தகம் செய்த பாதகன் என்று பிரசாரம் புரிந்தனர்.

இதுவே உலக நியதி என்ற அடிப்படையில், இப்போதும் இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ பக்கமும் ரணில் விக்கிரமசிங்க பக்கமும் அவரவர் ஆதரவாளர்கள் தத்தம் தரப்பே சிறந்ததென வாதம் புரிகின்றனர்.

இந்நிலைமை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரையும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனையும் ஒப்பிட்டு உரைப்பவர்களிடம் இருக்கவே செய்யும்.

இது கண்டு நாம் யாரும் கலங்கத் தேவையில்லை. அவரவர் செய்த வினைக்கு அவரவரே அனுபவிப்பர். அதுபோன்று தர்மத்தை ஆதரித்தவர்கள் புண்ணியத்தையும் அதர்மத்துக்கு கையுயர்த்தியோர் பாவத்தையும் தம் சேமிப்பாக்கிக் கொள்வர்.

ஆயினும் மக்கள் தீர்ப்பு என்பதுதான் மகேசன் தீர்ப்பு. மக்கள் யாரை ஆதரிக்கின்றனரோ அதற்கு தலைசாய்ப்பது ஒவ்வொருவரினதும் கடமை.

ஒரு காலத்தில் நல்லவர் என்று நாம் நம்பியிருந்தவர் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பிழையானவராக மாறுவதற்கு வாய்ப்புண்டு.

1972களில் இந்த நாட்டின் அரசியலமைப்பைத் தயாரித்த கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா அதற்குப் பல வருடங்கள் முன்பாகப் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது, இரு மொழி என்றால் ஒரு நாடு. ஒரு மொழி என்றால் இரு நாடு என்றார்.

அவர் கூறிய அக்கருத்தை வேதவாக்காகத் தமிழ் மக்கள் கருதினர். ஆனால் அதே கொல்வின் ஆர் டி சில்வா 1972இல் அரசியலமைப்பைத் தயாரிக்கும்போது தமிழினத்தை ஒரு பொருளாகக் கருதியிருக்கவில்லை.

இதுதான் நிலைமை ஆகையால் யார் சரி, தத்தம் சொந்தக் கோபதாபங்களை முன்னிறுத்தி அவர் சரி இவர் பிழை என்று கூறுவதைத் தவிர்ப்பதே நல்லது.

ஏனெனில் நோக்கர்களான மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்கத் தயாராக உள்ளனர்.

அந்தவகையில் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தொடர்பில் மிகத் தெளிவாக இருக்கின்றனர். சந்தர்ப்பம் வரும்போது தமது தீர்ப்பை அவர்கள் மிகச் செம்மையாக வழங்குவார்கள்.

# அமெ.செனட் உறுப்பினர் ஜனாதிபதிக்குக் கடிதம்

## உறவுகள் பாதிக்கப்படலாம் என எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதமரை பதவி நீக்குவது, பாராளுமன்றத்தை இடைநிறுத்துவது தேர்தலை நடத்த முயல்வது மற்றும் மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் வாக்களிப்பை நிராகரிப்பது போன்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகள் அமெரிக்கா-இலங்கை மத்தியிலான உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வலுப்படுத்துவதற்குத் தடையாக அமையலாம் என அமெரிக்க செனட் உறுப்பினர் கிறிஸ்வன் ஹொலன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு ஜனநாயக நாடுகளிற்கும் இடையில் நட்புறவை வலுப்படுத்துவதற்கு கடினமாக பாடுபட்ட நண்பரிற்கு இந்த கடிதத்தை எழுதுகின்றேன் என ஜனநாயக கட்சியின் செனட் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்த உணர்வின் அடிப்படையில் பிரதமரை பதவியிலிருந்து நீக்கியமை மற்றும் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரு நம்பிக்கையில்லா தீர்மானங்களை நிராகரித்தமை குறித்து எனது ஆழ்ந்த கரிசனையை வெளியிடுகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசமைப்பின் அடிப்படையிலும் சட்டத்தின் ஆட்சியை மதித்தும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அமெரிக்க செனட் உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீங்கள் நல்லிணக்கம் ஜனநாயகச் சீர்திருத்தம் குறித்து வாக்குறுதி வழங்கிய 2015 தேர்தலிற்கு பின்னர் அமெரிக்க-இலங்கை உறவுகள் வளர்ச்சியடைந்துள்ளன என தெரிவித்துள்ள செனட்டர் 2015ற்கு பின்னர் அமெரிக்கா பொருளாதார மற்றும் பாதுகாப்பு உதவிகள் மூலம் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கடந்த சில வாரங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் இலங்கையில் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன என கிறிஸ்வன் ஹொலன் தெரிவித்துள்ளார்.

பிரதமரைப் பதவி நீக்குவது, பாராளுமன்றத்தை இடைநிறுத்துவது தேர்தலை நடத்த முயல்வது மற்றும் மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் வாக்களிப்பை நிராகரிப்பது போன்ற உங்கள் நடவடிக்கைகள் இரு நாடுகள் மத்தியிலான உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வலுப்படுத்துவதற்குத் தடையாக அமையலாம் எனவும் அமெரிக்க செனட் உறுப்பினர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசமைப்பு, ஜனநாயக வழிமுறைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் அடிப்படையில் இந்த நெருக்கடி நிலைக்குத் தீர்வை காணுமாறும் அமெரிக்க செனட் உறுப்பினர் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். (இ-7)

## மரநடுகைத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நோர்வே அரசின் நிதியுதவியுடன் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் உதவித் திட்டத்தின் கீழ் பயன்தரு மரங்களை அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நடுகை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கலப்பினத் தென்னை, செவ்விளநீர், ஒட்டுப்பலா, றொம், ஈ.ஜேசி மா, மாதுளை, கொய்யா போன்ற மேலும் பல மரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் மயிலிட்டி வடக்கு, தையிட்டி கிழக்கு, தையிட்டி வடக்கு, தையிட்டி தெற்கு மற்றும் வறுத்தலைவிளான் ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இன்று தையிட்டி தெற்கு பலநோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

பலாலி கிழக்கு மற்றும் பலாலி வடக்கு ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு எதிர்வரும் 26ஆம் திகதி பலாலி கிழக்கு பலநோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கப்படும். (இ)

# மனவளக்கலைப் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனவளக் கலை அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக் கோவிலில் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை எளியமுறை உடற் பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### யாதொன்றுக்கும் காரண விளக்கம் (Rational Mind) கேட்கும் மனதிற்கு அப்பால்

காரண விளக்கம் கேட்டு அச்செயல்களில் மாத்திரமே நங்கள ஈடுபடுமபோது வாழகைை ஒரு சுமையாகிறது. ஆனால் நீங்கள் வெற்றி பெறுவது அல்லது தோல்வி யடைவது எனற எணண மிலலாது விளையாடுகிறாகள என்றால் எக்காரியத்தைச் செய்யும் போதும் அதன் நோக்கம் என எதனையும் அதனோடு தொடர்பு செய்யாது செய்வீர்களேயானால்-காரண விளக்கம் கேட்காது செயற்படுவீர்களேயானால் -அது தான் சுதந்திரம் -நடனத்தைப் போல.

காரணவிளக்கம் கேட்கும் மனதிலிருந்து வெளியே வாருங்கள் நீங்கள் அளவிடற்கரிய ஆழமான பெரும் சுதந்திரத்தைக் காண்பீர்கள்.நீங்கள் (Reality) உண்மையோடு நேருக்கு நேராக வரக்கூடும். உண்மையானதும் தர்க்கம் செய்யும் மற்றும் காரண விளக்கம் கேட்கும் மனதிற்கும் மேலானது.காரண விளக்கம் கேட்கும் மனதைக் கடந்து வராதவரை ஆக்கபூர்வ திறனையும் எல்லையற்ற இறையையும் நீங்கள் நெருங்க முடியாது.

ஆனால் நினைவுகொள்: சுதந்திரம் வேண்டுமென்பதற்காக காரணவிளக்கம் கேட்காது செயற்படுவாயானால் நீ ஏற்கனவே ஒரு நோக்கத்தைக் கொண்டிருக்கிறாய்.அது ஒரு போதும் காரண விளக்கம் கேட்காது செயற்படுவதாகாது.இந்த வார அறிவுக்குறிப்பு ஏற்கனவே அதன் நோக்கத்தை இழந்து விட்டது!

காரண விளக்கம் கேட்கும் மனதின் தடையை உடைத்தெறியுங்கள் உங்களுக்கு சுதந்திரத்தைக் காணுங்கள்.

# எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழில் விழிப்புணர்வு நடைபவனி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மாபெரும் விழிப் புணர்வு நடைபவனி ஒன்று நாளை சனிக்கிழமை யாழ் நகரில் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண நகர் மைய றோட்டறக்ட் கழகம், நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகம், எஸ்.எல்.ஆர்.சி ஆகியன இணைந்து நடத்தும இந்த விழிப்புணர்வு நடைபவனியானது நாளை காலை 7.15க்கு யாழ்.போதனா வைத்தியசாலை முன்றலில் இருந்து ஆரம்பித்து வைத்தியசாலை வீதி ஊடாக சென்று கஸ்தூரியார் வீதி வழியே ஸ்ரான்லி வீதிக்கு சென்று அங்கிருந்து ஆரியகுளம் சந்தியை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாக வேம்படிச் சந்தியை அடைந்து அங்கிருந்து வைத்தியசாலை வீதி நோக்கி சென்று தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நிறைவடையவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். இந்த பேரணியில் பொது மக்களை கலந்து கொள்ளு மாறும் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன் ஆறுகளுடன் ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துக்கள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

*-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)*

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** குளப்பிட்டியிலிருந்து ஆனைக் கோட்டைவரை, மூத்த விநாயகர் கோவில் பிரதேசம், சென்பீற்றஸ் தேவாலயம், நவாலி, வேலக்கை பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** வற்றாப்பளை, நாவற்காடு, கேப்பாப்பிலவு, தேறாங்கண்டல், ஆலங்குளம், முல்லைதீவு விமானப்படை-I மற்றும் II, 59ஆவது படைப்பிரிவு **(14ESR- 01** மற்றும் **14ESR-02), SFHQ** வற்றாப்பளை, 12 **VIR** இராணுவ முகாம், 16 **ESR** இராணுவ முகாம், 65 **Infantry Army Camp, 22 SLLI Army Camp** ஆகிய இடங்களிலும **மன்னார் பிரதேசத்தில** வங்காலை, வங்காலை, வங்காலை இராணுவ முகாம், நீர்ப்பாசன சபை வங்காலை, நானாட்டான், மாவிலங்கேணி, அளவக்கை செம்மண்தீவு, எருவிட்டான், செம்மண்தீவு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (9)

## ஆப்கான் கிரிக்கெட் வீரர்களுக்கு சென்னை மைதானத்தில் பயிற்சி




தங்கள் நாட்டில் வசதிகள் இல்லாத காரணத்தால் இந்தியாவில், குறிப்பாகச் சென்னையில் தங்கி ஆப்கானிஸ்தான் நாட்டு கிரிக்கெட் வீரர்கள் பயிற்சி எடுத்து வருகிறார்கள். ஆப்கானிஸ்தான் அணி அடுத்த மாதம் இலங்கை சென்று கிரிக்கெட் ஆட உள்ளது. அதற்கு முன்னதாக நீண்ட கால பயிற்சி மேற்கொள்ள முடிவு செய்தது அந்த அணி. இதற்காக சென்னையில் உள்ள "ஸ்ரீ ராமச்சந்திரா சென்டர் ஃபார் ஸ்போர்ட்ஸ் சயின்ஸ்" என்ற விளையாட்டு பயிற்சி மையத்தை தேர்வு செய்துள்ளது. தற்போது சுமார் 36 ஆப்கான் வீரர்கள் இங்கே தங்கி பயிற்சி மேற்கொண்டுள்ளனர்.

ஆப்கான் அணியின் முக்கிய வீரர்கள் ரஷித் கான், முஜீபுர் ரஹ்மான் மற்றும் முஹம்மது சேஷாத் ஆகியோர் டுபாயில் நடைபெற்று வரும் டி10 லீக் என்ற 10 ஓவர் போட்டிகள் தொடரில் ஆடி வருகின்றனர்.

அந்தத் தொடர் முடிந்தவுடன் அந்த வீரர்களும் இந்த மையத்தில் இணைந்து பயிற்சி மேற்கொள்வார்கள் எனக் கூறப்படுகிறது. ஆப்கான் கிரிக்கெட் வாரியம் இந்த மையத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி ஆப்கான் வீரர்கள் இனி தொடர்ந்து இங்கே பயிற்சி மேற்கொள்ளவும் காயத்தில் இருந்து மீளவும் வருகை தருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# தேவையான நேரத்தில் தேவையில்லாத ஆட்டமிழப்பு

## தோல்வி குறித்து ஹோலி




ரிஷப் பண்ட்டின் ஆட்டமிழப்புத்தான் அவுஸ்திரேலியாவுடன் தோல்வியடைய காரணம் என இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த முதல் இருபது-20 போட்டியில், இந்திய அணி வெற்றிக்கு அருகில் வந்து தோல்வியுற்றது. கடைசிக் கட்டத்தில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த இந்திய வீரர் ரிஷப் பண்ட், 10 பந்தில் 18 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ரிவர்ஸ் ஸ்விப் ஆடி ஆட்டமிழந்தார். இதுவே இந்தியாவின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டதாக அணித்தலைவர் ஹோலி தெரிவித்துள்ளார். இதுகுறித்து மேலும் அவர் கூறுகையில்,

'இது மிகவும் நெருக்கமாக வந்து தோற்ற போட்டி. இழுபறியாகச் சென்ற இந்த ஆட்டம் ரசிகர்களுக்கும் வீரர்களுக்கும் மிகவும் சிறப்பாக இருந்திருக்கும். ரசிகர்கள் உற்சாகம் அடைந்திருப்பார்கள். நாங்கள் சிறப்பான வகையில் பட்டிங்கை தொடங்கினோம். ஆனால், மிடில் ஆர்டர் வீரர்கள் சொதப்பியதால் ரன் குவிப்பு ஸ்தம்பித்தது. இறுதியில் ரிஷப் பண்ட் மற்றும் தினேஷ் கார்த்திக் இருக்கும்போது, வெற்றி பெற முடியும் என்று நினைத்தோம்.

ஆனால் ரிஷப் பண்ட் ஆட்டமிழந்ததும் மீண்டும் பின்தங்கிவிட்டோம். தொடக்க வீரர்களில் தவான் மிகவும் வலுவான வீரர். இதுவரை இருபது-20இல் அவர் சதம் அடிக்கவில்லை. ஆனால், அவரது ஆட்டம் உண்மையிலேயே அணிக்கு பலன் தருவதாக இருக்கும்' எனத் தெரிவித்துள்ளார். (க)

## டோனி இருந்திருந்தால் வெற்றி கிடைத்திருக்கும் அவுஸ்திரேலியாவுடனான தோல்வி குறித்து ரசிகர்கள்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் டோனி இல்லாத காரணத்தினாலே இந்தியா தோல்வியடைந்துவிட்டதாக ரசிகர்கள் புலம்பி வருகின்றனர். அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, அங்கு மூன்று வித போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான முதல் தொடரான இருபது-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மழை குறுக்கிட்டதால், 17 ஓவரில் அவுஸ்திரேலியா அணி 158 ஓட்டங்கள் எடுத்தது.

அதன்பின் ஆடிய இந்திய அணி வெற்றிக்கு அருகில் சென்று தோல்வியைத் தழுவியது. இந்நிலையில் இப்போட்டியில் டோனி இல்லாதது தான் பிரச்சினை எனவும் அவர் மட்டும் இருந்திருந்தால் போட்டியின் முடிவு மாறியிருக்கும் என்று ரசிகர்கள் புலம்பி வருகின்றனர்.

இப்போட்டியில் இந்திய அணியின் பீல்டிங் அந்தளவிற்கு இல்லை. அதுமட்டுமின்றி ஹோலிக்கு பந்துவீச்சாளர்களை சரியாக பயன்படுத்தத் தெரியவில்லை. இதுவே டோனி உடன் இருந்தால் அவருக்கு ஆலோசனை வழங்கியிருப்பார். அவுஸ்திரேலியா அணியும் இந்தளவிற்கு ஓட்டங்கள் அடித்திருக்காது.

அதுமட்டுமின்றி போட்டியின் கடைசி ஓவரின் முதல் பந்தில் இரண்டு ஓட்டங்கள் ஓடி பாண்டியாவுக்கே மீண்டும் பட்டிங் ஸ்ட்ரைக்கை கொடுத்தார் தினேஷ் கார்த்திக். இதுவே டோனியாக இருந்திருந்தால் ஒரு ஓட்டம் மட்டுமே எடுத்து, அவர் ஸ்டிரைக் ஆடியிருப்பார். (க)

## 16 பந்துகளில் 74 ஓட்டங்கள் ருத்ரதாண்டவம் ஆடிய வீரர்



டுபாயில் நடைபெற்ற இருபது-10 போட்டி ஒன்றில், ஆப்கானிஸ்தான்வீரர்ஷெஷாத் 16 பந்துகளில் 74 ஓட்டங்கள் விளாசியுள்ளார்.

அணிக்கு தலா பத்து ஓவர்கள் கொண்ட இருபது-10 போட்டிகள், டுபாயில் கடந்த ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன. 8 அணிகள் பங்குபெறும் இந்த தொடரில், பல்வேறு வெளிநாட்டு வீரர்கள் கலந்து கொண்டு விளையாடுகின்றனர்.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான இருபது-10 கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதன் முதல் ஆட்டத்தில் ஷேன் வோட்சன் தலைமையிலான சிந்திஸ் அணியும், பிரெண்டன் மெக்கலம் தலைமையிலான ராஜ்புத்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜ்புத்ஸ் அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி துடுப்பாட்டத்தை தொடங்கிய சிந்திஸ் அணி, 10 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 94 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக அணித்தலைவர் வொட்சன் 20 பந்துகளில் 42 ஓட்டங்கள் குவித்தார்.

அதன் பின்னர் விளையாடிய ராஜ்புத்ஸ் அணியில் மெக்கலமும், ஷெஷாத்தும் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஷெஷாத் எதிரணியினர் பந்துவீச்சை நான்கு திசைகளுக்கும் அனுப்பினார்.

சிக்சரும் பவுண்டரியுமாக விளாசிய அவர் 12 பந்துகளில் அரைசதம் அடித்து மிரட்டினார். அதன் பின்னர் சரவெடியாய் வெடித்த ஷெஷாத் 16 பந்துகளில் 74 ஓட்டங்கள் குவித்தார். இதில் 8 சிக்சர்கள், 6 பவுண்டரிகள் அடங்கும்.

மறுமுனையில் இருந்த அணித்தலைவர் மெக்கலம் 8 பந்துகளில் 21 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் 4 ஓவர்களிலேயே 96 ஓட்டங்கள் எடுத்து, ராஜ்புத்ஸ் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (க)

## ஹோலியின் சாதனையை முறியடித்த அதிரடி வீரர் சிகர் தவான்



இருபது-20 போட்டிகளில் ஓர் ஆண்டில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் எனும் விராட் ஹோலியின் சாதனையை, நேற்று முன்தினப் போட்டியில் அரைசதம் விளாசியதன் மூலம் சிகர் தவான் முறியடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி, நேற்று முன்தினம் நடந்த முதல்இருபது-20 போட்டியில் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்திய அணி தரப்பில் தொடக்க வீரர் சிகர் தவான் அதிரடியாக 42 பந்துகளில் 76 ஓட்டங்கள் விளாசினார். இதன் மூலம், ஓர் ஆண்டில் இருபது-20 போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற ஹோலியின் சாதனையை தவான் முறியடித்துள்ளார்.

தற்போது சிகர் தவான் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 648 ஓட்டங்கள் குவித்துள்ளார். அவருக்கு அடுத்தபடியாக பாகிஸ்தான் வீரர் பஹர் ஜமான் (576 ஓட்டங்கள்), இந்திய வீரர் ரோஹித் ஷர்மா (567 ஓட்டங்கள்), பாபர் ஆசம் (563 ஓட்டங்கள்) ஆகியோர் உள்ளனர். (க)

## கொள்ளைகளுடன்...

பல கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தன.

இது தொடர்பில் விசாரணையினை மேற்கொண்டு வந்த நெல்லியடி பொலிஸார் துன்னாலை ஆட்டிப்பட்டி கொலனியில் உள்ள சந்தேக நபர் ஒருவரை அடையாளம் கண்டு அவரை நேற்று வியாழக்கிழமை கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் வீட்டின் பின்புறம் நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்த 4 காப்பு, ஒரு சோடி தோடு, பெண்களின் மோதிரம் இரண்டு ஆகியன உள்ளிட்ட ஆறு பவுண் தங்க நகைகளை மீட்டுள்ளனர்.

இவருடன் மேலும் சிலர் ஈடுபட்டுள்ளதனால் அது தொடர்பாகவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (3.60)

## அரசியல் சர்ச்சை...

மன்ற உறுப்பினர்களும் உரிய சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டே சபைக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள், பார்வையாளர் என எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் கடந்த 16ஆம் திகதி ஏற்பட்ட மோதலையடுத்து கடந்த 19ஆம் திகதிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து 19ஆம் திகதி பாராளுமன்றம் கூடியபோது, வெறும் ஏழே நிமிடங்களில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறு இருக்கும்போது, நாளை கூடவுள்ள பாராளுமன்ற அமர்வின்போதும் ஆளும் எதிர்த்தரப்பினரிடையே சர்ச்சைகள் ஏற்படலாம் என கருதப்படுகின்றமையாலேயே தற்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று காலை ஒன்பது மணிக்கு இடம்பெறும் என சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் கலந்துரையாடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## பிரதமராக ரணில்...

வேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் "தற்போதைய இலங்கை அரசியல் நெருக்கடிக்கு தீர்வு ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக கொண்ட அரசாங்கத்தை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதுடன், பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்வதே என மாற்றுக் கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து கூறியுள்ளார்.

இந்நிலையில் இன்று 23ஆம் திகதி வரையில் இந்த விவாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## பொன்னாலை...

கொண்டிருந்த அர்ச்சகர், கடற்றொழிலுக்குச் சென்றுவிட்டு துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்தவரை முந்திச்செல்ல முற்பட்டுள்ளார்.

அப்போது துவிச்சக்கரவண்டியுடன் விபத்துக்குள்ளாகி யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்துடனும் அவரது மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

அர்ச்சகர் வீதியில் விழுந்து மோட்டார் சைக்கிளுடன் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். துவிச்சக்கரவண்டியில் சென்றவர் கடலுக்குள் பாய்ந்த நிலையில் அவரும் காயமடைந்தார்.

விபத்து இடம்பெற்றவேளை சாரதி பேருந்தை நிறுத்துவதற்காக முற்பட்டபோது பாலத்தில் எதிர்த்திசையில் தரித்து விடப்பட்டிருந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடனும் பேருந்து மோதியுள்ளது. இதனால் அந்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

விபத்தில், படுகாயமடைந்த வடலியடைப்பை சேர்ந்த அர்ச்சகர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

பொன்னாலையைச் சேர்ந்த ரகுநாதன் புஸ்பகாந்தன் (வயது-33) என்பவர் காயமடைந்தார். உயிரிழந்தவரின் சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவரும் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (3,9,17,246)

## வீதியால் சென்ற...

தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் கொடிகாமம் பகுதியில் வேலை முடித்துவிட்டு வடமராட்சியில் உள்ள குஞ்சர் கடையடி பகுதியில் உள்ள தனது வீட்டினை நோக்கி வந்து கொண்டிருந்தபோது வரணி பகுதியில் உள்ள பற்றை மறைவு ஒன்றில் மறைந்திருந்த வாள் வெட்டு குழுவினரில் ஒருவர் இரும்பு கம்பியால் முதலில் அடித்துள்ளார். இதனால் மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்த அவரை இன்னொருவன் வாளால் வெட்டியுள்ளான்.

தலைக்கவசத்தை கொடுத்து தடுக்க முற்பட்ட போது வாள்வெட்டு காலிலும் நெஞ்சு பகுதியிலும் வெட்டு ஏற்பட்டு படுகாயமடைந்த நிலையில் வரணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு தொடர்ந்தும் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகச்சை பெற்று வருகின்றார்.(3.60)

## த.தே.கூட்டமைப்பு...

றார்கள்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவளிப்பதெல்லாம் அப்பாற்பட்ட விடயமாகும்.

அவர்களுக்கு எமக்கு எதிராக பிரேரணையொன்றை நிறைவேற்றிக் கொள்ளத்தான் 122 உறுப்பினர்களின் ஆதரவு இருக்கின்றதே ஒழிய, ஸ்திரமான கூட்டணியொன்றை அமைக்க அல்ல. அத்தோடு அவர்கள் கூட்டணிக் கட்சியல்ல.

ஆனால், நாம் தனியான கூட்டணி எனும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியை விட பலமான நிலையிலேயே இருக்கிறோம். இதன் காரணத்தினால்தான் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு நாம் 7 உறுப்பினர்களின் பெயரைப் பரிந்துரைத்துள்ளோம் என கூறினார். (3)

## சபை கலைப்பை...

தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெளிவூட்டினார்.

அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்ததாவது,

அரசாங்கத்தைக் கலைத்து தேர்தலை நடத்தும் எண்ணத்தைக் கைவிடுமாறு நாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோருகின்றோம். 123 பேர் எம்முடன் இணைய வந்தனர்.

அரசாங்கம் கலைக்கப்பட்டபோது உறுப்பினர்கள் தப்பி ஓடினர். பாராளுமன்றத் தேர்தலை 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் நட்த்துவோம். தேர்தலுக்



கார்த்திகைத் தீப நிகழ்வு நேற்றைய தினம் வீடுகளிலும் ஆலயங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### பேஸ்புக்கால் வந்த வினை

## தொலைபேசியை இழந்த இளைஞன்

(கரணவாய்)

பேஸ்புக் நண்பனைச் சந்திக்க வந்த இளைஞர் ஒருவர் கைத்தொலைபேசியை அவரிடமே பறிகொடுத்த சம்பவம் வடமராட்சி பகுதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

காரைநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வடமராட்சி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருடன் பேஸ்புக்கில் நண்பராக இருந்துள்ளனர்.

இந்நிலையில் காரைநகரைச் சேர்ந்த இளைஞர் வடமராட்சி இளைஞரான நண்பனை சந்திப்பதற்காக நேற்று வடமராட்சிக்கு சென்றுள்ளார்.

அங்கு முள்ளிப்பகுதிக்கு வருமாறு கூறியபோது அங்கு சென்ற காரைநகரை சேர்ந்த இளைஞரிடம் இருந்த தொலைபேசியினை பார்ப்பது போல் பாசாங்கு செய்துவிட்டு தொலைபேசியுடன் வடமராட்சி இளைஞர் தலைதெறிக்க ஓடித் தப்பியுள்ளதாக அறிய முடிகிறது. (3.60)

# கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட ஜே.வி.பி விருப்பம்

## அநுர திசநாயக்க தெரிவிப்பு

ஜேவிபியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒடுக்குமுறை அரசாங்கங்களால் பாதிக்கப்பட்ட தரப்பினரை தெற்கிலும் வடக்கிலும் பிரதிநிதித்துவம் செய்கின்றன எனத் தெரிவித்துள்ள ஜேவிபியின் தலைவர் அநுர குமார திசநாயக்க ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக இணைந்து போராட வேண்டிய கடமை எங்களுக்குள்ளது என குறிப்பிட்டுள்ளார்

இந்து நாளிதழிற்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இரு கட்சிகளும் கொள்கையின் அடிப்படையில் பணியாற்றுகின்றன எனவும் தெரிவித்துள்ள அநுரகுமார திசநாயக்க அவ்வாறான அணுகுமுறையை கொண்டுள்ள கட்சிகள் இணைந்து பணியாற்ற முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சில விடயங்கள் தொடர்பில் எங்கள் மத்தியில் கருத்துவேறுபாடுகள் உள்ளபோதிலும் எதிர்காலத்தில் நாங்கள் இணைந்து பணியாற்ற முடியும் என குறிப்பிட்டுள்ள ஜேவிபி தலைவர் ஜேவிபியிடம் இரகசிய நிகழ்ச்சி நிரல் இல்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் அவ்வாறான இரகசிய நிகழ்ச்சி நிரல் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வெளிப்படைத்தன்மை காணப்படுவதால் ஒருவருக்கு மற்றையவரின் நிலைப்பாடு தெரியும் என்பதால் நாங்கள் சிறப்பாக இணைந்து செயற்பட முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியும் மகிந்த ராஜபக்ஷ தரப்பினரும் சர்வதேச சமூகத்திற்கு காண்பிப்பதற்காகவும் தங்கள் பலத்தை காண்பிப்பதற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பயன்படுத்தியுள்ளனர் என அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

இரு கட்சிகளின் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ள ஜேவிபி தலைவர், அவர்கள் தங்கள் நலனிறகாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்தினார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (3)

## ஜனாதிபதி கொலை...

நாட்களில் வெளியிடப்பட உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சரவை பேச்சாளரான மகிந்த சமரசிங்க மற்றும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் மேற்கண்ட தகவலை வெளியிட்டனர். (3)

காக ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானியை 7ஆம் திகதிக்கு பின்னர் இரத்து செய்வதில் சிக்கலொன்று காணப்படலாம். எனினும், தீர்வை வழங்க முன்னரும், அந்த வர்த்தமானியை இரத்து செய்து, தேர்தலை இரத்து செய்வதற்கு ஜனாதிபதிக்கு பூரண அதிகாரமுள்ளது. (3)

## எதிர்த்தரப்பிலிருந்தும் அரசுக்கு ஆதரவு

### அமைச்சர் தயாசிறி

புதிய அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கான பெரும்பான்மையில்லாத ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியின் அதிகாரங்களை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் பிரேரணையொன்றை நாடாளுமன்றுக்குக் கொண்டுவர எத்தணிப்பதாக அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால், ஜனாதிபதியின் அதிகாரத்தை சவாலுக்கு உட்படுத்தும் அதிகாரம் பாராளுமன்றுக்கு இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவ்ர் இதனை குறிப்பிட்டார்.

எதிர்த்தரப்பிலிருந்து சிலர் இன்னும் அரசாங்கத் தரப்புக்கு ஆதரவளிக்கவுள்ளமையால், இதனை நாம் நிறைவேற்றுவோம் என்று நம்புகிறோம். இது தோற்கடிக்கப்பட்டாலும் அரசாங்கம் ஒருபோதும் கலையாது" எனத் தெரிவித்தார். (3)


**கொவிசெத**

திகதி 2018.11.22

சீட்டிழுப்பு இலக்கம் 1951

ஆங்கில எழுத்து: W

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 01 54 56 72

தேசிய லொத்தர் சபை

**வாசனா சம்பத**

சீட்டிழுப்பு இலக்கம் 1519 திகதி 2018/11/22

B Q H

வெற்றி இலக்கங்கள்: 17 17 55 66

போனஸ் இலக்கம்: 21

தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**

திகதி 2018/11/22

சீட்டிழுப்பு இலக்கம் 3795

ஆங்கில எழுத்து: C

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 6 4 5 2 0

தேசிய லொத்தர் சபை

**நீரோகா**

திகதி 2018/11/22

சீட்டிழுப்பு இலக்கம் 476

லக்கினம்: விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள்: 14 16 30 32

போனஸ் இலக்கம்: 42

தேசிய லொத்தர் சபை

## வேலையாள் தேவை

மின்னியல் பொருட்கள் விற்பனை நிலையத்துக்கு வேலையாள் தேவை.

- ஆண்
- 25 வயதுக்கு உட்பட்டவர்கள்

(6534)

**0755904041**

## பொலிஸ் மற்றும்...

ர்பாக காயமடைந்த கடற்படை சிப்பாய் யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

பின்னர் நேற்று இரவு யாழ் நகர்ப்பகுதியில் நடமாடிய குறித்த பிக்கு அப்பகுதியில் சென்ற இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருடைய வாகனத்தின் மீது கல்லால் எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளார். மேற்குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த பிக்குவை கைது செய்துள்ளனர். (3-9)

## புதிய நியமனங்க...

ஜனாதிபதி செயலகம் நேற்று வியாழக்கிழமை விடுத்துள்ள விசேட சுற்றறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அரச திணைக்களங்கள் உள்ளிட்ட அரசாங்க நிறுவனங்களில் தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள் சபைகளில் வெற்றிடங்கள் காணப்பட்டால் அதற்காக அமைச்சின் மேலதிக செயலர் அந்தஸ்தில் உள்ள ஒருவர் அல்லது ஓய்வுபெற்ற தகைமை உள்ள அரச அதிகாரி ஒருவர் அல்லது சிரேஷ்ட அதிகாரி ஒருவர் அரசியல் பின்புலம் எதுவும் இல்லாத வகையில் நியமிக்கப்பட வேண்டும் என அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதமர், அமைச்சரவை, பொதுநிர்வாக அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (3)

## தெரிவுக்குழுவுக்...

உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிந்துள்ளது

12 பேர் அங்கத்துவம் வகிக்கக்கூடிய தெரிவுக் குழுவில் ஏற்கெனவே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஏழு உறுப்பினர்களின் பெயர் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் விஜித ஹேரத் மற்றும் நளிந்த திசாநாயக்க ஆகியோரின் பெயர்களும் முன்மொழியப்பட்டது.

இந்நிலையில் பெரும்பான்மை இல்லாத ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அதிக உறுப்பினர்களுக்கான இடம் வழங்கக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## மோட்டார் சைக்கி...

குறித்த இளைஞர் தனது நண்பருடன் கடந்த 18 ஆம் திகதி கொத்துரொட்டி சாப்பிடுவதற்காக பளையில் உள்ள கடை ஒன்றுக்கு சென்றுள்ளார். பின்னர் உணவை உண்டு விட்டு ஏ9 வீதியால் சென்றுள்ளனர்

அப்போது தர்மகேணி சந்தியில் மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. 70 மீற்றர் தூரத்துக்கு தரையில் மோட்டார் சைக்கிள் இழுத்து சென்றதில் பின்னால் இருந்த குறித்த நபர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

உடனடியாக பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, யாழ் போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நபர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (3-9)

## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
### ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில்,
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்...
(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்)
(திங்கள், செவ்வாய், - வவுனியா) (C-4491)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

(C-4468)

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
1 Kg க்கான கட்டணம்

UK - 550/=,
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 950/=

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528

### திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex SKYNET
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார்.
3-5 Working Days

## பணியாளர் தேவை

முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

- சிற்றூழியர் (பெண்)
- வகுப்பு மேற்பார்வையாளர் (பெண்)
- கணனி பதிவாளர் (பெண்)

இன்று 23.11.2018 வெள்ளி மாலை 3.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு நேரில் சமுகமளிக்கவும். New Science World
Brown Road, Navalar Road Junction, Jaffna.
T.P: 077 336 4055, 021 222 6690
(C-4490)

நவம்பர் 24, 25, 26 ஆம் திகதிகளில்... 8.30 a.m - 1.30 p.m

## 2018 O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

பாடம் வரலாறு
வளவாளர் R.S.சந்திரன்

குறிப்பு :
- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
- எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய கையேடு வழங்கப்படும்.
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையில் குறித்தல்.
- முன்கூட்டியே பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும். (சி-4489)

### றோயல் அக்கடமி

தொடர்புகளுக்கு 077 664 9134
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
கட்டணம் ரூபா 600

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு

(C-4462)



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

Architectural CAD Centre [Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
2D-Drawing 3D-Modeling

## Auto CAD

University of Peratheniya.
University of Moratuwa.
Open University of Sri Lanka.
University of Colombo.

Link:
077-5116320
071-8617972
[Civil & Mechanical]

## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

**நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய**

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)

**கிளினிக் நடைபெறும் திகதி:**
யாழ்ப்பாணத்தில் 24.11.2018 நாளைய தினம்
பரந்தனில் 01.12.2018

(C-4487)

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

**I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை**

இல.101, பிரதான வீதி, (உ-ம் குறுக்குத் தெரு சந்தியில்) யாழ்ப்பாணம்.
பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்

தொடர்பு: 0774441082, 0774405969

## பிரதேச செய்தியாளர்
# பதவிக்கான விண்ணப்பம்

வலம்புரி நாளிதழின் பிரதேச செய்தியாளர்களாகக் கடமையாற்ற விரும்புகின்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது

முழுப்பெயர், பிறந்த திகதி, நிரந்தர முகவரி, தபால் முகவரி, கல்வித் தகைமை, தொழில் (இருப்பின்) தே.அ.அ.இலக்கம், மின்னஞ்சல் முகவரி (இருப்பின்), தொலைபேசி இலக்கம் என்பன உள்ளடங்கலாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்



பொதுமுகாமையாளர்
வலம்புரி

# BA முதலாம் ஆண்டு 2018
## பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் 2018-ம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lல் கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியும் பொது அறிவில் 30 மார்க்ஸ் பெற்றிருந்தால் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆகும்.
- A/L 2017ம் இதற்கு முன்னர் பரீட்சை எழுதி மேற்கூறப்பட்ட தகைமைகளில் உள்ளவராயினும் விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு: போட்டிப் பரீட்சை மூலமே பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.
- பதிவுகள் முடிவுத் திகதி 15.12.2018
- போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டல் விரிவுரைகள் நடைபெறுகின்றன.

IIம் பிரிவு ஆரம்பம் :- நாளை (24.11.2018) காலை 8 மணி

விபரங்களுக்கு: S.அருள்நங்கை (நிர்வாகி)

தொடர்புகளுக்கு:
021 222 8148,
077 846 9721

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-4480)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.